AR
809

# தமிழ் இலக்கணம்

(மூன்றாண்டு இளங்கலை வகுப்பிற்கு)

டாக்டர் மா. இராசமாணிக்கனுர்,
M.A., L.T., M.O.L., Ph.D.

நேஷனல் பப்ளிஷிங் கம்பெனி
6, கொண்டி செட்டித் தெரு, சென்னை–1

# தமிழ் இலக்கணம்

(மூன்றாம் இளங்கலை வகுப்பிற்கு)

ஆசிரியர் :
டாக்டர் மா. இராசமாணிக்கனார்,
M.A., L.T., M.O.L., Ph.D.

நேஷனல் பப்ளிஷிங் கம்பெனி
6, கொண்டி செட்டித் தெரு, சென்னை-1

1967

*Copyright*

First Impression, 1957
Second Impression, 1958
Third Impression, 1960
Fourth Impression, 1967

ரூ. 1·50

Kabeer Printing Works, Madras (769)

## முன்னுரை

இளங்கலை (B.A.) வகுப்பு மாணவர்க்குக் கல்லூரிகளில் இதுகாறும் தமிழ் இலக்கணம் குறிப்பிடப்பெற்ற பாடத் திட்ட மொன்றை அடிப்படையாகக் கொண்டு கற்பிக்கப்படவில்லை. ஆயின் மூன்றாண்டு இளங்கலை வகுப்பு ஏற்பட்டுள்ள இந்த ஆண்டு, குறிப்பிடப்பெற்ற பாடத் திட்டத்தின்படி, வாரத்தில் ஒரு மணி நேரம் இலக்கணம் கற்பித்தல் வேண்டும் என்பது நடைமுறைக்கு வந்துள்ளது. சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்க் குழுவினர் இவ்விலக்கண பாடத் திட்டத்தைத் தயாரித்துள்ளனர்.

இப்பாடத் திட்டப்படி அமைந்த இலக்கணத்தை மாணவ வர் அறிந்து பயன்பெற வேண்டுமாயின், அவர்க்கென ஓர் இலக்கண நூல் இருத்தல் வேண்டும். ஆசிரியர் பாடஞ் சொல் லவும், பயிற்சிகள் தரவும் அந்நூல் துணை புரியும். இந்நன் னோக்கங்கொண்டே இவ்விலக்கண நூல் எழுதப்பெற்றது.

கல்லூரிகளில் தமிழ் கற்பிக்கும் பெருமக்கள் இந்நூலினை மனமுவந்து வரவேற்பர் என்று நம்புகிறேன்.

மா. இராசமாணிக்கனார்

# உள்ளுறை


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| I. | எழுத்து | | |
| 1. | தமிழ் எழுத்துக்கள் | ... | 1 |
| 2. | ஒலி வேறுபாடும், பொருள் வேறுபாடும் | ... | 2 |
| | (1) ர, ற | ... | 2 |
| | (2) ந, ன, ண | ... | 3 |
| | (3) ல, ள, ழ | ... | 4 |
| | (4) க்ஷ, ட்ச | ... | 5 |
| II. | சொல் | | |
| 1. | திணை | ... | 7 |
| 2. | பால் | ... | 8 |
| 3. | எண் | ... | 8 |
| 4. | இடம் | ... | 8 |
| 5. | வேற்றுமை | ... | 9 |
| 6. | ஆகுபெயர் | ... | 11 |
| 7. | தொழிற் பெயர் | ... | 11 |
| 8. | வினைமுற்று முதலியன | ... | 12 |
| 9. | மூன்று காலங்கள் | ... | 14 |
| 10. | வினையாலணையும் பெயர் | ... | 16 |
| 11. | ஐம்பாற் பெயர் விகுதிகள் | ... | 18 |
| 12. | ஐம்பால் வினைமுற்றுக்கள் | ... | 19 |
| 13. | பகுபத உறுப்புக்கள் | ... | 19 |
| 14. | முற்றெச்சம் | ... | 20 |
| 15. | பால் பகா அஃறிணைப் பெயர் | ... | 21 |
| 16. | செய்வினை, செயப்பாட்டுவினை | ... | 22 |
| 17. | ஏவல், வியங்கோள் | ... | 22 |
| 18. | வடசொல், திசைச்சொல் | ... | 24 |
| 19. | இடைச்சொல் | ... | 25 |
| 20. | உரிச்சொல் | ... | 26 |

| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| III. | சொற்றொடர் | | |
| 1. | வாக்கியத்தின் உறுப்புக்கள் | ... | 28 |
| 2. | சொல் இலக்கணம் கூறுதல் | ... | 29 |
| 3. | நிறுத்தற் குறிகள் | ... | 30 |
| 4. | தொகை நிலைத்தொடர், தொகா நிலைத் தொடர் | ... | 34 |
| 5. | இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர் | ... | 37 |
| 6. | வழு அமைதிகள் | ... | 38 |
| 7. | தமிழ் மரபு | ... | 42 |
| IV. | புணர்ச்சி | | |
| 1. | இயல்பு புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி | ... | 44 |
| 2. | உடம்படுமெய் | ... | 45 |
| 3. | வேற்றுமைப்புணர்ச்சி, அல்வழிப்புணர்ச்சி | ... | 46 |
| 4. | ண, ன ஈற்றுப் புணர்ச்சி | ... | 47 |
| 5. | ல, ள ஈற்றுப் புணர்ச்சி | ... | 49 |
| 6. | குற்றியலுகரப் புணர்ச்சி | ... | 51 |
| 7. | வல்லெழுத்து மிகும் இடங்கள் | ... | 54 |
| 8. | வல்லெழுத்து மிகா இடங்கள் | ... | 57 |
| 9. | செய்யுள் விகாரங்கள் | ... | 59 |
| V. | பிழையும் திருத்தமும் | | |
| 1. | சொற் பிழைகளும் திருத்தமும் | ... | 61 |
| 2. | எழுத்துப் பிழைகளும் திருத்தமும் | ... | 63 |
| 3. | செய்தித் தாள்கள் | ... | 65 |
| 4. | பெயர்ப் பலகைகள் | ... | 66 |
| 5. | பிற பிழைகளும் திருத்தமும் | ... | 68 |
| | (1) ஓர், ஒரு | ... | 68 |
| | (2) அது, அஃது | ... | 68 |
| | (3) தான், தாம் | ... | 69 |
| | (4) அன்று, அல்ல, அல்லன் முதலியன | ... | 69 |
| | (5) வேண்டும் × வேண்டா | ... | 71 |





| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| VI. | பொருள் | | |
| 1. | அகப்பொருள் | ... | 73 |
| | (1) முதற்பொருள் | ... | 74 |
| | (2) கருப்பொருள் | ... | 75 |
| | (3) உரிப்பொருள் | ... | 79 |
| 2. | புறப்பொருள் | ... | 79 |
| 3. | திணை மயக்கம் | ... | 81 |
| VII. | யாப்பு | | |
| 1. | எழுத்து, அசை முதலியன | ... | 83 |
| 2. | எதுகைத் தொடை முதலியன | ... | 88 |
| 3. | வெண்பா | ... | 89 |
| 4. | ஆசிரியப்பா | ... | 90 |
| 5. | விருத்தம் | ... | 91 |
| VIII. | அணி | | |
| 1. | தன்மை அணி | ... | 93 |
| 2. | உவமை அணி | ... | 93 |
| 3. | உருவக அணி | ... | 94 |
| 4. | பின்வரு நிலையணி | ... | 94 |
| 5. | வேற்றுப்பொருள் வைப்பணி | ... | 95 |
| 6. | வேற்றுமையணி | ... | 95 |
| 7. | பிறிதுமொழிதலணி | ... | 96 |
| 8. | தற்குறிப்பேற்ற அணி | ... | 96 |
| 9. | சுவையணி (8 வகை) | ... | 97 |
| 10. | சிலேடையணி | ... | 100 |
| 11. | உள்ளுறை உவமை | ... | 101 |
| 12. | இறைச்சிப் பொருள் | ... | 102 |

# தமிழ் இலக்கணம்

## I. எழுத்து

### 1. தமிழ் எழுத்துக்கள்

1. **உயிரெழுத்து:** அ, ஆ—இவை வேறோர் எழுத்தின் உதவியில்லாமல் தாமே இயங்குகின்றன. நமது உயிர், மெய்யின் (உடம்பின்) உதவியில்லாமல் தானே இயங்குகின்றது. அதுபோலவே இயங்கும் அ, ஆ முதலிய பன்னிரண்டு எழுத்துக்களும் உயிரெழுத்துக்கள் எனப்படும்.

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ—உயிர் எழுத்துக்கள் 12.

2. **மெய்யெழுத்து:** க், ங்— 'இக்', 'இங்' என உச்சரிக்கப்படும். 'க்' என்னும் எழுத்தை உச்சரிக்க உயிரெழுத்தின் உதவி தேவைப்படுகிறது. நமது மெய் (உடம்பு) இயங்குவதற்கு உயிர் தேவைப்படுவது போல, 'க்' முதலிய எழுத்துக்களை உச்சரிக்க உயிர் எழுத்துக்கள் தேவைப்படுகின்றன. ஆதலால் 'க்' முதலிய பதினெட்டு எழுத்துக்களும் மெய்யெழுத்துக்கள் என்று சொல்லப்படும்.

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்—மெய்யெழுத்துக்கள் 18.

3. **உயிர்மெய் எழுத்து:** க என்னும் எழுத்தில் 'க்' என்னும் ஒலியும், 'அ' என்னும் ஒலியும் சேர்ந்திருக்கின்றன. அதாவது க (க்+அ)—'க்' என்னும் மெய்யும் 'அ' என்னும் உயிரும் கூடிப் பிறந்த எழுத்தாகிறது. இவ்வாறு பன்னிரண்டு உயிர் எழுத்துக்களும் பதினெட்டு மெய் எழுத்துக்களுடன் சேர்வதால் (18×12) 216 உயிர்மெய் எழுத்துக்கள் பிறக்கின்றன.

க, கா, கி, கீ, கு, கூ, கெ, கே, கை, கொ, கோ, கௌ—12; இவ்வாறு உண்டாகும் உயிர் மெய் எழுத்துக்கள் 216.

4. ஆய்த எழுத்து : ' ஃ '-இங்ஙனம் மூன்று புள்ளி வடிவமாக இருப்பது ஆய்த எழுத்து. இது அஃது இஃது எஃது என்றாற் போலச் சொல்லின் இடையில் வரும்.

| | | |
|---|---|---|
| (1) | உயிர் எழுத்துக்கள் | 12. |
| (2) | மெய் எழுத்துக்கள் | 18. |
| (3) | உயிர்மெய் எழுத்துக்கள் | 216. |
| (4) | ஆய்த எழுத்து | 1. |
| | தமிழ் எழுத்துக்கள் மொத்தம் | 247. |

5. (1) உயிரெழுத்துக்கள் பன்னிரண்டில் அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்தும் குறுகிய ஓசையுடையவை. ஆதலால் இவை குறில் எனப்படும்.

(2) ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் ஏழு எழுத்துக்களும் நீண்ட ஓசையுடையவை. ஆதலால் இவை நெடில் எனப்படும்.

6. பதினெட்டு மெய்யெழுத்துக்களுள்,

(1) க், ச், ட், த், ப், ற் என்னும் ஆறும் வலிய ஓசையுடையவை; ஆதலால் இவை வல்லினம் எனப்படும்.

(2) ங், ஞ், ண், ந், ம், ன் என்னும் ஆறு எழுத்துக்களும் மெலிந்த ஓசையுடையவை; அதனல் இவை மெல்லினம் எனப்படும்.

(3) ய், ர், ல், வ், ழ், ள் என்னும் ஆறும் இடைத்தர ஓசையுடையவை; ஆதலால் இவை இடையினம் எனப்படும்.

## 2. ஒலி வேறுபாடும் பொருள் வேறுபாடும்

### (1) ர, ற

1. அரம், மரம்—இவற்றிலுள்ள ரகரத்தை உச்சரியுங்கள். நாவின் நுனி மேல்வாயைத் தடவுதலால் இவ்வெழுத்துப் பிறக்கின்றது என அறியலாம்.

வரம், கரி, கரை, குரவர்—இவற்றை உச்சரித்துப் பாருங்கள்.



2. அறம் மறம்—இவற்றில் வந்துள்ள றகரத்தை உச்சரியுங்கள். நாவின் நுனி மேல்வாயை மிகப் பொருந்துதலால் ற பிறக்கின்றமையை அறியலாம். இவ்வாறு இவை (ர - ற) பிறக்கும் முயற்சியில் வேறுபடுதலால்தான் உச்சரிப்பிலும் இவை வேறுபடுகின்றன. இவை உச்சரிப்பில் வேறுபடுதல் போலவே பொருளிலும் வேறுபடும்.

| | ர | ற |
|---|---|---|
| 1. | அரம் - ஒரு கருவி | அறம் - தருமம் |
| 2. | மரம் - | மறம் - வீரம் |
| 3. | இரை - உணவு | இறை - தலைமை, வரி |
| 4. | கரி - யானை | கறி - பதார்த்தம் |
| 5. | கரை - அணை | கறை - அழுக்கு |
| 6. | திரை - அலை | திறை - கப்பம் |
| 7. | பரவை - கடல் | பறவை - பட்சி |
| 8. | மாரி - மழை | மாறி - வேறுபட்டு |
| 9. | விரல் - ஓர் உறுப்பு | விறல் - வலிமை, திறமை |

இவ்வாறு இவை உச்சரிப்பிலும் பொருளிலும் வேறுபடுதலை அறியாமல் பலர் இரண்டையும் ஒன்று போலவே பிழைபட உச்சரிக்கின்றனர். இப்பிழையை நீங்கள் செய்யலாகாது.

### (2) ந, ன, ண

1. நகம், நண்டு—இவற்றில் வந்துள்ள நகரத்தை உச்சரித்துப் பாருங்கள். நாவின் நுனி மேல்வாய்ப் பல்லின் அடியைப் பொருந்துதலால் இவ்வெழுத்துப் பிறக்கின்றது. கந்தன், பந்தம் என்று இதனையடுத்துப் பெரும்பாலும் 'த' வருதலாலும், மெய்யெழுத்துக்களின் வரிசையில் இந்நகரம் தகரத்தை அடுத்திருத்தலாலும் இது தந்நகரம் எனப்படும்.

2. கன்று, நன்று—இவற்றில் வந்துள்ள னகரத்தை உச்சரித்துப் பாருங்கள். நாவின் நுனி மேல்வாயை மிகப் பொருந்துதலால் இவ்வெழுத்துப் பிறக்கின்றது. மன்று, சென்று என இதனையடுத்துப் பெரும்பாலும் 'ற' வருதலாலும், மெய்யெழுத்துக்களின் இறுதியில் றகரத்தை அடுத்து இந்த னகரம் இருத்தலாலும் இது றன்னகரம் எனப்படும்.

3. பணம், மணல்—இவற்றில் வந்துள்ள ணகரத்தை உச்சரியுங்கள். நாவின் நுனி மேல்வாய் நுனியைச் சேர்தலால் இந்த ண பிறக்கின்றது. நண்டு, வண்டு, கண்டம் எனப் பெரும்பாலும் இதனை யடுத்து டகரம் வருதலாலும், மெய்யெழுத்துக்களின் வரிசையில் டகரத்தை அடுத்து இந்த ணகரம் அமைந்திருத்தலாலும் இது டண்ணகரம் எனப்படும்.

இவை மூன்றும் இங்ஙனம் பிறக்கும் முயற்சியில் வேறுபடுவதால், உச்சரிப்பிலும் பொருளிலும் வேறுபடும்.

| ந | ன | ண |
|---|---|---|
| நான் - பேசுவேன் | | நாண் - கயிறு |
| | ஆன் - பசு | ஆண் - ஆடவன் |
| | ஆனை - யானை | ஆணை - கட்டளை |
| | கனி - பழம் | கணி - சோதிடம் |
| | பனி - குளிர்ச்சி | பணி - வணங்கு |

இவை இவ்வாறு உச்சரிப்பிலும் பொருளிலும் வேறுபடுதலை அறியாமல் பலர் இம்மூன்றையும் ஒன்றுபோலவே பிழைபட உச்சரிக்கின்றனர். இப்பிழையை நீங்கள் செய்யலாகாது.

## (3) ல, ள, ழ

1. கலம், பலம்—இவற்றில் உள்ள லகரத்தை உச்சரித்துப் பாருங்கள். நாவின் ஓரம் மேல்வாய்ப் பல்லின் அடியைப் பொருந்துதலால் ல பிறக்கின்றது.

2. குளம், குள்ளன்—இவற்றில் உள்ள ளகரத்தை உச்சரித்துப் பாருங்கள். நாவின் ஓரம் மேல்வாயைத் தடித்துத் தடவுதலால் ள பிறக்கின்றது.

3. பழம், மழை—இவற்றில் உள்ள ழகரத்தை உச்சரித்துப் பாருங்கள். நாவின் நுனி மேல்வாயைச் சிறிது அழுத்தமாகத் தடவுதலால் ழ பிறக்கின்றது.

இவை மூன்றும் உச்சரிப்பில் வேறுபடுகின்றன அல்லவா? அவ்வாறே அவை பொருளிலும் வேறுபடுதலைக் காண்க:

| | ல | ள | ழ |
|---|---|---|---|
| 1. | அலை - அலைதல் | அளை - வளை | அழை - கூப்பிடு |
| 2. | கலை - ஆடை | களை - நீக்கு, களைப்பு | கழை - கரும்பு, மூங்கில் |



| | ல | ள | ழ |
|---|---|---|---|
| 3. | காலி - ஒன்றும் இல்லாதது | காளி - ஒரு பெண் தெய்வம் | காழி - ஓர் ஊர் (சீர்காழி) |
| 4. | தலை - உறுப்பு | தளை - கட்டு | தழை - செழி |
| 5. | வலி - வலிமை, நோதல் | வளி - காற்று | வழி - பாதை |
| 6. | விலை - விற்பனை | விளை - பயிராக்கு | விழை - விரும்பு |

## (4) க்ஷ, ட்ச

1. பக்ஷம், மீனாக்ஷி, அக்ஷய பாத்திரம்—இவற்றில் வந்துள்ள க்ஷ என்னும் எழுத்து வடமொழி எழுத்து. இதற்குப் பதிலாக ஏறத்தாழ இதே உச்சரிப்பையுடைய ட்ச என்னும் இரண்டு எழுத்துக்களைப் பயன்படுத்திப் பட்சம், மீனாட்சி, அட்சய பாத்திரம் என்பனபோல் எழுதுதல் தமிழர் வழக்கம். இவற்றுள் பட்சம், அட்சய பாத்திரம் என்பவற்றைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுவதில் தவறில்லை. ஏனெனில் இவற்றின் பொருள் வேறுபடவில்லை. மீனாக்ஷி என்பதற்கு மீன்போன்ற கண்ணையுடையவள் என்பது பொருள்; இதைத் தமிழில் மீனாட்சி என எழுதினால் மீன்+ஆட்சி எனப் பிரியும். அக்ஷி என்னும் வட சொல்லுக்குக் 'கண்ணையுடையவள்' என்பது பொருள்; ஆட்சி என்னும் சொல் ஊராட்சி, நகராட்சி என்பது போலக் காணப்படுகிறது. மீனாக்ஷி என்னும் வடசொல் தொடருக்குரிய பொருள், மீனாட்சி என்னும் தமிழ்த்தொடரில் பெறப்படவில்லை என்பது அறியற்பாலது. ஆதலால் பொருள் கெடாத வகையில் வட எழுத்துக்குச் சமமான தமிழ் எழுத்துக்களைப் பயன்படுத்துதல் பொருத்தமாகும். பொருள் கெட வருமாயின், அங்கு வட எழுத்துக்களைப் பயன்படுத்துவதே சாலச் சிறந்தது.

2. காட்சி—இது காண்+சி என்று பிரிக்கப்படும். இது தமிழ்ச்சொல். இதனைப் பலர் காக்ஷி எனத் தவறாக எழுதுகின்றனர். திரைப்பட விளம்பரங்களில் இத்தவற்றைப் பெரும்பாலும் காணலாம். இத்தகைய தவறுகள் வராமல் பார்த்துக் கொள்வதும் உங்கள் கடமையாகும்.

### பயிற்சி

1. கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய் எழுத்து, ஆய்த எழுத்துக்களைக் கூறுக :—

(1) வேடர் விலங்குகளை வேட்டை யாடுகின்றனர்.
(2) சோலையிலுள்ள மலர்கள் மணம் வீசுகின்றன.
(3) பாண்டியன் அறம் பிழையாது அரசாண்டான்.
(4) இஃது எனது புத்தகம்.

2. கீழ் வருவனவற்றிலுள்ள வல்லின, மெல்லின, இடையின மெய்களைச் சுட்டுக :—

(1) கக்கன் நமக்குத் தெரிந்தவர்.
(2) கன்று முட்டி நந்தன் விழுந்தான்.
(3) அவன் கட்சி கட்டிக்கொண்டு சண்டை செய்கிறான்.
(4) யாழ் ஓசை செவிக்கு இனியது.

3. பிழைகளைத் திருத்தி எழுதுக :—

(1) கடையில் அறம் விற்கப்படுகிறது.
(2) இது புளிய மறம்.
(3) இவன் சிரந்த மரவன்.
(4) கிளி ஒரு பரவை.
(5) வானத்தில் பிரைச் சந்திரன் தோன்றுகிரது.
(6) என் விறல் வீங்கி இருக்கிறது.

4. பிழைகளைத் திருத்தி எழுதுக :—

(1) கையிலிருந்து கறண்டி விழுன்தது.
(2) ஆவனி மாதத்தில் மளை பெய்தது.
(3) கந்தண் பன்தலில் கந்றினைக் கட்டினான்.
(4) கண்ணன் வென்னெய் வாங்கினான்.
(5) வன்டியிலிருந்து பன்து விழுந்தது.

5. கீழ் வருவனவற்றிலுள்ள பிழைகளைத் திருத்துக :—

(1) காளை வேலையில் கண்று பல்லத்தில் விலுந்தது.
(2) அவன் விலுந்து விலுந்து சிறித்தான்.



(3) பூமாலையின் விலை என்ன ?
(4) கிழி அளகான பரவை.
(5) ஆடு தலை மேய்கிறது.

6. கோடிட்ட இடங்களில் பொருத்தமான எழுத்துக்களை அமைத்துப் படிக்கவும் :—

(1) இவர் எ— தமைய—ர்.
(2) இப்பொ—து ம— பெய்கி—து.
(3) கத்தி ப—ப— என்று மி——கிறது.
(4) ம——ன் நாட்டை ஆ—கிறான்.

# II. சொல்

1. ஆ (பசு), வீடு, வண்டு—இங்ஙனம் ஓர் எழுத்துத் தனித்தோ, இரண்டு முதலிய எழுத்துக்கள் தொடர்ந்தோ ஒரு பொருளைத் தெரிவிப்பது **சொல்** எனப்படும்.

2. (1) ஆ, வீடு, வண்டு—இவற்றுள் ஒவ்வொன்றும் ஒன்றன் பெயரைக் குறிக்கும் சொல்லாதலால் **பெயர்ச்சொல்** எனப்படும்.

(2) கண்டான், கண்டு, கண்ட—இவ்வாறு ஒன்றன் வினையைக் குறிக்கும் சொல் **வினைச்சொல்** எனப்படும்.

## 1. திணை

உலகத்து உயிர்களுள் விலங்கு, பறவை, நீர்வாழ்வன, ஊர்வன என்னும் உயிர்களைவிட மனிதன் பேராற்றல் படைத்தவனாக இருக்கின்றான். எனவே, மனிதன் மற்ற உயிர்களைவிட மேலானவனாகின்றான். இவ்வாறே நம் கண்ணுக்குத் தெரியாத தேவரும் நரகரும் உயர்ந்தவர் என்று நூல்கள் கூறுகின்றன. ஆகவே மக்கள், தேவர், நரகர் என்னும் முத்திறத்தாரும் ஏனைய உயிர்களை நோக்க உயர் ஒழுக்கம் (உயர்திணை) உடையவர் என்றும், மற்ற உயிர்கள் உயர்வு அல்லாத ஒழுக்கம் (அல்+திணை) உடையன என்றும் நம் முன்னோர் பிரித்

துக் கூறினர். இப்பிரிப்பு இன்றளவும் இலக்கணத்தில் கூறப் படுகிறது.

(1) மக்கள், தேவர், நரகர்—உயர்திணை.

(2) பிற உயிர் உள்ளனவும் இல்லனவும்—அஃறிணை.

## 2. பால்

பால்—பிரிவு.

(1) கண்ணன், பாண்டியன், பையன்—ஆண்பால்.

(2) கண்ணகி, அரசி, பெண்—பெண்பால்.

(3) அரசர்கள், மக்கள், பெண்கள்—பலர்பால்.

இம்மூன்று பால்களும் உயர்திணையைச் சேர்ந்தவை.

(4) பசு, கிளி, பாம்பு, தவளை, மலை, மரம்—ஒன்றன் பால்.

(5) பசுக்கள், கிளிகள், பாம்புகள், தவளைகள், மலைகள், மரங்கள்—பலவின்பால். இவை இரண்டும் அஃறிணைக்கு உரியவை.

## 3. எண்

எண்—பொருள்களின் எண்ணிக்கை.

ஒன்றைக் குறிப்பது ஒருமை; ஒன்றுக்கு மேற்பட்டவற்றைக் குறிப்பது பன்மை.

(1) கந்தன், கற்பகம், மாடு—ஒருமை எண்.

(2) பெண்கள், பிள்ளைகள், மாடுகள்—பன்மை எண்.

(3) நான், நீ, அவன், அவள், அது—ஒருமை எண்.

(4) நாம், நீர், அவர்கள், அவை—பன்மை எண்.

## 4. இடம்

நான் நேற்று ஆசிரியரைப்பற்றிச் சொன்னபோது நீ மகிழ்ச்சி அடைந்தாய்.—இந்த வாக்கியத்தில்,

(1) நான் என்பது பேசுவோனைக் குறிக்கின்றது.

(2) நீ என்பது முன்னின்று கேட்பவனைக் குறிக்கின்றது.

(3) ஆசிரியர் என்பது பேசப்படுபவரைக் குறிக்கின்றது.



இம்மூவர் இடங்களும் முறையே (1) தன்மை இடம், (2) முன்னிலை இடம், (3) படர்க்கை இடம் என்று பெயர் பெறும்.

(1) நான்—தன்மையிடம்.

(2) நீ—முன்னிலையிடம்.

(3) ஆசிரியர்—படர்க்கையிடம்.

1. நான்—தன்மை ஒருமை.
   நாம், நாங்கள்—தன்மைப் பன்மை.
2. நீ—முன்னிலை ஒருமை.
   நீர், நீவிர் நீங்கள்—முன்னிலைப் பன்மை.
3. அவன், அவள், அது—படர்க்கை ஒருமை.
   அவர்கள், அவை—படர்க்கைப் பன்மை.

| தன்மை | முன்னிலை | படர்க்கை |
|---|---|---|
| (1) நான்<br>யான் } ஒருமை | நீ—ஒருமை | தான்—ஒருமை |
| (2) நாம்<br>யாம்<br>நாங்கள் } பன்மை | நீர்<br>நீவிர்<br>நீங்கள் } பன்மை | தாம்—பன்மை |

குறிப்பு: படர்க்கை ஒருமையாகிய தான் என்பது, புதுச்சேரிப் பகுதிகளில் இன்றும் வழக்கில் இருக்கிறது.

(1) நான் சொல்லுவது தனக்குத் தெரியும்.

(2) தான் சொன்னதைக் கேட்டீர்களா?

தான், தாம் என்னும் படர்க்கைப் பெயர்களுக்குப் பதிலாக அவன், அவள், அவர் என வழங்குதலே இன்றுள்ள பெரு வழக்காகும்.

## 5. வேற்றுமை

1. கண்ணன்—இஃது ஒரு பெயர்ச்சொல். இச்சொல் கண்ணனை (ஐ), கண்ணனால் (ஆல்), கண்ணனுக்கு (கு), கண்ணனில் (இல்), கண்ணனது (அது), கண்ணனிடம் (இடம்), கண்ணா! வருக—எனப் பலவாறு பொருளில் வேறு

பட்டு வருதலைக் காணலாம். இவ் வேறுபாடு வேற்றுமை எனப்படும். இவ்வேற்றுமைகளை உண்டாக்கும் ஐ முதலிய உருபுகள் வேற்றுமை உருபுகள் எனப்படும்.

2. வேற்றுமை எட்டு வகைப்படும்.

(2) கண்ணன் வந்தான்—இயல்பான பெயர்; முதல் வேற்றுமை.

(2) கண்ணனைக் கண்டேன்—இரண்டாம் வேற்றுமை. ஐ—இரண்டாம் வேற்றுமை உருபு.

(3) கண்ணனால் அழைக்கப்பட்டேன்—ஆல்
கண்ணனோடு சென்றேன் —ஓடு
கண்ணனுடன் வந்தேன் —உடன்
—மூன்றும் வேற்றுமை.

ஆல், ஒடு, உடன்—மூன்றும் வேற்றுமை உருபுகள்.

(4) கண்ணனுக்குத் திருமணம்—நான்காம் வேற்றுமை. கு—நான்காம் வேற்றுமை உருபு.

(5) கண்ணனில் கந்தன் பெரியவன்—இல்
கண்ணன் வீட்டினின்று சென்றான்—நின்று
கண்ணன் மரத்திலிருந்து இறங்கினான்—இருந்து—
ஐந்தாம் வேற்றுமை.

இல், நின்று, இருந்து—ஐந்தாம் வேற்றுமை உருபுகள்.

(6) இது கண்ணனது பை—அது
இவை கண்ணனுடைய பைகள்—உடைய—
ஆறும் வேற்றுமை.

அது, உடைய—ஆறும் வேற்றுமை உருபுகள்.

(7) பையில் பணம் இருக்கிறது.—இல்
கண்ணனிடம் கத்தி இருக்கிறது.—இடம்
வீட்டின்கண் விருந்தினர் இருக்கின்றனர்.—கண்

இல், இடம், கண்—ஏழாம் வேற்றுமை உறுபுகள்.

(8) பெயர் கூறி ஒருவனை அழைத்தலே எட்டாம் வேற்றுமை எனப்படும். அழைத்தல்—விளித்தல். இது விளி வேற்றுமை என்றும் சொல்லப்படும்.



| முதல் வேற்றுமை | விளி வேற்றுமை |
|---|---|
| 1. கண்ணன் | கண்ணா !—ஈறுகெட்டு ஈற்றயல் நீண்டது. |
| 2. மகன் | மகனே !—ஈற்றில் ஏகாரம் மிக்கது. |
| 3. மக்கள் | மக்காள்—ஈற்றயல் நீண்டது. |
| 4. முருகன் | முருக !—ஈறு கெட்டது. |
| 5. பிள்ளை | பிள்ளாய் !—ஈற்று 'ஐ'—'ஆய்' எனத் திரிந்தது. |

## 6. ஆகு பெயர்

1. மயில்—ஒரு பறவையின் பெயர்.

மயில் வந்தாள்—மயில் போன்ற (சாயலையுடைய) பெண் வந்தாள். இவ்வாறு ஒன்றன் பெயர் அதனோடு தொடர்புடைய வேறொரு பொருளுக்குத் தொன்றுதொட்டு ஆகி வரின், அஃது ஆகுபெயர் எனப்படும்.

2. அவன் சிறப்பை மதுரை பாராட்டுகிறது.—இங்கு 'மதுரை' என்னும் இடத்தின் பெயர் அவ்விடத்திலுள்ள மக்களுக்கு ஆகி வந்தது. எனவே, 'மதுரை' என்பது ஆகுபெயர்.

3. சித்திரை வந்தான்.—'சித்திரை' என்னும் மாதத்தின் பெயர் அம்மாதத்தில் பிறந்த ஒருவனுக்குப் பெயராகி வந்துள்ளது. எனவே, 'சித்திரை' என்பதும் ஆகுபெயர்.

4. வீட்டிற்கு வெள்ளை யடித்தான்.—'வெள்ளை' என்னும் நிறத்தின் பெயர் அந்நிறத்தையுடைய சுண்ணம்புக்கு ஆகி வந்தது. எனவே, 'வெள்ளை' என்பதும் ஆகுபெயர்.

5. ஒரு படி வாங்கினேன்.—'படி' என்னும் முகத்தலளவைப் பெயர், அந்த அளவுடைய ஒரு பொருளுக்கு ஆகி வந்தது. என்வே, 'படி' என்பதும் ஆகுபெயர்.

## 7. தொழிற் பெயர்

1. வா, போ, நில், செய்—என்றாற்போல வருபவை வினை செய்ய ஏவப் பயன்படும் சொற்களாகும். இவை வினைச்

சொற்கள் எனப்படும். இவை ஏவல் வினைமுற்றுக்கள் என்றும் சொல்லப்படும். இவற்றிலிருந்து,

(1) வந்தான், வருகிறான், வருகிறாள், வருவார் எனவும்,

(2) வந்து, போய், நின்று, செய்து எனவும்,

(3) வந்த, போன, நின்ற, செய்த எனவும்,

(4) வருதல், போதல், நிற்றல், செய்தல் எனவும்,

சொற்கள் பலவாறு வளர்ச்சியடையும்.

இவற்றுள் முதன் மூன்று வகைப்பட்டவையும் வினைச் சொற்களாகும். வருதல், போதல், நிற்றல், செய்தல் என்பன வருதலாகிய தொழில், போதலாகிய தொழில், நிற்றலாகிய தொழில், செய்தலாகிய தொழில் எனத் தொழிலுக்குப் பெயராகி வருதலின் தொழிற் பெயர்கள் எனப்படும்.

2. தொழிற் பெயர் விகுதிகள் :

தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, தி, சி, காடு, பாடு, மதி, து, உ, மை முதலியன.

(1) செய் + தல் = செய்தல். இவற்றுள் 'செய்' என்பது இச்சொல் வளர்ச்சிக்கு உயிர் நாடியாய் முன் நிற்பதால் பகுதி எனப்படும்.

(2) 'தல்' என்பது சொல்லின் கடைசியில் நிற்பதால் விகுதி எனப்படும். செய்—பகுதி ; தல்—தொழிற்பெயர் விகுதி.

(3) ஓடுதல், அடல், ஓட்டம், நடத்தை, வருகை, தீர்வை, போக்கு, வாய்ப்பு, மறதி, முயற்சி, சாக்காடு, மெய்ப்பாடு, ஏற்றுமதி, நடந்தது, வரவு, நடந்தமை—இவை தொழிற் பெயர்கள்.

## 8. வினைமுற்று முதலியன

படித்தான், படித்து, படித்த—என்பவை வினைச் சொற்கள் என்பது முன்பே கூறப்பட்டதன்றோ? இவற்றில் பொருள் முற்றி (முடிந்து) நிற்கும் வினைச்சொல் எது? படித்தான் என்பதே வினை முற்றி நிற்பது. ஆதலால் படித்தான் என்பது வினைமுற்று எனப்படும். படித்து, படித்த என்பவை முற்றுப் பெறாத வினைச்சொற்கள். இவை (1) படித்து (வந்தான்) என வேறொரு வினைச் சொல்லையும், (2) படித்த (பையன்) என



ஒரு பெயர்ச் சொல்லையும் தழுவி நிற்க வேண்டுவனவாக இருக்கின்றன. இவற்றுள் வினையைத் தழுவும் முற்றுப்பெறாத வினைச்சொல் வினையெச்சம் எனப்படும்; பெயரைத் தழுவும் முற்றுப்பெறாத வினைச்சொல் பெயரெச்சம் எனப்படும்.

(1) படித்தான், படிக்கின்றான், படிப்பான்—வினைமுற்று.

(2) படித்து, நடந்து, படிக்க (வந்தான்)—வினையெச்சம்.

(3) படித்த, படிக்கின்ற, படிக்கும் (பையன்)—பெயரெச்சம்.

### பயிற்சி

1. பெயர்ச்சொல், வினைச்சொல்—இவற்றை உதாரணம் கொண்டு விளக்குக.

2. உயர்திணை, அஃறிணை—இவற்றை விளக்கி வரைக.

3. நாங்கள் உங்களிடம் அரசரைப்பற்றிப் பேசினோம்.—இவ்வாக்கியத்தில் உள்ள மூன்று இடப்பெயர்களைச் சுட்டுக.

4. முருகன் என்னும் பெயர்ச்சொல் பல வகையாக வேறுபடுதலைக் காட்டுக.

5. கீழ் வரும் பெயர்களோடு இணைந்துள்ள வேற்றுமை யுருபுகளைச் சுட்டுக :

(1) முருகன் வீட்டை விட்டுக் கடைக்குச் சென்றான். (2) தச்சனால் செய்யப்பட்ட நாற்காலியைக் கந்தனிடமிருந்து வாங்கினான். (3) அண்ணனோடு சென்று, குப்பனில் பெரியவனை கூத்தப்பனைக் கண்டு, 'கூத்தப்பா!' என்று அழைத்தான். (4) மன்னனுடைய உடைவாள் என்னுடைய கையில் இருக்கிறது.

6. விளி வேற்றுமையில் பெயர்கள் எவ்வெவ்வாறு மாறுதல்களை அடையும்? சான்று தருக.

7. தொழிற் பெயரின் இலக்கணம் யாது? உதாரணம் தந்து விளக்குக.

8. தொழிற் பெயர் விகுதிகள் யாவை?

9. தீர்வை, வருகை, நடப்பு, சாக்காடு, பயிற்சி, வரவு, செய்தமை—இவற்றிலுள்ள தொழிற் பெயர் விகுதிகளைச் சுட்டுக.

10. வினைமுற்று என்பதை உதாரணத்தால் விளக்குக.

11. வினையெச்சம், பெயரெச்சம்—இவற்றை விளக்கிச் சான்று தருக.

12. படித்த பையன் விழுந்து விழுந்து சிரித்தான். குனிந்த இராமன் நிமிர்ந்து பார்த்தான். பாய்ந்த காளை பதறி விழுந்தது? சரிந்து விழுந்த மூட்டை சந்தையில் விழுந்தது, குதித்துச் சென்ற குப்பன் சுவரில் முட்டிக்கொண்டான்.—இவற்றிலுள்ள .வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சங்களை எடுத்துக் காட்டுக.

13. ஆகுபெயர் இன்னது என்பதை உதாரணத்தால் தெளிவாக்குக.

14. தடித்த சொற்கள் எவ்வாறு ஆகுபெயர்களாகும் என் பதை விளக்குக :—

**புளி** நட்டான், **காளை** வந்தான், **விளக்கு** ஒடிந்தது, **பொங்கல்** உண்டாள், தெரு சிரிக்கிறது.

## 9. மூன்று காலங்கள்

1. (1) கம்பர் இராமாயணம் **பாடினார்.**
   (2) பையன் பாடம் **படிக்கிறான்.**
   (3) குழந்தை பால் **குடிக்கும்.**

பாடினார், படிக்கிறான், குடிக்கும்—இவற்றுள் ஒவ்வொன் றும் எந்தக் கால நிகழ்ச்சியை உணர்த்துகின்றது?

(1) பாடினார் என்பது செயல் நடந்துவிட்ட (இறந்த) காலத்தையும்,

(2) **படிக்கிறான்** என்பது செயல் இப்பொழுது நிகழ்கின்ற காலத்தையும்,

(3) குடிக்கும் என்பது செயல் இனி நடைபெற இருக்கும் எதிர்காலத்தையும் காட்டுகின்றன அல்லவா? இவை மூன்றும் முறையே,

(1) இறந்த கால வினைமுற்று,
(2) நிகழ்கால வினைமுற்று,
(3) எதிர்கால வினைமுற்று,

எனப்படும்.



(1) பாடினார்—இறந்தகால வினைமுற்று
(2) படிக்கிறான்—நிகழ்கால வினைமுற்று
(3) குடிக்கும்—எதிர்கால வினைமுற்று.

2. (1) செய்தான் = செய் + த் + ஆன்
   (2) செய்கிறான் = செய் + கிறு + ஆன்
   (3) செய்வான் = செய் + வ் + ஆன்

இம்மூன்று சொற்களும் வெவ்வேறு காலங்களை உணர்த்துகின்றன என்பதை நீங்களே உணரலாம். இங்ஙனம் தனித்தனிக் காலத்தை உணர்த்தும் உறுப்பு ஒவ்வொரு சொல்லிலும் எங்கே இருக்கிறது? மூன்றிலும் உள்ள 'செய்' என்னும் முதல் உறுப்புப் பகுதி என்பதும், கடைசி உறுப்பு விகுதி என்பதும் உங்களுக்குத் தெரியும். பகுதி தொழிலை உணர்த்துகிறது; விகுதி தொழில் செய்யும் கருத்தாவை உணர்த்துகிறது; இவை இரண்டும் போக ஒவ்வொன்றிலும் எஞ்சியிருக்கும் உறுப்பே ஒவ்வொரு காலத்தை உணர்த்து கின்றது.

அதாவது,

(1) த்—இறந்த (செயல் நடந்த) காலத்தையும்

(2) கிறு—நிகழ் (செயல் நிகழ்கின்ற) காலத்தையும்

(3) வ்—எதிர் (செயல் இனி நடைபெறும்) காலத்தையும் உணர்த்துகின்றன. இவை இவ்வாறு சொல்லின் இடையில் நிற்பதால் **இடைநிலைகள்** என்று பெயர் பெறும்; இவை காலம் காட்டுவதால் **காலம் காட்டும் இடைநிலைகள்** என்று சொல்லப்படும்.

3. (1) செய்தான்—செய் + த் + ஆன்
   (2) உண்டான்—உண் + ட் + ஆன்
   (3) கற்றான்—கல் + ற் + ஆன்
   (4) விரும்பினான்—விரும்பு + **இன்** + ஆன்

இவை நான்கும் இறந்த காலத்தைக் குறிக்கும் வினைச் சொற்கள். ஆயினும் இடைநிலைகள் வெவ்வேறாக இருக்கின் றன அல்லவா? இவை இறந்த கால இடைநிலைகள்.

**த், ட், ற், இன்**—இறந்த கால இடைநிலைகள்.

4. (1) உண்கிருன்—உண்+கிறு+ஆன்
(2) உண்கின்ருன்—உண்+கின்று+ஆன்
(3) உண்ணுநின்ருன்—உண்+ஆநின்று+ஆன்

இவை மூன்றும் நிகழ்காலத்தைக் காட்டுகின்றன; ஆயினும் இடைநிலைகள் வெவ்வேருக இருக்கின்றன. இவை நிகழ் கால இடைநிலைகள்.

கிறு, கின்று, ஆநின்று—நிகழ்கால இடைநிலைகள்.

5. (1) உண்பான்+ப்+ஆன்
(2) செய்வான்—செய்+வ்+ஆன்

இவை யிரண்டும் எதிர்காலத்தை உணர்த்துகின்றன; ஆயினும் இடைநிலைகள் வெவ்வேருக இருக்கின்றன. இவை எதிர்கால இடைநிலைகள்.

ப், வ்—எதிர்கால இடைநிலைகள்.

6. வினைமுற்றுக்களில் இடைநிலைகள் இருந்து காலம் காட்டுவது போலவே வினையெச்சத்திலும் பெயரெச்சத்திலும் இவ்விடைநிலைகள் நின்று காலம் காட்டும்.

(1) உண்டு (வந்தேன்)=உண்+ட்+உ

(2) செய்து=செய்+த்+உ

(3) கற்று=கல்+ற்+உ

இவை இறந்தகால இடைநிலைகளைக் கொண்ட வினையெச் சங்கள்; ஆதலால் இவை இறந்தகால வினையெச்சங்கள் எனப்படும்.

7. (1) படிக்கிற (பையன்)=படி+கிறு+அ
(2) மேய்கின்ற (பசு)+மேய்+கின்று+அ

இவை நிகழ்கால இடைநிலைகளைக் கொண்ட பெயரெச் சங்கள்; ஆதலால் இவை நிகழ்காலப் பெயரெச்சங்கள் எனப்படும்.

## 10. வினையாலணையும் பெயர்

1. மதுரை மாரியப்ப சுவாமி பாடினுர்.—இவ்வாக்கியத் தில் 'பாடினுர்' என்பது வினைமுற்று.



இவர் பாடிய மறுநாள் தெரு வழியே சென்ருர். இவரைக் கண்ட மக்கள், 'நேற்றுப் பாடினவர் இதோ போகிருர்' என்றனர். பாடியவரது இயற்பெயர் மாரியப்ப சுவாமி என்பது. ஆனுல் மக்கள் அதைச் சொல்லாமல், 'பாடினவர்' என்னும் புதிய பெயரை இட்டு வழங்கினர். இப்பெயர் இவரை இவர் செய்த வினையால் அணைந்த பெயராகும். பாடுதலாகிய வினையைச் செய்ததனுல் பாடினவர் என்று பெயர் கொடுக்கப் பெற்ருர். இவ்வாறு ஒருவர்க்குத் தாம் செய்த வினையால் அணையும் பெயர், வினையாலணையும் பெயர் எனப்படும்.

| வினைமுற்று | வினையாலணையும் பெயர் |
|---|---|
| ஓடினுர் | ஓடினவர் |
| பாடுகிருன் | பாடுகிறவன் |
| செய்வான் | செய்பவன் |
| படித்தான் | படித்தவன் |

இவ் வினையாலணையும் பெயர்கள் செய்பவன், செய்பவனை, செய்பவனுல், செய்பவனுக்கு, செய்பவனில், செய்பவனது, செய்பவனிடம், செய்ப்பவனே!—என வேற்றுமை உருபுகளை ஏற்றுவரும்.

2. தொழிற்பெயர் வினையாலணையும் பெயர்: வேறுபாடுகள்

| தொழிற் பெயர் | வினையாலணையும் பெயர் |
|---|---|
| வருதல்—தொழிற் பெயர் | வந்தவன்—வினையாலணையும் பெயர் |
| 1. தொழிலுக்குப் பெயராய் வரும்.<br>2. படர்க்கை இடத்திற்கே உரியது.<br>3. காலம் காட்டாது | 1. தொழிலைச் செய்த பொருளுக்கே பெயராய் வரும்.<br>2. மூவிடத்திற்கும் உரியது.<br>3. முக்காலத்தையும் காட்டும். |

| | | | |
|---|---|---|---|
| வந்தானை | — | இறந்தகாலம் | வினையாலணையும் |
| வருகின்றவனை | — | நிகழ்காலம் | பெயர் முக்காலமும் |
| வருவானை | — | எதிர்காலம் | காட்டும். |

## 11. ஐம்பாற் பெயர் விகுதிகள்

| | | |
|---|---|---|
| **1.** | **ஆண்பால் பெயர்** | **விகுதி** |
| | (1) குழையன் | அன் |
| | (2) குழையான் | ஆன் |
| | (3) வடமன் | மன் |
| | (4) கோமான் | மான் |
| | (5) பிறன் | ன் |

**அன், ஆன், மன், மான், ன்—ஆண்பாற் பெயர்விகுதிகள்.**

| | | |
|---|---|---|
| **2.** | **பெண்பால் பெயர்** | **விகுதி** |
| | (1) குழையள் | அள் |
| | (2) குழையாள் | ஆள் |
| | (3) பிறள் | ள் |
| | (4) அரசி | இ |

**அள், ஆள், ள், இ—பெண்பால் பெயர் விகுதிகள்.**

| | | |
|---|---|---|
| **3.** | **பலர்பால் பெயர்** | **விகுதி** |
| | (1) குழையர் | அர் |
| | (2) குழையார் | ஆர் |
| | (3) குருமார் | மார் |
| | (4) குருமார்கள் | கள் |
| | (5) பிறர் | ர் |

**அர், ஆர், மார், கள், ர்—பலர்பால் பெயர் விகுதிகள்.**

| | | |
|---|---|---|
| **4.** | **ஒன்றன்பால் பெயர்** | **விகுதி** |
| | அது | து |

**து—ஒன்றன்பால் பெயர் விகுதி.**

| | | |
|---|---|---|
| **5.** | **பலவின்பால் பெயர்** | **விகுதி** |
| | (1) நல்லன | அ |
| | (2) நல்லவை | வை |
| | (3) நாடுகள் | கள் |

**அ, வை, கள்—பலவின்பால் பெயர் விகுதிகள்.**



## 12. ஐம்பால் வினைமுற்றுக்கள்

வினைமுற்று விகுதிகள்

| | | |
|---|---|---|
| **1.** | **ஆண்பால் வினைமுற்று** | **விகுதி** |
| | (1) நடந்தனன் | அன் |
| | (2) நடந்தான் | ஆன் |
| **2.** | **பெண்பால் வினைமுற்று** | **விகுதி** |
| | (1) நடந்தனள் | அள் |
| | (2) நடந்தாள் | ஆள் |
| **3.** | **பலர்பால் வினைமுற்றுக்கள்** | **விகுதி** |
| | (1) நடந்தனர் | அர் |
| | (2) நடந்தார் | ஆர் |
| | (3) சொல்லுப | ப |
| | (4) பாடன்மார் | மார் |
| **4.** | **ஒன்றன்பால் வினைமுற்று** | **விகுதி** |
| | (1) நடந்தது | து |
| | (2) கூவிற்று | று |
| | (3) பொருட்டு ↓ (பொருளையுடையது) | டு |
| **5.** | **பலவின்பால் வினைமுற்று** | **விகுதி** |
| | (1) நடந்தன | அ (உடன்பாடு) |
| | (2) நடவா | ஆ (எதிர்மறை) |

## 13. பகுபத உறுப்புக்கள்

1. செய், நில், உண், எடு—இவற்றுள் ஒவ்வொன்றும் பிரிக்கமுடியாத சொற்கள். எனவே இவை **பகாப் பதங்கள்** எனப்படும். (பகுத்தல் - பிரித்தல்; பகா - பிரிக்க முடியாத.)

2. செய்தான் = செய் + த் + ஆன்
   நின்றான் = நில் + ற் + ஆன்
   உண்கிறான் = உண் + கிறு + ஆன்.

இவ்வாறு பகுதி, விகுதி முதலிய உறுப்புக்களாகப் பிரிக்கப்படும் பதம் **பகுபதம்** எனப்படும்.

3. பகுபதத்தில் பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என்னும் உறுப்புக்கள் இருக்கும்.

(1) கூனன் = கூன் + அன்
↓ ↓
பகுதி விகுதி

(2) செய்தான் = செய் + த் + ஆன்
↓ ↓ ↓
பகுதி இடைநிலை விகுதி

(3) செய்தனன் = செய் + த் + அன் + அன்
↓ ↓ ↓ ↓
பகுதி இடைநிலை சாரியை விகுதி

(4) படித்தனன் = படி + த் + த் + அன் + அன்
↓ ↓ ↓ ↓ ↓
பகுதி சந்தி இடைநிலை சாரியை விகுதி

(5) நடந்தனர் = நட + த் + த் + அன் + அர்
↓ ↓ ↓ ↓ ↓
பகுதி சந்தி இடைநிலை சாரியை விகுதி
த்—ந் ஆனது
↓
விகாரம்

4. பெற்றாள் = பெறு + ஆள்
பெற்று + ஆள்
↓ ↓
பகுதி ஒற்று விகுதி
இரட்டித்து இறந்தகாலம் காட்டியது.

இவ்வாறு நட்டான், தொட்டான், விட்டார் என்னும் சொற்களையும் பிரித்துக்கொள்க.

## 14. முற்றெச்சம்

உண்டான்—வினைமுற்று

உண்டு (வந்தான்)—வினையெச்சம்

உண்ட (பையன்)—பெயரெச்சம்



இவற்றை நீங்கள் அறிவீர்கள். கீழ்வரும் உதாரணத்தைக் கவனியுங்கள் :

கண்ணன் கண்டனன் வந்தான்.—இதில் உள்ள ‘கண்டனன்’ என்பது வினைமுற்று ; ஆனால் இங்கே ‘கண்டு’ என்னும் வினையெச்சப் பொருளில் வந்துள்ளது. ‘கண்ணன் கண்டு வந்தான்’ என்பது வாக்கியத்தின் பொருள். இவ்வாறு ஒரு வினைமுற்று வினையெச்சப் பொருளில் வருமாயின், அவ்வினைமுற்று அவ்விடத்தில் முற்றெச்சம் (முற்று - எச்சம்) எனப்படும்.

(1) இராமன் குகனைத் தழுவினன் மகிழ்ந்தான்.

(2) வீமன் நகைத்தனன் சீறினான்.

(3) தமயந்தி நளனைத் தேடினள் அலைந்தாள்.

தழுவினன், நகைத்தனன், தேடினள்—முற்றெச்சங்கள்.

## 15. பால் பகா அஃறிணைப் பெயர்

(1) பறவை வந்தது ; பறவை வந்தன.
(2) மரம் வளர்ந்தது ; மரம் வளர்ந்தன.
(3) குதிரை ஓடினது ; குதிரை ஓடின.

இவ்வாறு ஒருமைப்பால், பன்மைப்பால் பகுக்கப்படாமல் சில அஃறிணைப் பெயர்ச் சொற்கள் ஒருமை பன்மைப் பால்களுக்குப் பொதுவாக வருதல் உண்டு. இவ்வாறு வரும் ஒவ்வொரு பெயரும் பால் பகா (பகுக்கப்படாத) அஃறிணைப் பெயர் என்று பெயர் பெறும். இது செய்யுளில் மட்டுமே வருதல் பெரு வழக்கு.

ஒன்றன்பாலைக் காட்டுகின்ற து என்ற விகுதியையும் பலவின்பாலைக் காட்டுகிற அ, வை, கள் என்னும் விகுதிகளுள் ஒன்றையும் பெறாத அஃறிணைப் பெயர்களே ஒன்றன்பால், பலவின்பால் என்னும் இரண்டு பால்களுக்கும் பொதுவாக வரும். இவை முன்னும் பின்னும் வருகின்ற சொற்களைக் கொண்டு பொதுமை நீங்கி இன்ன பால் என்று துணியப்படும்.

(1) குதிரை வந்தது—இதில் வந்தது என்பது ஒன்றன்பால் வினைமுற்று. ஆதலால் குதிரை என்பது ஒன்றன்பாற் பெயர்.

(2) குதிரை வந்தன—இதில் வந்தன என்பது பலவின்பால் வினைமுற்று. ஆதலால் குதிரை என்பது பலவின்பாற் பெயர்.

## 16. செய்வினை, செயப்பாட்டுவினை

1. முருகன் வள்ளியை **மணந்தான்.**—இவ்வாக்கியத்தில் முருகன் செய்த வினை (செயல்) வள்ளியை மணந்தமை. எனவே மணந்தான் என்பது செய்வினை எனப்படும்.

2. வள்ளி முருகனால் **மணக்கப்பட்டாள்.**—இவ்வாக்கியத்தில் மணக்கப்பட்டாள் என்பது முருகனால் செய்யப்பட்ட வினை. ஆதலால் இது செயப்பாட்டுவினை எனப்படும்.

## 17. ஏவல்—வியங்கோள்

1. ஏவல்

செய், வா, நில், உண்—என ஏவற் பொருளில் வரும் வினைமுற்று ஏவல் வினைமுற்று எனப்படும்.

செய்—ஒருமை ஏவல்

செய்வீர்—பன்மை ஏவல்

குறிப்பு : வினைப்பகுதியே ஏவல் ஒருமையாக வரும்.

2. வியங்கோள்

செய்க, வருக, நிற்க, உண்க—என ஏவல் வினையோடு 'க' சேர்ந்துவரும். இது வியங்கோள் வினைமுற்று எனப்படும்.

(வியங்கோள்—மரியாதை ஏவல்)

இவ்வியங்கோள் வாழ்த்தல், வைதல், வேண்டல், விதித்தல் முதலிய பொருள்களில் வரும்.

நீ வாழ்க—வாழ்த்தல்

நீ ஒழிக—வைதல்

நீ தருக—வேண்டல்

நீ செய்க—விதித்தல்



3. ஏவல்—வியங்கோள் : வேறுபாடு

| ஏவல் | வியங்கோள் |
| --- | --- |
| (1) முன்னிலையில் மட்டுமே வரும் | (1) மூவிடங்களிலும் வரும். |
| (2) ஏவலில் ஒருமை பன்மை உண்டு | (2) வியங்கோளில் அப்பிரிவு இல்லை. |
| (3) கட்டளைப் பொருளில் மட்டும் வரும் | (3) வாழ்த்தல், வைதல் முதலிய நான்கு பொருள்களில் வரும். |

பயிற்சி

1. பகுதி, விகுதி, இடைநிலை—இவற்றைச் சான்று காட்டி விளக்குக.

2. வினைச்சொல்லில் தொழிலையும் காலத்தையும் கருத்தாவையும் எவை உணர்த்துகின்றன என்பதைச் சான்று காட்டி நிறுவுக.

3. இறந்த கால இடைநிலைகள் யாவை?

4. நிகழ்கால இடைநிலைகள் யாவை?

5. எதிர்கால இடைநிலைகள் யாவை?

6. பாடினான், ஓடுகிறார், செய்வார், கற்றார், விரும்பினாள், ஓடுகின்றது, உண்பான், ஓடுவார், உண்டு (வந்தான்), ஓடுகின்ற (குதிரை)—இவற்றிலுள்ள முக்கால இடைநிலைகளையும் சொல்லுக.

7. வினையாலணையும் பெயரைச் சான்றுடன் விளக்குக.

8. தொழிற் பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

9. ஆண்பாற் பெயர் விகுதிகள் யாவை?

10. பெண்பாற் பெயர் விகுதிகள் எவை?

11. பலர்பாற் பெயர் விகுதிகளைக் கூறுக.

12. பலவின்பாற் பெயர் விகுதிகளைச் சுட்டுக.

13. மன்னன், அரசி, குருமார், அது, நல்லன, நல்லவை—இவற்றுள் ஒவ்வொன்றிலும் உள்ள பெயர் விகுதியைச் சுட்டுக.

14. ஆண்பால் வினைமுற்று விகுதிகள் யாவை?

15. பெண்பால் வினைமுற்று விகுதிகள் எவை?

16. பலர்பால் வினைமுற்று விகுதிகளைக் கூறுக.

17. ஒன்றன்பால் வினைமுற்று விகுதிகளைச் சுட்டுக.

18. பலவின்பால் வினைமுற்று விகுதிகள் யாவை? சான்று தருக.

19. கூவிற்று, நடந்தனன், (அவை) நடவா, பார்த்தார், நகைத்தாள்—இவற்றிலுள்ள விகுதிகளைச் சுட்டுக.

20. முற்றெச்சத்தை உதாரணம் கொண்டு விளக்குக.

21. பால்பகா அஃறிணைப் பெயர் இன்னது என்பதைச் சான்று காட்டி விளக்குக.

22. செய்வினை, செயப்பாட்டுவினை—இவற்றுக்கு விளக்கம் தருக.

23. ஏவல் வினைக்கும் வியங்கோள் வினைக்கும் உள்ள வேறுபாடுகள் எவை? உதாரணம் தந்து விளக்குக.

24. கூனி, நடந்தனர், படிக்கிருள், பேசினது, எழுந்தனன்—பகுபத இலக்கணம் கூறுக.

## 18. வடசொல் திசைச்சொல்

சம்ஸ்கிருத மொழி பேசிய மக்கள் தமிழ்நாட்டில் பல நூற்றுண்டுகளுக்கு முன்பு வந்து தங்கிவிட்டனர். அவர்கள் சேர்க்கையால் அவர்கள் பேசிவந்த வடமொழிச் சொற்கள் தமிழில் வழக்காறு பெற்றன. அதன்பின்னரே பல்வேறு திசைகளிலுள்ள நாடுகளில் வழங்கும் பிறமொழிச் சொற்களும் வந்து தமிழில் கலந்தன. வடக்கு ஒரு திசையாக இருப்பினும், பழமை பற்றியும் இலக்கியப் பெருமை பற்றியும் தமிழர் சம்ஸ்கிருதத்தை வடசொல் என்று தனித்து வழங்கலாயினர்; பிறமொழிச் சொற்களைத் 'திசைச்சொல்' என்னும் தலைப்பில் வழங்கலாயினர்.



1. ஜ, ஸ, ஷ, க்ஷ, ஹ—இவை வடமொழி எழுத்துக்கள். ரிஷபம், ரிஷி, விஜயம், லக்ஷ்மி, ஸரஸ்வதி, ஹனுமான், ராஜன்—இவை வடமொழிச் சொற்கள்.

2. திசைச் சொற்கள்

(1) போர்ச்சுகீஸியர் தமிழ் நாட்டில் தங்கி வாணிகம் செய்தபொழுது தமிழிற் கலந்த போர்ச்சுகீஸியச் சொற்கள் சில. அவை: கிராம்பு, சன்னல், சாவி, அலமாரி, பாதிரி முதலியன.

(2) ஜமீன், சிபாரிசு, சிபாய், சுமார், பந்தோபஸ்து, மேஜை, ரஸ்தா முதலியன பாரசீகச் சொற்கள்.

(3) அனுமதிது, ஆசாமி, இலாகா, மாமூல், முனிசீப், வசூல் முதலியன அரபு மொழிச் சொற்கள்.

(4) அசல், அந்தஸ்து, அல்வா, அம்பாரி, ஆஜர், உஷார், ஜமுக்காளம், தபால், பஞ்சாயத், பங்களா, ருஜு, லட்டு முதலியன இந்துஸ்தானிச் சொற்கள்.

இவ்வாறு பல திசைகளிலிருந்தும் தமிழ்மொழியில் வந்து வழங்கும் சொற்கள் திசைச் சொற்கள் எனப்படும்.

## 19. இடைச் சொல்

ஐ முதலிய வேற்றுமை உருபுகளும்; போல, ஒப்ப முதலிய உவம வுருபுகளும்; அ, இ, உ என்னும் சுட்டுக்களும்; யா முதலிய வினவெழுத்துக்களும்; 'உம்' முதலிய பிறவும் இடைச்சொற்கள் என்று கூறப்படும்.

இடைச் சொல் என்பது தனித்து நில்லாமல் பெயரையாவது வினையையாவது சார்ந்து வருவது.

மேற்சொன்ன வேற்றுமையுருபுகள் முதலியனவும், இடைநிலைகளை, சாரியைகள், விகுதிகள், தமக்கெனப் பொருளையுடைய ஏ, ஓ, மற்று, தான் முதலியனவும் இடைச்சொற்களாகும்.

1. (1) அவன்தான் வந்தான்.—இங்குத் தான் என்பது வற்புறுத்தற் பொருளில் வந்த இடைச்சொல்.

(2) அதுதான் வந்தது.—இங்கும் தான் என்பது வற்புறுத்தற் பொருளில் வந்த இடைச்சொல்லே.

(3) அவர்தாம் வந்தார்.—இங்குத் தாம் என்பது வற்புறுத்தற் பொருளில் வந்த இடைச்சொல்.

குறிப்பு: முன்பு தான், தாம் என்பன படர்க்கைப் பெயர்களாக வந்தமையும், இங்கு அவை வற்புறுத்தற் பொருளில் இடைச் சொல்லாக வந்தமையும் கண்டு கொள்க.

2. (1) தான் வந்தான்—படர்க்கைப் பெயர்.
அவன்தான் வந்தான்—இடைச்சொல்.

(2) தாம் வந்தார்—படர்க்கைப் பெயர்.
அவர்தாம் வந்தார்—இடைச்சொல்.

3. (1) சேரனும் சோழனும் பாண்டியனும் வந்தனர்.—இங்கு வந்துள்ள உம், இவ்வாறு எண்ணி நிற்றலால் இஃது எண்ணும்மை எனப்படும்.

(2) தமிழ்நாட்டு மூவரசரும் வந்தார்.—இதில்வரும் 'உம்' குறைவில்லாமைப் பொருளைத் தருதலால் இது முற்று உம்மை எனப்படும்.

(3) குறவரும் ஏற அஞ்சும் மலை—இதில் வந்துள்ள உம்மை, குறவர் வாயிலாகக் குன்றின் உயர்வை விளக்குதலால், இஃது உயர்வு சிறப்பு உம்மை எனப்படும்.

(4) நாயும் தின்னாத உணவு—இதில் வந்துள்ள 'உம்' நாயின் வாயிலாக உணவின் இழிவை விளக்குதலால், இஃது இழிவு சிறப்பு உம்மை எனப்படும்.

(5) கல்வி, செல்வம், ஒழுக்கம், குடிப்பிறப்பும் பெறுவாரும் உளர்.—இங்குக் 'குடிப்பிறப்பு' என்பதிலுள்ள 'உம்' இவற்றுள் சில பெறுவாரும் உளர் என்னும் பொருள்படுமாறு செய்தலால், இஃது எச்ச உம்மை எனப்படும்.

## 20. உரிச்சொல்

பல்வேறு வகைப்பட்ட பண்புகளையும் உணர்த்தும் பெயராகி, அங்ஙனம் உணர்த்தும் பொழுது ஒரு சொல் ஒரு குணத்தை உணர்த்துவனவும் பல குணங்களை உணர்த்து



வனவுமாய், பெயர்ச் சொற்களையும் வினைச் சொற்களையும் விட்டு நீங்காதனவாய், செய்யுளுக்கு உரியனவாய், பொருளுக்கு உரிமை பூண்டு வருவன **உரிச் சொற்கள்** எனப்படும்.

1. ஒரு பொருள் குறித்த பல சொல்.

(1) சாலப் பேசினான்.

(2) உறு புகழ்.

(3) தவ உயர்ந்தன.

(4) நனி தின்றான்.

இந்நான்கிலும் வரும், சால, உறு, தவ, நனி என்னும் உரிச்சொற்கள் மிகுதி என்னும் ஒரு பொருளை உணர்த்துவன.

2. பல பொருள் குறித்த ஒரு சொல்.

(1) கடிமனை—காவல் (2) கடிவாள்—கூர்மை
(3) கடிமாலை—மணம் (4) கடிமார்பன்—விளக்கம்
(5) கடிப்பேய்—அச்சம் (6) கடிமலர்—சிறப்பு
(7) கடிவிடுதும்—விரைவு (8) கடி உண்டான்—மிகுதி
(9) கடி முரசு—ஆர்த்தல் (10) கடிவினை—மன்றல்
(11) கடி மிளகு—கரிப்பு

இச்சான்றுகளால் 'கடி' என்னும் உரிச்சொல் - காவல், கூர்மை முதலிய பல பொருள்களைக் குறித்து வந்தமை காண்க.

### பயிற்சி

1. வடசொல், திசைச் சொல் - இவற்றை விளக்குக.

2. கிராம்பு, ரஸ்தா, வசூல், லட்டு, சிபாரிசு, இலாகா, பங்களா, அலமாரி—இவை எவ்வெம்மொழிச் சொற்கள்?

3. இடைச் சொல்லின் இலக்கணம் யாது? உதாரணம் தந்து விளக்குக.

4. தான் வந்தான், அவன் தான் வந்தான்; தாம் வந்தார், அவர்தாம் வந்தார்—ஒவ்வொன்றிலும் உள்ள தான், தாம் என்பனவற்றுக்கு இலக்கணம் கூறுக.

5. உரிச்சொல்லின் இலக்கணம் என்ன ?

6. ஒரு பொருள் குறித்த பல உரிச்சொற்கள் யாவை ? உதாரணம் தருக.

7. பல பொருள் குறித்த ஓர் உரிச்சொல்லை உதாரணத் தால் விளக்குக.

8. எண்ணும்மை, முற்றும்மை, உயர்வு சிறப்பு உம்மை, இழிவு சிறப்பு உம்மை, எச்ச உம்மை—இவற்றை உதாரணந் தந்து விளக்குக.

## III. சொற்றொடர்

1. சொற்கள் ஒன்றை ஒன்று தொடர்வது சொற்றொடர் எனப்படும்.

2. கண்ணகி பாடம் படித்தாள்—இவ்வாறு கருத்து முடிந்திருக்கும் சொற்றொடர் முற்றுச் சொற்றொடர் அல்லது வாக்கியம் எனப்படும்.

3. கண்ணகி பாடம் படித்து, பாடம் படித்த கண்ணகி —இவ்வாறு கருத்து முடியாத சொற்றொடர் எச்சச் சொற்றொடர் எனப்படும்.

### 1. வாக்கியத்தின் உறுப்புக்கள்

மாதவி மலர்களைப் பறித்தாள்.—(1) இந்த வாக்கியத்தில் பறித்தாள் என்பது வினைமுற்று. இதுவே இந்த வாக்கியத்தில் பயன் நிலைத்திருக்கும் இடமாகும். ஆகவே' இது பயனிலை எனப்படும்.

(1) பயனிலைக்கு முன் 'யார் ?' அல்லது 'எது ?' என் பதை வைத்து, 'யார்பறித்தாள் ?' என்னும் கேள்வி கேட்டால், மாதவி என்று விடை வருகிறது. இவ்விடையே இவ்வாக்கி யத்தில் எழுவாய் என்று சொல்லப்படும். செயல் எழுவதற்கு (தோன்றுதற்கு) வாயாக (இடமாக) இருப்பது எழுவாய் எனப் படும்.



(2) பயனிலைக்கு முன் 'யாரை' அல்லது 'எதை' அல்லது 'எவற்றை' என்பவற்றுள் ஏற்ற ஒன்றை வைத்துக் கேள்வி கேட்டால், வரும் விடையே செயப்படுபொருள் எனப்படும். இங்கு, 'எவற்றைப் பறித்தாள் ?' என்று கேள்வி கேட்டால் அதற்கு, மலர்களை என்பது விடையாகிறது. எனவே, இவ் வாக்கியத்தில் மலர்களை என்பது செயப்படு பொருளாகும்.

இவ்வாக்கியத்தில்,

மாதவி — எழுவாய்
பறித்தாள் — பயனிலை
மலர்கள் — செயப்படுபொருள்.

பெரும்பாலான வாக்கியங்களில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் இருக்கும். செயப்படுபொருள் இல்லாமலும் 'நான் எழுந்தேன்' என்றாற்போல, எழுவாயும் பயனிலையும் மட்டுமே வரும் வாக்கியங்களும் உண்டு.

1. வா—இது, நீ வா எனப் பொருள்படும். இங்கு வா— பயனிலை ; நீ—எழுவாய். இந்த எழுவாய் வெளிப்படையாக வராததால், அது தோன்றா எழுவாய் எனப்படும்.

நீ—தோன்றா எழுவாய்
வா—பயனிலை

2. (1) நான் தூங்கினேன்—இங்குவினைமுற்றுப் பய னிலையாக வந்துள்ளது. இது வினைப் பயனிலை எனப்படும்.

(2) படைத்தவர் கடவுள்—இங்குக் கடவுள் என்னும் பெயர்ச் சொல் பயனிலையாக வந்துள்ளது. இது பெயர்ப் பயனிலை எனப்படும்.

(3) வந்தவர் எவர் ?—இதில் எவர் என்னும் வினா, பயனிலையாக வந்துள்ளது. இவ்வாறு வருவது வினாப் பயனிலை எனப்படும்.

### 2. சொல் இலக்கணம் கூறுதல்

ஒரு வாக்கியத்தில் வரும் ஒவ்வொரு சொல்லுக்கும் திணை, பால், எண் முதலிய கூறி, அது நிற்கும் நிலையையும் கூறுதல் சொல் இலக்கணம் கூறுதல் எனப்படும். உதாரணம் கீழே காண்க :

1. கண்ணன் பாடம் படித்தான்.

இவ்வாக்கியத்தில் (1) கண்ணன், (2) பாடம் (3) படித்தான் என்னும் மூன்று சொற்கள் இருக்கின்றன.

(1) கண்ணன்—பெயர்ச்சொல், உயர்திணை, ஆண்பால், ஒருமை எண், படர்க்கையிடம், முதல் வேற்றுமை, படித்தான் என்னும் பயனிலைக்கு எழுவாய்.

(2) பாடம்—பெயர்ச்சொல், அஃறிணை, ஒன்றன் பால், ஒருமை எண், படர்க்கையிடம், இரண்டாம் வேற்றுமை, படித்தான் என்னும் பயனிலைக்குச் செயப்படுபொருள்.

(3) படித்தான்—வினைச்சொல், உயர்திணை, ஆண்பால், ஒருமை எண், படர்க்கையிடம், இறந்த காலம், கண்ணன் என்னும் எழுவாய்க்குப் பயனிலை.

குறிப்பு: பெயர்ச் சொல்லுக்கு வேற்றுமையுண்டு. வினைச் சொல்லுக்குக் காலம் உண்டு.

2. படித்த பத்மினி பாடி மகிழ்ந்தாள்.

(1) படித்த—இறந்தகாலப் பெயரெச்சம், பத்மினி என்னும் பெயரைக் கொண்டு முடிகிறது.

(2) பத்மினி—பெயர்ச்சொல், உயர்திணை, பெண்பால், ஒருமை எண், படர்க்கையிடம், முதல் வேற்றுமை, மகிழ்ந்தாள் என்னும் பயனிலைக்கு எழுவாய்.

(3) பாடி—இறந்தகால வினையெச்சம், மகிழ்ந்தாள் என்னும் வினைமுற்றைக் கொண்டு முடிகிறது.

(4) மகிழ்ந்தாள்—வினைச்சொல், உயர்திணை, பெண்பால், ஒருமை எண், படர்க்கையிடம், இறந்தகாலம், பத்மினி என்னும் எழுவாய்க்குப் பயனிலை.

## 3. நிறுத்தற் குறிகள்

நாம் படிக்கும்பொழுது பொருள் விளங்குவதற்காகச் சில இடங்களில் நிறுத்தியும், மகிழ்ச்சி, கோபம், துன்பம் முதலிய உணர்ச்சிகள் விளங்கும்படியும் படித்தல் இயல்பு. இவ்வாறு படிப்பதற்கு உதவியாய் இருக்கும் பொருட்டு நூல்களில் தக்க இடங்களில் சில குறிகள் இடப்பட்டுள்ளன. இக்குறிகள் இடப்



பட்டுள்ள இடங்களில் இவ்வளவு நேரம் நிறுத்த வேண்டும் என்பதை அவை நமக்குத் தெரிவிக்கின்றன. அதனால் அவை நிறுத்தற் குறிகள் என்று பெயர் பெறும்.

1. .—இது முற்றுப்புள்ளி. இக்குறி இடப்பட்டுள்ள இடத்தில் நான்கு மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும். ஒரு முறை கண்ணிமைக்கும் அல்லது கைந்நொடிக்கும் நேரம் ஒரு மாத்திரை எனப்படும். ஒரு வாக்கியத்தின் முடிவில் முற்றுப்புள்ளி இடவேண்டும்.

2. கண்ணன் கடைக்குச் சென்றான்; ஆறணா கொடுத்தான்; ஒரு புத்தகம் வாங்கினான்.

இதில் ஒரே எழுவாய்க்கு மூன்று பயனிலைகள் வருகின்றன. இவ்வாறு ஒரே எழுவாய் பல பயனிலைகளைக்கொண்டு முடியும் போது வாக்கியத்தின் இடையில், ஒவ்வொரு பயனிலைக்குப் பிறகும் வரும் நிறுத்தற்குறி அரைப் புள்ளி எனப் பெயர் பெறும். இங்கு இரண்டு மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும்.

3. (1) அறம், பொருள், இன்பம், வீடு—பொருள்களை எண்ணல்.

(2) அவர் மகன் இறந்த பொழுது அழுது, விம்மி, புலம்பி ஏங்கினார்.—வினையெச்சம்.

(3) தம்பி, இங்கு வா—விளித்தல்.

(4) அவன் அவ்வாறு பேசிய பொழுது, கண்ணன் எதிரில் வந்தான் — எச்சச் சொற்றொடர்.

இவ்வாறு பொருள்களை எண்ணும்போதும், வினையெச்சங்களின் பின்னும், விளிக்கும் போதும், எச்சச் சொற்றொடராக வரும் போதும், காற்புள்ளி இடவேண்டும். இங்கு ஒரு மாத்திரை நேரம் நிறுத்தவேண்டும்.

4. வேலன் தேர்வில் வெற்றி பெற்றானா?

திருக்குறளை இயற்றியவர் யார்?

இவை வினா வாக்கியங்கள். வினாவுக்குப் பிறகு இடப்பட்டுள்ள குறி வினாக்குறியாகும். இங்கு நான்கு மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும்.

5. (1) எப்படி இவ்வளவு உயரமான மலையில் ஏறினாய் !

(2) இஃது என்ன அநியாயம் !

(3) திருடன் ! திருடன் !

(4) என் பணம் போயிற்றே !

(5) உன்னைச் சும்மா விடுவேனா, பார் !

இவ்வாக்கியங்களில் வியப்பு, இரக்கம், அச்சம், அழுகை, சினம் முதலிய உணர்ச்சிகள் வெளிப்படுவதைக் காணலாம். இவ்வுணர்ச்சிகளை உணர்த்த வரும் குறியே உணர்ச்சிக் குறி என்பது. இங்கேயும் நான்கு மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும்.

6. "தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று."

என்பது திருக்குறள். இது திருவள்ளுவர் பாடல். ஒருவர் சொல்லியதை அப்படியே மேற்கோளாக எடுத்துக் காட்டும் போது, முன்னும் பின்னும் இரட்டை மேற்கோள் குறிகள் இடவேண்டும்.

7. கண்ணன் கந்தனைப் பார்த்து, "கந்தா, 'நான் தேர்வில் வெற்றிபெற்றால் உனக்கு இனிப்புப் பண்டம் வாங்கித் தருவேன்,' என்று அன்று முருகன் கூறியது உனக்கு நினைவிருக்கிறதா !" இவ்வாறு மேற்கோளுக்குள் மேற்கோளாக வரும் போது ஒற்றை மேற்கோள் குறி இடவேண்டும்.

8. (      ) இவை பிறைக் குறிகள் எனப்படும்.

(1) 'இலக்கியம் (Literature)'—என்பது போல் மொழி பெயர்த்து எழுதும் பொழுது பிறைக் குறிகள் இடவேண்டும்.

(2) மனத்துக்கண் மாசு (அழுக்கு) இல்லாதவராதலே நன்று—இவ்வாறு மாசு என்னும் சொல்லுக்கு அழுக்கு எனப் பொருள் கூறும்பொழுது பிறைக் குறிகள் இடவேண்டும்.

(3) வருமொழி (அதாவது, நிலைமொழியோடு சேருவதற்கு வருமொழி)—இவ்வாறு விளக்கம் செய்யும்போது பிறைக்குறிகள் இடவேண்டும்.



(4) (3) (8) (10),—என்று இவ்வாறு, சிறு பிரிவுகளுக்கு முதலில் எண்கள் வரும்போதும் பிறைக் குறிகள் இட வேண்டும்.

'மலைமகள்=(இமய) மலையிற் பிறந்த உமையம்மை'—என உரையிற் சொல் வருவிக்கும்போதும் பிறைக் குறிகள் இடவேண்டும்.

## பயிற்சி

1. விடை கூறுக :—

(1) ஒரு வாக்கியத்தில் வந்துள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களை எவ்வாறு கண்டு பிடிப்பது ?

(2) தோன்றா எழுவாயைக் கண்டு பிடிப்பது எப்படி ?

(3) மாத்திரை என்பது யாது ?

2. கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள எ. ப. செ. கூறுக:—

(1) முருகன் தேர்வில் வெற்றி பெற்றான்.

(2) கந்தன் பந்து வாங்கினான்.

(3) கண்ணன் வெண்ணெய் தின்றான்.

(4) கோமளம் கோலம் போடுகிறாள்.

(5) குரங்கு வடையைத் தின்கிறது.

(6) வரதன் வழுக்கி விழுந்தான்.

3. கீழ்வரும் வாக்கியங்களில் தக்க இடங்களில் தக்க நிறுத்தற் குறிகளை இடுக :—

(1) வள்ளி செவ்வையாய் வேலை செய்கிறாள்

(2) அவர் உங்கள் வீட்டிற்கு வந்தாரா

(3) ஐயோ பாவம் அவரா தவறிவிட்டார்

(4) பரந்தாமன் நன்கு படித்தான் ஆயினும் தேர்வில் வெற்றி பெறவில்லை

(5) சேரன் சோழன் பாண்டியன் என்னும் மூவரும் தமிழகத்தைப் பல நூற்றாண்டுகள் ஆண்டு வந்தனர்.

4. தக்க இடங்களில் மேற்கோள் குறிகளை இடுக :—

(1) கந்தன் என்னைப் பார்த்து நீ சென்னைக்கு எப்பொழுது போவாய் என்று என்னைக் கேட்டான்.

(2) வரதன் என்னிடம் வேகமாக ஓடி வந்து நீ ஏன் திருமணத்திற்கு வரவில்லையென்று கவலையோடு கேட்டான்.

## 4. தொகை நிலைத்தொடர்—தொகா நிலைத்தொடர்

1. புத்தகம் படித்தான்.—இது, புத்தகத்தைப் படித்தான் என விரியும். எனவே, 'புத்தகம்' என்னும் சொல்லுக்கும் 'படித்தான்' என்னும் சொல்லுக்கும் இடையில் 'ஐ' என்னும் உருபு தொக்கு (மறைந்து) உள்ளது. இங்ஙனம் இடையில் வேற்றுமை யுருபோ, உவமை யுருபோ, பிறவோ தொக்கு (மறைந்து) வர, இரண்டு சொற்கள் ஒன்றையொன்று தொடர்ந்து நிற்றல் **தொகை நிலைத்தொடர்** எனப்படும்.

2. கோவலன் படித்தான்—இவ்விரு சொற்களுக்கும் இடையில் மேற்சொன்ன வேற்றுமை யுருபோ, உவமை யுருபோ, பிறவோ தொகாமல் (மறையாமல்) இரண்டு சொற்களும் தொடர்ந்து நிற்றலைக் காணலாம். இங்ஙனம் இரு சொற்கள் தொடர்ந்து நிற்றல் **தொகா நிலைத்தொடர்** எனப்படும்.

### தொகை நிலைத்தொடர்—வகை

### (1) வேற்றுமை

1. (1) புத்தகம் படித்தான்.—இதில் 'ஐ' என்னும் இரண்டாம் வேற்றுமையுருபு தொக்கு வருவதால், இத்தொடர் **இரண்டாம் வேற்றுமைத் தொகை நிலைத்தொடர்** எனப்படும்.

(2) தலைவணங்கு—இங்கு 'ஆல்' என்னும் மூன்றும் வேற்றுமையுருபு மறைந்து வருவதால், இத்தொடர் **மூன்றும் வேற்றுமைத் தொகை நிலைத்தொடர்** எனப்படும்.



(3) வீடு செல்—இங்கு 'கு' என்னும் நான்காம் வேற்றுமை உருபு தொக்கு நிற்றலால், இத்தொடர் **நான்காம் வேற்றுமைத் தொகை நிலைத்தொடர்** எனப்படும்.

(4) மலைவீழ் அருவி—இதில் 'இன்' என்னும் ஐந்தாம் வேற்றுமையுருபு தொக்கு நிற்றலால், இத்தொடர் **ஐந்தாம் வேற்றுமைத் தொகை நிலைத்தொடர்** எனப்படும்.

(5) கண்ணன் குழல்—இங்கு 'அது' என்னும் ஆறும் வேற்றுமையுருபு தொக்கு நிற்றலால், இத்தொடர் **ஆறும் வேற்றுமைத் தொகை நிலைத்தொடர்** எனப்படும்.

(6) பெட்டிப் பணம்—இங்கு 'இல்' என்னும் ஏழாம் வேற்றுமை உருபு தொக்கு நிற்றலால், இத்தொடர் **ஏழாம் வேற்றுமைத் தொகை நிலைத்தொடர்** எனப்படும்.

(7) பொன் மோதிரம்—இது 'பொன்(னால் செய்யப்பட்ட) மோதிரம்' என விரியும். இடையில் 'ஆல்' என்னும் மூன்றும் வேற்றுமை உருபும், 'செய்யப்பட்ட' என்னும் பயனும் உடன் தொக்கு வருவதால், இத்தொடர் **மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க** தொகை எனப் பெயர் பெறும்.

இவ்வுருபும் பயனும் உடன் தொக்க தொகை, இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை முடிய வரும் என்பதை அறிக.

இவ்வாறு இரண்டு சொற்களுக்கு இடையில் வேற்றுமை உருபுகள் மறைந்து வரச் சொற்கள் தொடருதல் **வேற்றுமைத் தொகை நிலைத்தொடர்** எனப் பெயர் பெறும்.

### (2) அல்வழி

2. இரண்டு சொற்களுக்கு இடையில் வேற்றுமை உருபுகள் மறைந்து வராமல் உவமை உருபு, பண்பு உருபு முதலியன மறைந்துவரச் சொற்கள் புணர்தல் (வேற்றுமை அல்லாத வழியில் சொற்கள் புணர்தல்) **அல்வழித்தொகை நிலைத்தொடர்** எனப் பெயர் பெறும். கீழ்வருவன இவ்வகையைச் சேர்ந்தவை.

(1) ஆடு பாம்பு
ஓடு குதிரை
தாழ் சடை

என, வினைப்பகுதியும் பெயர்ச்சொல்லும் சேர்ந்து வருதல் **வினைத்தொகை** எனப்படும். 'ஆடு பாம்பு' என்பது ஆடின பாம்பு, ஆடுகின்ற பாம்பு, ஆடும் பாம்பு எனப் பொருள்படும்.

(2) கருங்குதிரை—

இது கருமை ஆகிய குதிரை என விரியும்.
↓ ↓ ↓
(பண்பு) (பண்புருபு) (பண்பி)

இவ்வாறு 'ஆகிய' என்னும் பண்புருபு இடையிலே மறைந்து வர, பண்பும் பண்பியும் தொடர்தல் **பண்புத்தொகை** எனப்படும்.

(3) முத்துப் பல்—

இது முத்துப் (போன்ற) பல் என விரியும்.
↓ ↓ ↓
(உமை) (உவமை உருபு) (பொருள்)

இவ்வாறு உவமை உருபு இடையிலே தொக்குவர, உவமையும் பொருளும் தொடருதல் **உவமைத்தொகை** எனப்படும்.

(4) சேர சோழர்—இது சேரனும் சோழனும், என விரியும். இதில் உம் என்பது தொக்கு வருதலால், இஃது **உம்மைத்தொகை** எனப்படும்.

(5) (1) தாழ்குழல்—தாழ்ந்த கூந்தல், தாழ்கின்ற கூந்தல், தாழும் கூந்தல் எனப் பொருள் படுதலால் **வினைத்தொகை** எனப்படும்.

(2) தாழ்குழல் வந்தாள்—இது, தாழ்ந்த கூந்தல் (உடையவன்) வந்தாள் என விரியும். அதாவது, வினைத்தொகைப் புறத்தில் 'உடையவள்' என்னும் சொல் தொக்கு வருகிறது. இங்ஙனம் வருதல் **அன்மொழி** (அல்லாத மொழி)**த் தொகை** என்று இலக்கணத்தில் கூறப்படும். இவ்வுதாரணத்தில் வந்துள்ள 'தாழ்குழல்'—வினைத்தொகைப் புறத்துப் பிறந்த **அன்மொழித் தொகை** எனப் பெயர் பெறும்.



இந்த அன்மொழித்தொகை (1) வேற்றுமைத் தொகை, (2) வினைத்தொகை, (3) பண்புத்தொகை, (4) உவமைத் தொகை, (5) உம்மைத்தொகை என்னும் ஐந்திலும் வரும்.

### தொகா நிலைத்தொடர்—வகை

(1) பதுமினி பாடினாள்—இத்தொடரில் முதலில் இருக்கும் சொல் பதுமினி என்பது. இவ்வாக்கியத்தில் அதுவே எழுவாய். எனவே, இத்தொடர் எழுவாய்த் தொடர் எனப்படும். இவ்வாறே கீழ்வரும் தொடர்களில் வரும் முதற் சொல்லின் இலக்கணம் கொண்டே தொடர் கூறுக.

| | |
|---|---|
| (2) வந்தாள் வள்ளி | —வினைமுற்றுத்தொடர். |
| (3) வந்து போனாள் | —வினையெச்சத்தொடர். |
| (4) வந்த வள்ளி | —பெயரெச்சத்தொடர். |
| (5) வள்ளி, வா | —விளித்தொடர். |
| (6) வள்ளியை அழைத்தாள் | —வேற்றுமைத் தொகா நிலைத்தொடர். |
| (7) இனி வருவாள் | —இடைச்சொல் தொடர். |
| (8) சாலப் பேசினாள் | —உரிச் சொற்றொடர். |
| (9) பாம்பு பாம்பு | —அடுக்குத் தொடர். |

இவ்வொன்பதும் தொகா நிலைத்தொடர்கள்.

## 5. இரட்டைக்கிளவி—அடுக்குத்தொடர்

**1.** (1) அவன் கலகல என்று சிரித்தான்.
(2) தண்ணீர் சலசல என்று ஓடுகிறது.
(3) அவள் மடமட என்று பேசினாள்.
(4) இரத்தம் குபுகுபு என்று வெளி வந்தது.
(5) அம்புபட்ட மயில் துடிதுடித்து விழுந்தது.

இவற்றில் வந்துள்ள கலகல, சலசல, மடமட, குபுகுபு, துடி துடித்து என்பன இரட்டைப்படவே வந்துள்ளன; இரட்டையில் ஒன்றைப் பிரித்தால் மற்றொன்று பொருள்

தராது ; இரட்டைப்பட வந்தாற்ருன் பொருள் தரும். இத் தகைய சொற்கள் இரட்டைக்கிளவி எனப்படும். (கிளவி— சொல்.

2. (1) பாம்பு பாம்பு
(2) தேள் தேள் தேள்
(3) புலி புலி புலி புலி
(3) வந்து வந்து போனுன்
(5) சென்று சென்று தேய்ந்தது

இங்கு வந்துள்ள பாம்பு பாம்பு முதலியவை பிரித்தால் பொருள் தரும். ஒரே சொல் இரண்டாகவும் மூன்ருகவும் நான்காகவும் அடுக்கி வரும். எனவே, இவை அடுக்குத் தொடர் எனப் பெயர் பெறும்.

3. இரட்டைக்கிளவி—அடுக்குத்தொடர் : வேறுபாடு

(1) இரட்டைக்கிளவி. இரட்டியே வரும் ; அடுக்குத் தொடர் இரண்டுக்கு மேலும் வரும்.

(2) இரட்டைக்கிளவி ஒன்றைவிட்டு ஒன்றைப் பிரித் தால் பொருள் தராது. அடுக்குத் தொடரில் ஒவ்வொரு சொல்லும் பொருள் தரும்.

## 6. வழுவமைதிகள்

பசுவை அன்பினுல் 'இவள் என் அம்மை' என்று சொல்லுதல் வழு (குற்றம்) ; ஆயினும் இங்ஙனம் கூறுதல், உலகில் பெருவழக்காயிருத்தலால், ஆன்ருேர் இதனை அமைதி (பொருத்தம்) என ஏற்றுக்கொண்டனர். எனவே, இது வழு அமைதி ஆயிற்று. இங்ஙனம் கூறப்படும் வழுவமைதி (1) திணை வழுவமைதி, (2) பால் வழுவமைதி, (3) இட வழு வமைதி, (3) கால வழுவமைதி, (5) மரபு வழுவமைதி எனப் பலவகைப்படும். அவற்றுள் சிலவற்றை ஈண்டுக் காண்க :

1. திணை வழுவமைதி

" திங்களும் சான்ருேரும் ஒப்பர்,"—இங்குத் திங்கள் அஃறிணை ; சான்ருேர் உயர்திணை. இவ்விரு திணைச் சொற் களும் கலந்து, சிறப்பினுல் உயர்திணை முடிவை ஏற்றன. இங்ஙனம் வருதல் திணை வழுவமைதி எனப்படும்.



2. பால் வழுவமைதி

(1) தாய் தன் புதல்வனை, 'என் அம்மை வந்தாள்' என்று கூறுதலில், அன்பின் பெருக்கால் ஆண்பால் பெண் பாலாயிற்று.

(2) ஒருவனை, "அவர் வந்தார்" என்பது, உயர்வினுல் ஒருமைப்பால் பலர்பால் ஆயிற்று. இங்ஙனம் வருதல் பால் வழுவமைதி எனப்படும்.

3. இட வழுவமைதி

(1) நீயோ, அவனே, யார் இது செய்தார் ?
(2) யானே, அவனே, யார் இது செய்தார் ?
(3) நீயோ, யானே, யார் இது செய்தார் ?
(4) நீயோ, அவனே, யானே, யார் இது செய்தார் ?

இவ்வுதாரணங்களில் (1) முன்னிலையில் படர்க்கையும், (2) தன்மையில் படர்க்கையும், (3) முன்னிலையில் தன்மை யும், (4) முன்னிலையில் படர்க்கையும் தன்மையும் வந்திருத் தலைக் காண்க. இங்ஙனம் வருதல் இடவழுவமைதி எனப்படும்.

4. கால வழுவமைதி

(1) தெய்வம் இருக்கிறது.
(2) நிலம் கிடக்கிறது.
(3) மலை நிற்கிறது.

இவ்வாறு தம் தொழில் இடையருது முக்காலத்திலும் ஒரு தன்மையவாய் இயலும் பொருள்களை நிகழ்காலத்தால் கூறுதல் கால வழுவமைதி எனப்படும்.

5. (1) தனக்காகக் காத்து நிற்கும் நண்பன், 'இன்னும் சோறு உண்டிலையோ !' எனின், அதுவரை உண்ணுதான், 'உண்டேன், இதோ வருகிறேன்' என்பான். உண்ணுகின்ற வனும் 'உண்டேன், இதோ வருகிறேன்' என்பான். இவ்வாறு விரைவுபற்றி எதிர்காலமும் நிகழ்காலமும் இறந்த காலம் ஆயின.

(2) அக்காட்டிற்புகின் கூறை கோட்பட்டான்.—இது மிகுதியால் எதிர்காலம் ('கூறை கோட்படுவான்' என்பது) இறந்த காலம் ('பட்டான்' என) ஆயிற்று.

(3) அறம் செய்யின், சுவர்க்கம் புகுந்தான்.—இது தெளிவு பற்றி எதிர்காலம் இறந்த காலம் ஆயிற்று.

(4) யாம் பண்டு விளையாடுவது இப்பூங்கா.

யாம் பண்டு விளையாடுகிறது இப்பூங்கா.

இது யாது காரணமும் இன்றி இயல்பினால் இறந்தகாலம் (விளையாடியது என்பது) எதிர்காலமும் (விளையாடுவது என) நிகழ்காலமும் (விளையாடுகிறது என) ஆயிற்று. இவ்வாறு (1) விரைவு, (2) மிகுதி, (3) தெளிவு, (4) இயல்பு என்னும் பொருள்கள்பற்றி, பொருத்தமான இடங்களில் ஒன்று மற்றொன்றாகக் கூறப்படும். இது கால வழுவமைதி எனப்படும்.

6. மரபு வழுவமைதி

(1) யானைக்கன்று — மரபு; யானைக்குட்டி — மரபுவழு. ஆயினும் வழக்குப் பெற்றுவிட்டமையால் இஃது அமைதி எனக் கொள்ளப்பட்டது.

(2) மீமிசை—மேல் என்னும் ஒரே பொருளைத் தரும் மீ—மிசை என்னும் இரு சொற்கள் வந்தன. இங்ஙனம் வருதல் காரணமற்றதாயினும், சிறந்து நிற்றலால் அமைதியாகக் கொள்ளப்பட்டது.

(3) இம் மாடு யான் வாங்கியது—என, செயப்படுபொருளைக் கருத்தாவைப் போல வைத்து, அதன்மேல் வினை முதல் வினை ஏற்றிக் கூறுவதும் வழக்கில் இருப்பதனால் அமைதி எனக் கொள்ளப்பட்டது.

(4) (1) நெஞ்சமே! நான் கூறுவதைக் கேள்.

(2) பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்கும்.

(3) இவ்வழி அவ்வூருக்குப் போகும்.

(4) பெடை யன்னம் தன் நிழலைக்கண்டு தன் ஆண் அன்னத்தின் காதலி என்று கருதி, ஆண் அன்னத்துடன் ஊடல் கொண்டது.



இவ்வாறு (1) கேளாதனவற்றைக் கேட்பன போலவும், (2) சொல்லாதனவற்றைச் சொல்வன போலவும், (3) நடவாதனவற்றை நடப்பன போலவும், (4) செய்யாதனவற்றைச் செய்வன போலவும் அஃறிணையிடத்தில் சொல்லப்படும். உயர்திணை இடத்தும் இவ்வாறு சொல்லப்படுதல் புலம்பல் முதலியவற்றில் காண்க.

## பயிற்சி

1. தொடர் என்பது யாது?

2. அல்வழி—பொருள் யாது?

3. தொகை நிலைக்கும், தொகா நிலைக்கும் உள்ள வேற்றுமை யாது? உதாரணத்தால் விளக்குக.

4. கீழ்க்கண்ட தொகை நிலைத்தொடர்களுள் தொக்கு நிற்கும் சொற்கள் யாவையென விளக்குக:—

(1) முகத்தாமரை, (2) துன்பக்கடல், (3) பவளவாய், (4) புலிப்பாய்ச்சல், (5) பவளவாய் (பாடினாள்), (6) முருகன் புத்தகம்.

5. வேற்றுமைத் தொகை, அல்வழித்தொகை—சான்று காட்டி விளக்குக.

6. தொகா நிலைத்தொடர் எத்தனை வகைப்படும்?

7. இரட்டைக் கிளவிக்கும் அடுக்குத் தொடருக்கும் உள்ள வேறுபாடுகள் எவை?

8. கீழ்வருவனவற்றுள் உள்ள இரட்டைக் கிளவி அடுக்குத் தொடர்களைச் சுட்டுக:—

(1) வாள் பளபள என்று மின்னுகிறது.

(2) பாத்திரங்கள் தடதட என்று உருண்டன.

(3) முருகன் முறுக்கு முறுக்கு என்று கத்தினான்.

(4) பொன்னி வா வா என்று அழைத்தாள்.

(5) குப்பன் குடு குடு என்று ஓடினான்.

9. வழு, வழுவமைதி—இவற்றை உதாரணம் கொண்டு விளக்குக.

10. வழுவமைதி எத்துணை வகைப்படும்?

11. யானையும் தீயோரும் ஒப்பர்.—இஃது என்ன வழு அமைதி?

12. பால் வழுவமைதியை ஓர் உதாரணத்தால் விளக்குக.

13. (1) செங்கோல் அரசன் தான் ஆண்ட நாட்டுக்குத் தாய்.

(2) அறம் செய்யின் சுவர்க்கம் புகுந்தான்.

(3) யானைக்கன்று, யானைக்குட்டி.

(4) நீயோ நானோ யார் இங்குச் சென்றவர்?—இவற்றில் வந்துள்ள வழு அமைதிகளைக் குறிப்பிடுக.

## 7. தமிழ் மரபு

1. மரபு—சான்றோர் வழக்கு. எப்பொருளை எச்சொல்லால், எந்நெறியால் சான்றோர் சொன்னார்களோ, அப்பொருளை அச்சொல்லால் அந்நெறியால் சொல்லுதலே **மரபு** ஆகும்.

குதிரைக் குட்டி—இது சான்றோர் வழக்கு—மரபு.

பசுவின் கன்று—இது சான்றோர் வழக்கு—மரபு.

2. (1) **அடிசில்**—இஃது உண்பன, தின்பன, நக்குவன, பருகுவனவற்றிற்கெல்லாம் பொதுச் சொல். ஆதலால் இதனை 'அயின்றார்,' 'மிசைந்தார்' என்னும் பொது வினையாற் கூறலே மரபு.

(2) **அணி** (நகை)—இது கவிப்பன, கட்டுவன, இடுவன, தொடுவனவற்றிற்கெல்லாம் பொதுச்சொல். ஆதலால் இதனை, 'அணிந்தார்,' 'தாங்கினார்' என்னும் பொது வினையாற் கூறலே மரபு.

(3) **இயம்** (வாத்தியம்)—இது கொட்டுவன, ஊதுவனவற்றிற்கெல்லாம் பொதுச்சொல். ஆதலால், இதனை 'இயம்பினார்,' 'படுத்தார்' என்னும் பொது வினையாற் கூறலே மரபு.



(4) **படை** (போர்க்கருவி)—இது எய்வன, எறிவன, வெட்டுவன, குத்துவனவற்றிற்கெல்லாம் பொதுச்சொல். ஆதலால், இதனை, 'வழங்கினார்,' 'தொட்டார்' என்னும் பொதுவினையாற் கூறலே மரபு.

3. குன்றவன் கொற்றன்—திணைபற்றி வந்த சிறப்புப் பெயர்.

அருவாளன் அழகன்—நிலம்பற்றி வந்த சிறப்புப் பெயர்.

பார்ப்பான் கௌதமன்—சாதிபற்றி வந்த சிறப்புப் பெயர்.

கோவூர்கிழான் கண்ணன்—ஊர்பற்றி வந்த சிறப்புப் பெயர்.

பொன்னன் கந்தன்—உடைமைபற்றி வந்த சிறப்புப் பெயர்.

கரியன் கண்ணன்—நிறம் (குணம்) பற்றி வந்த சிறப்புப் பெயர்.

நடிகன் நடராசன்—தொழில்பற்றி வந்த சிறப்புப் பெயர்.

ஆசிரியன் அந்துவன்—கல்விபற்றி வந்த சிறப்புப் பெயர்.

திணை, நிலம், சாதி, குடி, உடைமை, குணம், தொழில், கல்வி பற்றி வரும் சிறப்புப் பெயருடன் இயர் பெயர் சேர்ந்து வருமாயின், அவ்வியற் பெயர் (மேற்கண்டவாறு) பின் வருதலே சிறந்த மரபு.

4. (1) நம்பி வந்தான், அவற்குச் சோறிடுக.—படர்க்கை இடத்ததாகிய உயர்திணைப் பெயரைச் சார்ந்த சுட்டுப் பெயர் உயர்திணைப் பெயருக்குப் பின் வந்தது.

(2) பசு வந்தது, அதற்குப் புல்லிடுக.—அஃறிணைப் பெயரைச் சார்ந்த சுட்டுப் பெயர் அதன்பின் வந்தது.

(3) சாத்தன் தெய்வம், அவற்குப் பலியிடுக.
↓
(உயர்திணை)

சாத்தன் வந்தது, அதற்குப் புல்லிடுக.
↓
(அஃறிணை)

} விரவுப் பெயர்

இவ்விரவுப் பெயரைச் சார்ந்த சுட்டுப்பெயர் அவ்விரவுப் பெயரின் பின் வந்தது. (விரவுப் பெயர் - பொதுப் பெயர்.)

இங்ஙனம் (1) உயர்திணைப் பெயர், (2) அஃறிணைப் பெயர், (3) விரவுப் பெயர் என்னும் மூவகைப் பெயரைச் சார்ந்து சுட்டுப் பெயர் வரின், அச்சுட்டுப் பெயர், அம்மூவகைப் பெயர்க்கும் பின்வரும். இங்ஙனம் வருதலே **மரபு.**

# IV. புணர்ச்சி

கந்தன் + வந்தான் = கந்தன் வந்தான்

மா + மரம் = மாமரம்

இவ்வாறு சொற்கள் ஒன்ரேடொன்று சேருவது **புணர்ச்சி** எனப்படும். இவற்றில் முதல் சொல் **நிலைமொழி** எனப்படும் ; வந்து சேரும் மொழி (இரண்டாம் சொல்) **வருமொழி** எனப்படும்.

## 1. இயல்பு புணர்ச்சி - விகாரப் புணர்ச்சி

**1.** மா + மரம் = மாமரம்

↓ நிலைமொழி ↓ வருமொழி ↓ புணர்ச்சி

இவ்வாறு இரண்டு சொற்களும் எவ்வித மாறுதலும் இல்லாமல் புணர்வது **இயல்பு புணர்ச்சி** எனப்படும்.

**2.** (1) அவரை + காய் = அவரைக்காய்...க்

புளி + பழம் = புளியம்பழம்...அம்

அந்த + காக்கை = அந்தக்காக்கை...க்



இவ்வாறு இரண்டு சொற்கள் புணருகையில், இடையில் **எழுத்துக்கள் தோன்றுவது உண்டு.**

(2) பல் + பொடி = பற்பொடி...ல்-ற் ஆனது.

கள் + குடம் = கட்குடம்...ள்-ட் ஆனது.

மண் + குடம் = மட்குடம்...ண்-ட் ஆனது.

இவ்வாறு நிலைமொழியின் கடைசி எழுத்து வருமொழியின் முதலெழுத்தை நோக்கி அதற்கு ஏற்பத் **திரிதலும் உண்டு.**

(3) மரம் + வேர் = மரவேர்...(ம்) கெட்டது.

பெருமை + வள்ளல் = பெருவள்ளல்...(மை) கெட்டது.

பெருமை + நன்மை = பெருநன்மை...(மை) கெட்டது.

இவ்வாறு நிலைமொழியின் ஈற்றெழுத்துச் சில இடங்களில் **கெடுதலும் உண்டு.** இவை முதலிற் கூறிய இயல்பு புணர்ச்சிக்கு மாருக விகாரப்பட்டு வருவதால் **விகாரப் புணர்ச்சி** எனப்படும்.

மேலே சொல்லப்பட்ட மூவகை விகாரப் புணர்ச்சிகளும் முறையே (1) **தோன்றல் விகாரம்,** (2) **திரிதல் விகாரம்,** (3) **கெடுதல் விகாரம்** எனப்படும்.

## 2. உடம்படுமெய்

**1.** கிளி + அழகு = கிளி + (ய்) + அழகு = கிளியழகு

தீ + எரியும் = தீ + (ய்) + எரியும் = தீயெரியும்

பனை + ஓலை = பனை + (ய்) + ஓலை = பனையோலை

இங்கு நிலைமொழி ஈற்றில் **இ-ஈ-ஐ** என்னும் உயிர் எழுத்துக்கள் இருக்கின்றன ; வருமொழி முதலில் உயிர் எழுத்துக்கள் உள்ளன. இவை யிரண்டும் புணரும்போது, இவற்றை **உடம்படுத்த** (ஒன்று சேர்க்க) இடையில் **'ய்'** என்னும் மெய் தோன்றுகிறது. இது **யகர உடம்படுமெய்** எனப்படும்.

**2.** பல + ஆடுகள் = பல + (வ்) + ஆடுகள் = பலவாடுகள்

பலா + இலை = பலா + (வ்) + இலை = பலாவிலை

என்று இவ்வாறு முன் சொன்ன இ-ஈ-ஐ ஒழிந்த ஏனைய உயிர்களின்முன் வருமொழி முதலில் உயிர் வந்தால் இடையில் 'வ்' என்னும் உடம்படுமெய் தோன்றும். இது வகர வுடம்படுமெய் எனப்படும்.

தே + ஆரம் = தே + (வ்) + ஆரம் = தேவாரம்
சே + அடி = சே + (ய்) + அடி = சேயடி
= சே + (வ்) + அடி = சேவடி

'ஏ' என்னும் உயிரெழுத்து நிலைமொழி ஈற்றில் நிற்க, வருமொழி முதலில் உயிர் வந்தால், சில இடங்களில் யகர வுடம்படு மெய்யும், சில இடங்களில் வகர வுடம்படு மெய்யும் தோன்றும் என்பது மேல் வந்த எடுத்துக்காட்டுக்களால் அறியலாம்.

இவ்வாறு இடையில் வந்து உடம்படுத்தும் மெய்யெழுத்து "உடம்படுமெய்" எனப்படும்.

## 3. வேற்றுமைப்புணர்ச்சி—அல்வழிப்புணர்ச்சி

1. நீர் + கொடுத்தான் = நீர் கொடுத்தான்—வேற்றுமைத் தொகை.

நீரை + கொடுத்தான் = நீரைக் கொடுத்தான்.—வேற்றுமை விரி.

இவ்வாறு வேற்றுமை உருபுகள் மறைந்தோ அல்லது வெளிப்பட்டோ வரச் சொற்கள் புணருவது வேற்றுமைப் புணர்ச்சி எனப்படும்.

2. கொல் + யானை = கொல்யானை
கருமை + குதிரை = கருங்குதிரை
பவளம் + வாய் = பவளவாய்.
கபிலர் + பரணர் = கபிலபரணர்
வந்து + போனான் = வந்துபோனான்

இவ்வாறு வரும் வினைத்தொகை முதலியனவும், எழுவாய்த் தொடர் முதலியனவும் அல்வழிப்புணர்ச்சி (வேற்றுமை அல்லாத வகையில் சொற்கள் புணருதல்) எனப்படும்.



## 4. ண, ன—ஈற்றுப்புணர்ச்சி

1. கண் + கடை = கட்கடை
பொன் + தகடு = பொற்றகடு

வேற்றுமைப்புணர்ச்சியில் ண, ன—வல்லினம் (க, த) வர ட, ற ஆயின.

மண் + மாட்சி = மண்மாட்சி
பொன் + மாட்சி = பொன்மாட்சி } மெல்லினம்
மண் + வன்மை = மண்வன்மை
பொன் + வன்மை = பொன்வன்மை } இடையினம்

வேற்றுமைப் புணர்ச்சியில் மெல்லினமும் இடையினமும் (ம, வ) வர, ண,ன இயல்பாயின.

2. மண் + பெரிது = மண்பெரிது
பொன் + பெரிது = பொன்பெரிது
மண் + மாண்டது = மண்மாண்டது
பொன் + மாண்டது = பொன்மாண்டது
மண் + யாது = மண்யாது
பொன் + யாது = பொன்யாது

இவ்வாறு அல்வழிப்புணர்ச்சியில் வல்லினமும், மெல்லினமும், இடையினமுமாகிய மூவினமும்வர, ண,ன இயல்பாயின.

3. தூண் + நன்று = தூணன்று
கோன் + நல்லன் = கோனல்லன்
பசுமண் + நன்று = பசுமணன்று

இவ்வாறு தனிக்குற்றெழுத்தைச் சாராமல் பிற எழுத்துக்களைச் சார்ந்து வரும் ண, ன—அல்வழிப்புணர்ச்சியில் வருமொழி முதலில் வரும் ந திரிந்தவிடத்துத் தாமும் கெடும்.

தூண் + நன்மை = தூணன்மை (ந—ணவாகத் திரிய ண் கெட்டது)

வலியன் + நன்மை = வலியனன்மை (ந—னவாகத் திரிய ன் கெட்டது)

இவ்வாறு வேற்றுமைப் புணர்ச்சியிலும் நகரம் கெடும்.

4. (1) பாண் + தொழில் = பாண்டொழில்—சாதிப்பெயர்
அமண் + சேரி = அமண்சேரி—குழூஉப்பெயர்

என வேற்றுமைப் புணர்ச்சியிலும் ண வல்லினம் வர இயல்பாயிற்று.

(2) எண் + பெரிது = எட்பெரிது
சாண் + கோல் = சாட்கோல்

அல்வழிப் புணர்ச்சியிலும் ண, வல்லினம் வரத் திரிந்தது.

(3) எண் + பெரிது = எண்பெரிது
சாண் + கோல் = சாண்கோல்

என்று அல்வழிப் புணர்ச்சியில் இயல்பாக வருதலே சிறப்பு.

(4) பாண் + குடி = பாணக்குடி
அமண் + சேரி = அமணச்சேரி

என்று சாதிப் பெயர்களும் குழூஉப் பெயர்களும் 'அ' என்னும் சாரியை பெறுவதும் உண்டு.

(5) மண் + குடம் = மட்குடம்
பொன் + குடம் = பொற்குடம்

என வேற்றுமையில் வல்லினம் வர ணகர னகரங்கள் முறையே டகர றகரங்களாகத் திரிந்தன.

(6) தேன் + மொழி = தேன்மொழி
தேன் + மொழி = தேமொழி

இவ்வாறு அல்வழிப்புணர்ச்சியில் னகரத்தின் முன் மெல்லினம் வரின் அந்த னகரம் இயல்பாதலும் உண்டு; அழிதலும் உண்டு.

(7) தேன் + மலர் = தேன்மலர்
தேன் + மலர் = தேமலர்

இவ்வாறு வேற்றுமைப் புணர்ச்சியிலும் னகரம் இயல்பாதலும் உண்டு; அழிதலும் உண்டு.



(8) தேன் + குழம்பு = தேன்குழம்பு - இயல்பாயிற்று.
= தேக்குழம்பு - வலிமிக்கது.
= தேங்குழம்பு - மெலிமிக்கது.

இவ்வாறு அல்வழிப் புணர்ச்சியில் னகரத்தின் முன் வல்லினம் வரின் அந்த னகரம் இயல்பாதலும் உண்டு; அன்றி, அது கெட்டு, வந்த வல்லினம் மிகுதலும் உண்டு; மெல்லினம் மிகுதலும் உண்டு.

(9) தன் + பகை = தன்பகை
= தற்பகை
என் + பகை = என்பகை
= எற்பகை

இவ்வாறு வல்லினம் வர, ன் உறழ்தலும் உண்டு.

## 5. ல, ள—ஈற்றுப்புணர்ச்சி

1. கால் + பொறை = காற்பொறை...ல் - ற் ஆனது.
முள் + குறை = முட்குறை...ள் - ட் ஆனது.

இது வேற்றுமைப் புணர்ச்சி.

2. கால் + குறிது = கால் குறிது, காற்குறிது
முள் + குறிது = முள்குறிது, முட்குறிது

இவ்வாறு அல்வழிப்புணர்ச்சியில் வல்லினம் வர, ல், ள் உறழ்ந்து வந்தன.

3. கல் + நெரிந்தது = கன்னெரிந்தது...ல் - ன் ஆனது.
வாள் + மாண்டது = வாண்மாண்டது...ள் - ண் ஆனது.

இஃது அல்வழிப் புணர்ச்சி; வருமொழி முதலில் மெல்லினம் வந்துள்ளது.

4. கல் + மலை = கன்மலை...ல் - ன் ஆனது.
வாள் + மாண்பு = வாண்மாண்பு...ள் - ண் ஆனது.

இது வேற்றுமைப் புணர்ச்சி; வருமொழி முதலில் மெல்லினம் வந்தது.

5. கால் + யாது = கால்யாது
முள் + வலிது = முள்வலிது

அல்வழிப்புணர்ச்சியில் ல், ள் முன் இடையினம் வர ல், ள் இயல்பாயின.

6. கல் + யானை = கல்யானை
தோள் + வலிமை = தோள்வலிமை

வேற்றுமைப்புணர்ச்சியில் ல், ள் இடையினம் வர, இயல்பாயின.

7. கல் + தீது = கஃறீது
முள் + தீது = முஃடீது

இவ்வாறு தனிக்குறிலின் பின் நின்ற ல், ள்—அல்வழிப் புணர்ச்சியில் வருமொழி முதலில் த வர, முன் சொன்னபடி றகர டகர மெய்களாகத் திரிதலே அன்றி, ஆய்தமாகத் திரிந்தும் வரும்.

8. வேல் + படை = வேற்படை
வாள் + படை = வாட்படை

அல்வழிப்புணர்ச்சியில் வல்லினம் வர, ல், ள்—ற், ட் ஆகத் திரிந்தன.

9. இல் + பொருள் = இல்லை பொருள்
= இல்லைப் பொருள்

இங்கு ல் என்பது ஐகாரச் சாரியை பெற, வருமொழி முதலில் வந்த வல்லினம் மிக்கும் மிகாமலும் வந்தது.

10. இல் + பொருள் = இல்லாப் பொருள்

இங்கு ல் என்பது 'ஆ' சாரியை பெற, வந்த வல்லினம் மிக்கது.

11. இல் + பொருள் = இல்பொருள்

இவ்வாறு இயல்பாக வருதலும் உண்டு.

12. புள் + கடிது = புள்ளுக்கடிது
புள் + நன்று = புள்ளுநன்று
புள் + வலிது = புள்ளுவலிது



இவ்வாறு புள், வள் என்னும் இரண்டு சொற்களும் அல்வழிப்புணர்ச்சியில் யகரம் அல்லாத மெய்கள் வந்தால் 'உ' என்னும் சாரியை பெற்றும் புணரும்.

13. புள் + கடுமை = புள்ளுக்கடுமை
புள் + நன்மை = புள்ளுநன்மை
புள் + வன்மை = புள்ளுவன்மை

இவ்வாறு புள், வள் என்னும் இரண்டு சொற்களும் வேற்றுமைப் புணர்ச்சியிலும் யகரம் அல்லாத மெய்கள் வந்தால், 'உ' என்னும் சாரியை பெற்றும் புணரும்.

## 6. குற்றியலுகரப் புணர்ச்சி

(ட் + உ) (ட் + உ)
↓ ↓

1. **குற்றியலுகரம்:** படு, பாடு— இவ்விரண்டையும் உச்சரித்துப் பாருங்கள். முதல் டு வ்விலுள்ள உகரத்தை விட இரண்டாம் டு வ்விலுள்ள உகரம் ஓசையிற் குறைந்து இயல்வதைக் காணலாம். இயல்பான குறில் ஒரு மாத்திரை ஓசை உடையது. ஆதலால் முதல் உகரம் ஒரு மாத்திரை ஓசை உடையது. அதைவிடக் குறைந்து இயலும் இரண்டாம் உகரம் அரை மாத்திரை ஓசை உடையது. இவ்வாறு குறைந்து இயலும் உகரம் குற்றியல் உகரம் எனப்படும்.

குற்றியல் உகரம் தனி நெட்டெழுத்துக்குப் பின்னும், இரண்டு முதலிய எழுத்துக்களுக்குப் பின்னும், சொல்லின் கடைசியில் வல்லின மெய்களின் மேல் ஏறிவரும்.

2. **குற்றியலுகர வகை:** இக்குற்றியலுகரம் ஈற்றுக்கு அயல் எழுத்தை நோக்க ஆறு வகைப்படும். கீழ்வரும் உதாரணங்களைக் காண்க:

ட் + உ
(1) பட்டு ↓ வன்றொடர்க் குற்றியலுகரம்.
↓
(வல்லினம்)

ட் + உ

(2) தொண்டு ↓ மென்றொடர்க் குற்றியலுகரம்.

↓

(மெல்லினம்)

த் + உ

(3) வீழ்து ↓ இடைத் தொடர்க் குற்றியலுகரம்.

↓

(இடையினம்)

ட் + உ

(4) மாடு ↓ நெடிற்றொடர்க் குற்றியலுகரம்.

↓

(தனி நெடில்)

ற் + உ

(5) பயறு ↓ உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்.

↓

(ய் + அ + உயிர்)

த் + உ

(6) அஃது ↓ ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்.

↓

(ஆய்தம்)

3. முற்றியலுகரம் : படு, நுங்கு—டு வ்வில் உள்ள உகரமும், நு வ்வில் உள்ள உகரமும் ஒரு மாத்திரை ஓசை உடையவை. இங்ஙனம் ஒரு மாத்திரை ஓசை உடைய உகரம் முற்றியல் உகரம் எனப்படும்.

4. குற்றியலிகரம் :

| | | |
|---|---|---|
| நாடு | + யாது | = நாடியாது |
| பட்டு | + யாது | = பட்டியாது |
| குரங்கு | + யாது | = குரங்கியாது |

நாடு, பட்டு முதலிய சொற்களின் ஈற்றிலுள்ள குற்றியலுகரம், வருமொழி முதலில் யகரம் வந்ததால் இகரமாகத் திரிந்தது. இங்ஙனம் திரியும் இகரம் குற்றியலிகரம் எனப்படும். இதன் மாத்திரை அரை.



### குற்றியலுகரப் புணர்ச்சி

(1) காசு + இல்லை = காசில்லை

பட்டு + உண்டு = பட்டுண்டு

இவற்றால், குற்றியலுகரத்தின் முன் வருமொழி முதலில் உயிர்வரின், குற்றியலுகரம் தான் ஏறியுள்ள மெய்யை விட்டுக் கெடும் என்பது தெரிகிறது.

(2) நாடு + யாது = நா (ட் + உ) + யாது

= நா (ட் + இ) + யாது

= நாடியாது

பட்டு + யாது = பட் (ட் + உ) + யாது

= பட் (ட் + இ) + யாது

= பட்டியாது

இவ்வாறு வருமொழி முதலில் யகரம் வரின், குற்றியலுகரம் குற்றியலிகரமாகத் திரியும்.

(3) செலவு + ஆயிற்று = செல (வ் + உ) + ஆயிற்று

= செல + வ் + ஆயிற்று

= செலவாயிற்று.

வருமொழி முதலில் உயிர்வரின், குற்றியலுகரம் போலவே முற்றியலுகரமும் தான் ஏறியுள்ள மெய்யை விட்டுக் கெடும் என்பதை அறிக.

(4) செலவு + யாது = செல (வ் + உ) + யாது

= செல (வ் + இ) + யாது

= செலவியாது

ய வரின், குற்றியலுகரம் போலவே முற்றியலுகரமும் சில இடங்களில் இகரமாகத் திரியும்.

(5) எழுத்து + கோணல் = எழுத்துக் கோணல்

(வேற்றுமைப் புணர்ச்சி)

எழுத்து + சிறியது = எழுத்துச் சிறியது

(அல்வழிப் புணர்ச்சி)

கழுத்து + பட்டை = கழுத்துப் பட்டை
(வேற்றுமைப் புணர்ச்சி)

கழுத்து + குறுகியது = கழுத்துக் குறுகியது
(அல்வழிப் புணர்ச்சி)

இங்ஙனம் வன்றொடர்க் குற்றியலுகரத்தின் முன்வரும் வல்லினம் வேற்றுமைப் புணர்ச்சியிலும் அல்வழிப் புணர்ச்சியிலும் மிகும்.

(6) 1. நண்டு + கால் = நண்டுக்கால் } வேற்றுமைப்
குரங்கு + தலை = குரங்குத்தலை } புணர்ச்சி

2. நண்டு + பெரியது = நண்டு பெரியது } அல்
குரங்கு + பெரியது = குரங்கு பெரியது } வழிப்
புணர்ச்சி

இவ்வாறு மென்றொடர்க் குற்றியலுகரத்தின் முன்வரும் வல்லினம் வேற்றுமைப் புணர்ச்சியில் மிகும்; அல்வழியில் மிகா.

(7) ஆறு + பாலம் = ஆற்றுப்பாலம்
காடு + பாதை = காட்டுப்பாதை
சேறு + பாக்கம் = சேற்றுப்பாக்கம்
ஆடு + கால் = ஆட்டுக்கால்
வயிறு + வலி = வயிற்றுவலி
சோறு + பை = சோற்றுப்பை

இவ்வாறு நெடிற்றொடர் உயிர்த்தொடர்க் குற்றியலுகரங்களில் உள்ள டகர றகர மெய்கள், வருமொழியோடு சேரும் போது, பெரும்பாலும் இரட்டிக்கும். அவ்வாறு இரட்டித்தவற்றின் முன் வரும் வல்லினம் மிகும்.

## 7. வல்லெழுத்து மிகும் இடங்கள்

1. (1) ஆற்றை + கட = ஆற்றைக் கட
(2) பாலை + பருகு = பாலைப் பருகு
(3) படத்தை + பார் = படத்தைப் பார்

இவ்வாறு இரண்டாம் வேற்றுமை விரிக்கு முன்வரும் க, ச, த, ப மிகும்.

2. (1) காட்டுக்கு + போ = காட்டுக்குப் போ
(2) வீட்டிற்கு + செல் = வீட்டிற்குச் செல்
(3) வேலைக்கு + கூலி = வேலைக்குக் கூலி



இவ்வாறு நான்காம் வேற்றுமை விரிக்கு முன்வரும் க, ச, த, ப மிகும்.

3. (1) வர + சொல் = வரச் சொல்
(2) போக + போகிறாயா = போகப் போகிறாயா?
(3) இருக்க + கூடாதா = இருக்கக் கூடாதா?

இவ்வாறு அகர ஈற்று நிகழ்கால வினையெச்சங்களுக்கு முன்வரும் வல்லினம் மிகும்.

4. (1) நன்றாய் + பேசினார் = நன்றாய்ப் பேசினார்
(2) தொலைவாய் + சென்றார் = தொலைவாய்ச் சென்றார்
(3) ஒழுங்காய் + காட்டு = ஒழுங்காய்க் காட்டு

இவ்வாறு ஆய் ஈற்று வினையெச்சங்களுக்கு முன்னும் வல்லினம் மிகும்.

5. (1) ஓடி + பார் = ஓடிப் பார்
(2) தேடி + காண் = தேடிக் காண்
(3) ஊதி + செல் = ஊதிச் செல்

இவ்வாறு இகர ஈற்று வினையெச்சங்களின் முன்வரும் க, ச, த, ப மிகும்.

6. (1) அ + கண்ணாடி = அக்கண்ணாடி
(2) இ + படை = இப்படை
(3) எ + தடை = எத்தடை

இவ்வாறு சுட்டு எழுத்துக்களுக்கு முன்னும், 'எ' கர வினாவின் முன்னும், மொழி முதலில்வரும் வல்லினம் மிகும்.

7. (1) அந்த + காக்கை = அந்தக்காக்கை
(2) அங்கு + போ = அங்குப்போ
(3) எப்படி + செய்தான் = எப்படிச்செய்தான்

இவ்வாறே அந்த, இந்த, எந்த, அங்கு, இங்கு, எங்கு, அப்படி, இப்படி, எப்படி என்பனவற்றின் முன்வரும் க, ச, த, ப க்கள் மிகும்.

8. (1) ஆடு + கால் = ஆட்டுக்கால்
(2) வீடு + தோட்டம் = வீட்டுத்தோட்டம்
(3) காடு + பசு = காட்டுப்பசு

இவ்வாறு நெடில் தொடர்க் குற்றியலுகரத்தின் முன்வரும் வல்லினம் மிகும்.

9. உயிர்த் தொடர்க் குற்றியலுகரம் மென்றொடர்க் குற்றியலுகரம் வன்றொடர்க் குற்றியலுகரம் ஆகியவற்றிற்கு முன் வரும் வல்லினம் மிகும் என்பதைக் குற்றியலுகரப் புணர்ச்சியில் காணலாம்.

10. அறியா + பிள்ளை = அறியாப்பிள்ளை
விளங்கா + கேள்வி = விளங்காக்கேள்வி
அடங்கா + கோபம் = அடங்காக்கோபம்
உண்ணு + குதிரை = உண்ணுக்குதிரை

இவ்வாறு ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்களுக்கு முன்னும் வல்லினம் மிகும்.

11. (1) தாய் + பறவை = தாய்ப்பறவை
(2) வாய் + கால் = வாய்க்கால்
(3) தயிர் + சட்டி = தயிர்ச்சட்டி
(4) தமிழ் + கல்வி = தமிழ்க்கல்வி
(5) மோர் + குழம்பு = மோர்க்குழம்பு

இவ்வாறு 'ய், ர், ழ்' களுக்கு முன்னும் க, ச, த, ப க்கள் மிகும்.

12. பெய்யாக் கொடுக்கும்
"புரண்டு வீழாப் பெருநிலத்தில்"
கேளாக் கொடுத்தான்

என்பன போன்ற, 'செய்யா' என்னும் வாய்பாட்டு வினையெச்சங்களுக்கு முன்னும் க, ச, த, ப க்கள் மிகும்.

13. (1) இரும்பு + பாதை = இருப்புப்பாதை
(2) செம்பு + குடம் = செப்புக்குடம்

'இரும்பு, செம்பு' என்பன மென்றொடர்க் குற்றியலுகரங்கள். இவை புணருங்கால் முறையே 'இருப்பு, செப்பு' என



வன்றொடர்க் குற்றியலுகரங்களாகும்; அப்பொழுது வருமொழியில் உள்ள வல்லினம் மிகும்.

14. தீ + சட்டி = தீச்சட்டி
பூ + பந்தல் = பூப்பந்தல்
ஈ + காடு = ஈக்காடு

இவ்வாறு தீ, பூ, ஈ முதலிய ஓரெழுத் தொருமொழிகளுக்குப் பின்வரும் க, ச, த, ப க்கள் மிகும்.

15. (1) பண்டு + காலம் = பண்டைக்காலம்
(2) இன்று + கூலி = இற்றைக்கூலி
(3) இரண்டு + பிள்ளை = இரட்டைப்பிள்ளை

இவ்வாறு ஐகாரச்சாரியை பெற்ற குற்றியலுகரச் சொற்களுக்குப் பின்னும் க, ச, த, ப க்கள் மிகும்.

16. (1) மன்றம் + சாமியார் = மன்றத்துச்சாமியார்
(2) பத்து + பத்து = பதிற்றுப்பத்து

இவ்வாறு அத்து, இற்று என்னும் சாரியை பெற்று வரும் பெயர்கட்குப் பின்னும் க,ச,த,ப க்கள் மிகும்.

## 8. வல்லெழுத்து மிகா இடங்கள்

1. (1) நல்ல + காலம் = நல்ல காலம்
(2) படித்த + பையன் = படித்த பையன்

இவ்வாறு பெயரெச்சங்கட்கு முன்வரும் க, ச, த, ப க்கள் மிகா.

2. (1) கொன்று + தின்றது = கொன்று தின்றது
(2) வந்து + போனான் = வந்து போனான்

இவ்வாறு சில வினையெச்சங்கட்கு முன்வரும் க, ச, த, ப க்கள் மிகா.

3. (1) தம்பீ + கேள் = தம்பீ கேள்
(2) வாழ்க + தமிழ் = வாழ்க தமிழ்
(3) புலி + பாய்ந்தது = புலி பாய்ந்தது

இவ்வாறு விளி, வியங்கோள், எழுவாய்த் தொடர்கட்கு முன்னும் க, ச, த, ப க்கள் மிகா.

4. (1) ஏழு + பணம் = ஏழு பணம்
(2) ஒரு + தாய் = ஒரு தாய்
(3) மூன்று + கன்றுகள் = மூன்று கன்றுகள்

இவ்வாறு எண்ணுப் பெயரின் முன்னும் க, ச, த, ப க்கள் மிகா.

5. (1) கல்வி + கேள்வி = கல்வி கேள்வி
(2) நன்மை + தீமை = நன்மை தீமை

இவ்வாறு உம்மைத் தொகையிலும் க, ச, த, ப க்கள் மிகா.

6. (1) போயின + குதிரைகள் = போயின குதிரைகள்
(2) நடந்தன + பசுக்கள் = நடந்தன பசுக்கள்

இவ்வாறு வினைமுற்றுத் தொடர்களுக்கு முன்வரும் வல்லினம் மிகா.

7. (1) வீழ் + புனல் = வீழ் புனல்
(2) காய் + கதிர் = காய் கதிர்

இவ்வாறு வினைத்தொகைக்கு முன்வரும் வல்லினம் மிகா.

8. (1) யா + போயின = யா போயின
(2) யா + சொன்னுன் = யா சொன்னுன்

இவ்வாறு யா என்னும் வினவிற்கு முன்வரும் வல்லினம் மிகா.

9. (1) கதை + சொல் = கதை சொல்
(2) உரைநடை + கற்பி = உரைநடை கற்பி

இவ்வாறு இரண்டாம் வேற்றுமைத் தொகை முன்வரும் வல்லினம் மிகா.

10. (1) முருகனேடு + பேசு = முருகனேடு பேசு
(2) வீட்டிலிருந்து + புறப்படு = வீட்டிலிருந்து புறப்படு

இவ்வாறு மூன்ரும் வேற்றுமை விரி முன்னும், ஐந்தாம் வேற்றுமை விரி முன்னும் வரும் வல்லினம் மிகா.

11. (1) கண்ணகி + கற்பு = கண்ணகி கற்பு
(2) எனது + புத்தகம் = எனது புத்தகம்



இவ்வாறு ஆரும் வேற்றுமைத் தொகை முன்னும் விரி முன்னும் க, ச, த, ப க்கள் மிகா.

12. (1) இரண்டு + காய்கள் = இரண்டு காய்கள்
(2) நான்கு + பழங்கள் = நான்கு பழங்கள்

இவ்வாறு எட்டு, பத்து ஒழிந்த உயிரீற்று எண்ணுப் பெயர்களுக்கு முன்வரும் வல்லினம் மிகா.

## 9. செய்யுள் விகாரங்கள்

1. "அற்புக்கு ஆழியன் ஞன்அரிச் சந்திரன்"— 'அன்பு' என்னும் சொல் 'அற்பு' என்று (மெல்லினம் வல்லினமாகத்) திரிந்து நின்றது. இது வலித்தல் விகாரம் எனப்படும்.

2. "தண்டையின் இனக்கிளி கடிவோள், பண்டைய ளல்லள் மானேக் கினளே."—இங்குத் 'தட்டை' என்னும் சொல் 'தண்டை' என்று வந்தது; அதாவது, மெல்லினமாகத் திரிந்தது. இது மெலித்தல் விகாரம் ஆகும்.

3. "கற்பக நீழலைக் காக்கும் தேவர்."—இங்கு 'நிழல்' என்னும் சொல்லின் முதல் 'நீழல்' என நீண்டு வந்தது. இது நீட்டல் விகாரம் எனப்படும்.

4. "நன்றென்றேன் தியேன்."—இங்குத் 'தீயேன்' என்னும் சொல் 'தியேன்' என்று குறுகி வந்தது. இது குறுக்கல் விகாரம் ஆகும்.

5. "அமைபவன் நூலுரை ஆசிரி யன்னே."—இங்கு 'ஆசிரியனே' என்று இருக்கவேண்டிய சொல், 'ஆசிரி யன்னே' என்று னகர மெய் விரிந்து வந்தது. ஆகவே, இது விரித்தல் விகாரம் எனப்படும்.

6. "தருகெனத் தந்து"—ஈண்டுத் 'தருக' என்ற சொல்லும், 'என' என்ற சொல்லும் புணர்ந்தன. இவ்வாறு புணருங்கால், 'தருக+என=தருகவென' என்று வகரவுடம் படுமெய் இடையில் வருதல் வேண்டும். இவ்வாறின்றி, 'தருக' என்பதன் ஈற்றில் உள்ள அகரம் தொகுத்துத் 'தருகென' என நின்றது. இவ்வாறு அகரம் தொக்கது தொகுத்தல் விகாரம் எனப்படும்.

## முதற் குறை முதலியன

1. "மரையிதழ் புரையும் அஞ்செஞ் சீறடி"—இங்குத் 'தாமரை' என்ற சொல் 'மரை' என வந்தது. இவ்வாறு சொல்லின்கண் உள்ள முதல் எழுத்துக் குறைந்தது முதற் குறை விகாரம் ஆகும்.

2. "ஓதி முது போத்து"—இங்கு முதலில் உள்ள 'ஓதி' என்ற சொல் 'ஓந்தி' என்ற சொல்லின் விகாரமேயாகும். 'ஓந்தி' என்பது ஓணான். இச்சொல்லின் இடையில் உள்ள ஒரெழுத்துக் குறைந்து வந்துள்ள காரணத்தால், இஃது இடைக்குறை விகாரம் எனப்படும்.

3. "நீல் உண் துகிலிகை கடுப்ப"—இங்கு 'நீலம்' என்னும் சொல்லே 'நீல்' என்று கடைசியில் உள்ள எழுத்துக்கள் குறையப்பெற்று நின்றது. கடைசியில் குறைந்து வரும் இவ்விகாரம் கடைக்குறை விகாரம் எனப்படும்.

வலித்தல் முதலிய ஆறு விகாரங்களும் முதற் குறை முதலிய மூன்று விகாரங்களும் செய்யுளுக்கே உரியவை. இவற்றுள் முதற் குறை முதலிய மூன்றும் பகாப்பதத்தில் மட்டுமே அமையும்.

### பயிற்சி

1. புணர்ச்சி என்பது யாது?

2. இயல்பு புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி—இவற்றை உதாரணந் தந்து விளக்குக.

3. அல்வழிப் புணர்ச்சி, வேற்றுமைப் புணர்ச்சி—இவற்றை விளக்குக.

4. கீழ்வருவன எவ்வாறு புணர்ந்தன?

மண் + குதிரை, மண் + மலை, பொன் + தகடு, தன் + பகை, பால் + குடம், கள் + குடம், கல் + குறிது, பால் + மணம், வாள் + மாண்பு, குரிசில் + தீயன், வேள் + தீயன், குரிசில் + நல்லன், வேள் + நல்லன்.

5. உடம்படுமெய்யை உதாரணத்தால் விளக்குக.



6. கீழ்வருவனவற்றைப் பிரித்துப் புணர்ச்சி இலக்கணம் கூறுக:—

பட்டாடை, நாடியாது, கதவடை, அக்குதிரை, இந்நிலை, உவ்வீடு.

7. வல்லினம் மிகும் இடங்கள் எவை? ஒவ்வொன்றுக்கும் சான்று தருக.

8. தோன்றல், திரிதல், கெடுதல்—விகாரங்களுக்கு உதாரணங்கள் தருக.

9. செய்யுள் விகாரங்கள் ஆறு எவை? உதாரணத்தால் விளக்குக.

10. முதற்குறை, இடைக்குறை, கடைக்குறை—இவற்றைச் சான்று காட்டி விளக்குக.

11. குற்றியலுகரம் என்பது யாது? விளக்குக.

12. அறுவகைக் குற்றியலுகரங்களையும் விளக்கிக் காட்டுக.

13. காசு + இல்லை, பட்டு + உண்டு, செலவு + ஆயிற்று, எழுத்து + சிறிது, குரங்கு + கால், ஆறு + பாலம்—இவற்றைச் சேர்த்துப் புணர்ச்சி விதி கூறுக.

14. வல்லினம் மிகா இடங்கள் எவை?

# V. பிழையும் திருத்தமும்

## 1. சொற்பிழைகளும் திருத்தமும்

1. பார்க்கிறது என்பது இலக்கணச்சொல். இதனைப் பொதுமக்கள் பாக்குது எனப் பிழைபட வழங்குகின்றனர். இவ்வாறு அகமுடையாள் என்பதை ஆம்படையாள் என்றும், அகத்துக்காரி என்பதை ஆத்துக்காரி என்றும், உபாத்தியாயர் என்பதை வாத்தி என்றும், ஒன்றி என்பதை ஒண்டி என்றும் பலவாறு பிழைபட வழங்குகின்றனர். இங்ஙனம் பிழைபட வழங்குவதால் இவை வழக்கில் வேரூன்றிவிடுகின்றன; உருச்சிதைந்து மருவி வழங்குகின்றன. ஆசிரியர்களும் பெற்றோர்களும் மற்றோர்களும் இவற்றைத் திருத்திச் செம்மையான

சொற்களை வழங்கும்படி பயிற்சி அளிக்கவேண்டும். மாணவப் பருவத்திலேயே இவ்வழுக்கள் திருத்தப்படுதல் நலம். இங்ஙனம் பிழைபட வழங்கப்பெறும் சொற்களில் சிலவற்றைக் கீழே காண்க :

| வழுச்சொல் | திருத்தம் |
|---|---|
| கோடாலி | கோடரி |
| தலகாணி | தலையணை |
| நிகளம் | நீளம் |
| தவக்களை | தவளை |
| மச்சான் | மைத்துனன் |
| போகச்சே | போகும்பொழுது |
| வரச்சே | வரும்பொழுது |
| அலமேலு | அலர்மேல் |
| ரொம்ப | நிரம்ப |
| வாங்கிண்டு | வாங்கிக்கொண்டு |
| அரணாக்கயிறு<br>அண்ணாக்கயிறு } | அரைஞாண் |
| இடை (நிறை) | எடை |
| ஊரணி | ஊருணி |
| என்னமோ | என்னவோ |
| எண்ணை | எண்ணெய் |
| எம்பளது | எண்பது |
| ஏழரைநாட்டுச் சனியன் | ஏழரையாட்டைச் சனியன் |
| கண்ணாலம் | கலியாணம் |
| கார்க்கும் | காக்கும் |
| சக்களத்தி | சகக்கழுத்தி |
| சிலவு | செலவு |
| சுவற்றில் | சுவரில் |
| சுந்திரம் | சுந்தரம் |
| வெந்நித் தண்ணி | வெந்நீர் |
| பச்சைத்தண்ணி | தண்ணீர் |
| (தண்ணீர்க்) கொளாய் | (தண்ணீர்க்) குழை |



## 2. எழுத்துப் பிழைகளும் திருத்தமும்

1. பிள்ளைகள் தம் கட்டுரைகளில் ர, ற வேறுபாடு தெரியாமல் எழுதும் சொற்களுள் சிலவற்றையும் அவற்றின் திருத்தத்தையும் கீழே காண்க :

| பிழை | திருத்தம் |
|---|---|
| உறிய | உரிய |
| திரவுகோல் | திறவுகோல் |
| வரலாரு | வரலாறு |
| தவராகும் | தவறாகும் |
| தெறியாமல் | தெரியாமல் |
| மறியாதை | மரியாதை |
| பிருமணன் | பிராமணன் |
| ஏரினான் | ஏறினான் |
| கூறை வீடு | கூரை வீடு |
| நிரைய | நிறைய |

2. இவ்வாறே பிள்ளைகள் ல, ள, ழ வேறுபாடு அறியாமல் செய்யும் பிழைகள் பல. அவற்றுள் சிலவற்றையும் அவற்றின் திருத்தத்தையும் கீழே காண்க :

| பிழை | திருத்தம் |
|---|---|
| பளக்கம் | பழக்கம் |
| வளிகள் | வழிகள் |
| வழரும் | வளரும் |
| மகழுக்கு | மகளுக்கு |
| தெழிவு | தெளிவு |
| கேழ்வி | கேள்வி |

3. இங்ஙனம் ந, ண, ன வேறுபாடு அறியாமல் பிள்ளைகள் சில தவறுகள் செய்கின்றனர். அவற்றுள் சிலவற்றையும் அவற்றின் திருத்தத்தையும் கீழே காண்க :

| பிழை | திருத்தம் |
|---|---|
| உன்டாகின்ற | உண்டாகின்ற |
| கற்பணா சக்தி | கற்பனா சக்தி |

| பிழை | திருத்தம் |
|---|---|
| தன்டணை | தண்டனை |
| காரனம் | காரணம் |
| ஜன்து | ஐந்து |
| தன்னீர் | தண்ணீர் |

4. ஷ, ஸ, ஹ, க்ஷ, ஜ போன்ற வடமொழி எழுத்துக்களைச் சரியாக வழங்கத் தெரியாமலும், தமிழ் முறைப்படி மாற்றத் தெரியாமலும், ஒன்றை மற்றொன்றாகக் கருதியும் சில பிள்ளைகள் பிழைபட எழுதுகின்றனர். அவற்றுள் சிலவற்றையும் அவற்றின் திருத்தங்களையும் கீழே காண்க :

| பிழை | திருத்தம் |
|---|---|
| காக்ஷி | காட்சி (தமிழ்ச் சொல்) |
| புஸ்பம் | புஷ்பம் |
| சாட்க்ஷி | சாக்ஷி |
| வய்ஷ்ணவர்கள் | வைஷ்ணவர்கள் |
| பக்சணம் | பக்ஷணம் |
| மாக்ஷி | மாட்சி (தமிழ்ச் சொல்) |

5. வடசொற்களில் றகரத்தைச் சிலர் தவறாகச் சேர்த்து எழுதுகின்றனர். அதனால் வரும் பிழைகளையும் அவற்றுக்குரிய திருத்தங்களையும் கீழே காண்க :

| பிழை | திருத்தம் |
|---|---|
| றாமசாமி | (இ) ராமசாமி |
| ஈஸ்வறன் | ஈசுவரன் |
| நாறாயணன் | நாராயணன் |

6. சொல்லுக்கு இடையில் ற், ல், ள் என்ற எழுத்துக்கள் வேறு எந்த மெய்யெழுத்தோடும் இணைந்து வாரா; உயிர்மெய் எழுத்துக்களோடுதாம் இணைந்து வரும்; இரட்டித்தால் றகர, லகர, ளகரங்களாகத்தான் (உயிர்மெய் எழுத்தாகத்தான்) இரட்டிக்கும். இதனை அறியாது, மாணவர் செய்யும் தவறுகள் பல. அவர்கள் செய்யும் சில தவறுகளையும் அவற்றின் திருத்தங்களையும் கீழே காண்க :



| பிழை | திருத்தம் |
|---|---|
| கற்க்கும் | கற்கும் |
| கல்த்தரை | கல்தரை |
| கோள்ச் சொன்னான் | கோள் சொன்னான் |
| தெற்க்கு | தெற்கு |
| போல்த் தோன்றும் | போல் தோன்றும் |
| அதற்க்கு | அதற்கு |
| பற்ப்பல | பற்பல |
| கட்க்குடி | கட்குடி |
| பல்ப்பொடி | பல்பொடி |
| கற்ப்பித்தான் | கற்பித்தான் |

## 3. செய்தித் தாள்கள்

(1) ஒரு ஸ்திரீ கைதானாள்
(2) பஸ்ஸும் ரிக்ஷாவும் மோதிக்கொண்டது
(3) சபாநாயகர் கர்ஜனை
(4) கும்பகோணத்தில் கலாட்டா

இவ்வாறு தமிழ் நாள் இதழ்களில் பல தலைப்புக்களைக் காணலாம். இவற்றைக் கீழ்வருமாறு பிழையற்ற முறையில் எழுதலாம் :

(1) ஒரு பெண் சிறைப்பட்டாள்.
(2) பஸ்ஸும் ரிக்ஷாவும் மோதிக்கொண்டன.
(3) அவைத் தலைவர் முழக்கம்.
(4) கும்பகோணத்தில் குழப்பம்.

பெரும்பாலான நாள் இதழ்களில் தமிழ்ப் புலமையுடையவர் இல்லாத குறையால் அவ்விதழ்களில் பிறமொழிச் சொற்கள் மிகுதியாக வருகின்றன. தமிழ்ப் புலமையுடையார் நாள் இதழ் அலுவலகங்களில் பணியாற்றுவாராயின், அத்தாள்களில் நல்ல தமிழை எதிர்பார்க்கலாம். மதுரையிலிருந்து வெளியாகும் ‘தமிழ் நாடு’ என்னும் நாள் இதழில் பெரும்பாலும் பிழையற்ற தமிழ்ச் சொற்களைக் காணலாம். பிற செய்தித் தாள்களில் வரும் சொற்களையும் சொற்றொடர்களையும், ‘தமிழ்

நாடு' இதழில் வரும் சொற்களையும் சொற்றொடர்களையும் கீழே கண்டு உண்மை தெளிக :

| பிற செய்தித் தாள்கள் | 'தமிழ்நாடு' இதழ் |
|---|---|
| (1) காங்கிரஸ் கமிட்டி | காங்கிரசுக் குழு |
| (2) கோயம்புத்தூர் ஜில்லா | கோவை மாவட்டம் |
| (3) சர்வ கலாசாலை | பல்கலைக் கழகம் |
| (4) மூன்று வருஷப் பட்டம் | மூன்று ஆண்டுப் பட்டம் |
| (5) ஸ்தாபனம் | நிறுவனம் |
| (6) உண்ணுவிரதம் | உண்ணு நோன்பு |
| (7) பந்தோபஸ்துக் கவுன்ஸில் | பாதுகாப்புக் குழு |
| (8) மெஜாரிட்டி ஸ்தானங்கள் | பெரும்பான்மை இடங்கள் |
| (9) மாஜி முதல் மந்திரி | முன்னுள் தலைமையமைச்சர் |
| (10) வாசகசாலை | படிப்பகம் |
| (11) ஓட்டர் ஜாபிதா | வாக்காளர் பட்டியல் |
| (12) காரியதரிசி | செயலாளர் |
| (13) காரியக் கமிட்டி | செயற் குழு |
| (14) பிரேரேபித்தார் | முன்மொழிந்தார் |
| (15) அங்கத்தினர் | உறுப்பினர் |

தாய்மொழி வளர்ச்சியில் நாட்டமும் உண்மைத் தமிழ்ப் புலமையும் உடையவர் செய்தித்தாள் அலுவலகங்களில் இருப்பின், செய்தித்தாள்களில் நல்ல தமிழ்ச் சொற்களையும் எளிய இனிய செந்தமிழ் நடையையும் காணலாம். அத்தாள்களைப் படிக்கும் பொதுமக்களும் நாளடைவில் நல்ல தமிழ்ச் சொற்களைக் கற்றுக்கொள்வர்.

## 4. பெயர்ப் பலகைகள்

1. தமிழ் நாட்டுச் சிற்றுண்டி விடுதிகளில் உள்ள பெயர்ப் பலகைகளில் பிழைபட்ட தமிழ்ச் சொற்களைக் காணலாம். அவற்றோடு ஆங்கிலச் சொற்கள் தமிழ் எழுத்துக்களில் வரையப்பட்டுள்ளன. இவையனைத்தும் நல்ல தமிழில் இருத்தலே சாலச் சிறப்பாகும்.



| இருப்பவை | திருத்தம் |
|---|---|
| காப்பி ஹோட்டல் | சிற்றுண்டி விடுதி |
| லஞ்சு ஹோம் | ,, |
| கபே (Cafe) | ,, |
| ரெஸ்டாரன்ட் | ,, |

2. இவ்வாறே தமிழ் அல்லாத பிறமொழிச் சொற்களைப் பல்வேறு கடைப் பலகைகளிலும் தொழிற்சாலைப் பலகைகளிலும் எழுதியிருத்தலைக் காணலாம். அவற்றுள் சிலவற்றையும் அவற்றுக்கு நேரான தமிழ்ச் சொற்களையும் கீழே காண்க :

| இப்பொழுது இருப்பவை | தமிழ்ப் பெயர்கள் |
|---|---|
| ரைஸ் மில் | அரிசி ஆலை |
| ஜின்னிங் பேக்டரி | கொட்டை பிரிக்கும் தொழிற்சாலை |
| காட்டன் மில் | பருத்தி ஆலை |
| பேக்கரி | (உ) ரொட்டி செய்யுமிடம் |
| பிரிண்டிங் பிரஸ் | அச்சகம் |
| (ராஜேந்திரன்) சலூன் | (இராஜேந்திரன்) முடிதிருத்தகம் |
| முத்தையா லாண்டரி | முத்தையன் சலவைக்கூடம் |
| ஜவுளி வியாபாரம் | அறுவை வாணிகம் |
| புஸ்தக ஷாப் | புத்தகக் கடை |
| மிட்டாய்க் கடை | தின்பண்டக் கடை |
| மெடிக்கல் மார்ட் | மருந்துக் கடை |
| லாட்ஜிங் | தங்குதல் |
| போர்டிங் | உண்ணுதல் |
| போர்டிங் அண்ட் லாட்ஜிங் | உண்டியும் உறையுளும் |
| புக் செல்லர் | புத்தகம் விற்பவர் |
| டெயிலரிங் ஷாப் | தையற் கடை |
| பர்னிச்சர் மார்ட் (furniture mart) | மரப் பொருட் கடை |

## 5. பிற பிழைகளும் திருத்தமும்

### (1) ஓர், ஒரு

(1) ஒரு அணு
ஓர் அணு

(2) ஒரு வடை
ஓர் வடை

இவ்வாறு ஓர் என்பதுவும் ஒரு என்பதுவும் எல்லாச் சொற்களுக்கு முன்பும் பயன்படுத்தப்படுகின்றன.

ஓர்+அணு—வருமொழி முதலில் 'அ' என்னும் உயிரெழுத்து இருக்கிறது. அதனால் ஓர் என இருத்தலே ஓசை நயம் தருவதாகும். ஓரெழுத்து, ஓருயிர், ஓருண்மை, ஓரூர் என வருதல் வழக்காகும்; ஓசை நயமும் சிறந்து விளங்குகிறது.

(1) இவற்றையே ஒரு எழுத்து, ஒரு உயிர், ஒரு உண்மை, ஒரு ஊர் என்று சொல்லிப் பாருங்கள்; ஓசை நயம் கெடும். எனவே, உயிர் எழுத்தை முதல் எழுத்தாகக் கொண்ட சொற்களுக்கு முன்பு ஓர் என்பதைப் பயன்படுத்துதல் நலம்.

(2) உயிர்மெய்யெழுத்தை முதல் எழுத்தாகக் கொண்ட சொற்களுக்கு முன்னர் ஒரு என்பதைப் பயன்படுத்துதல் நலம்.

ஒரு வீடு, ஒரு நகை, ஒரு கப்பல்—என வருதலே சிறப்பு.

### (2) அது, அஃது

(1) அஃது இவ்வாறு உண்டாயிற்று.

(2) அது வீட்டுப் பசு.

அஃது என்பதையடுத்து வரும் சொல்லில் முதல் எழுத்து உயிரெழுத்தாய் இருக்கவேண்டும். அது என்பதை அடுத்து வரும் சொல்லின் முதல் எழுத்து உயிர்மெய்யெழுத்தாய் இருத்தல் நலம். கீழ்வரும் சான்றுகளைக் காண்க:

(1) அஃது அவ்வாறு இருப்பது முறையன்று.

(2) அது வெளியே சென்றது.



(3) இஃது என்னுடைய புத்தகம்.

(4) இது முருகன் புத்தகம்.

(5) அஃது அப்பாவால் வாங்கப்பட்டது.

(6) அது யானையின் படம்.

### (3) தான், தாம்

அவன்தான் வந்தான்.

அவள்தான் பாடினாள்.

அதுதான் வந்தது.

இவ்வாறு ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால்களை அடுத்துத் 'தான்' என்பது வரும். தான் என்பது ஒருமை; ஆதலால் இஃது ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் ஆகிய மூன்று பால்களையும் அடுத்தே வரும்.

(1) அவர்தாம் வந்தார்.

(2) அரசர்தாம் பேசினார்.

(3) அரசியர்தாம் சென்றனர்.

(4) பொதுமக்கள்தாம் பாராட்டினர்.

(5) நாய்கள்தாம் ஓடின.

இவ்வாறு பலர்பால், பலவின்பால்களை அடுத்தே 'தாம்' என்னும் பன்மைச்சொல் வருதல் முறை. இவற்றுக்கு மாறாக, அவன்தாம் வந்தான், அவர்தான் வந்தார் என்று சொல்வதோ, எழுதுவதோ தவறு.

### (4) அன்று, அல்ல, அல்லன் முதலியன

1. (1) அது நாய் அன்று.

(2) இது பூனை அன்று.

(3) அது மலை அன்று.

அன்று என்பது ஒன்றன்பால் வினைமுற்று. எனவே, எழுவாய் ஒன்றன்பாலாக வருதல் வேண்டும். மேல் வாக்கியங்களில் நாய், பூனை, மலை என்பன ஒன்றன்பால்கள். இவ்

வாறு ஒன்றன்பாற் பெயர் ஒன்றன்பால் வினைமுற்றை ஏற்று வருவதே முறை. இதற்கு மாறாக,

(1) அது நாய் **அல்ல.**

(2) இது பூனை **அல்ல.**

(3) அது மலை அல்ல.

என்று எழுதுதல் தவறு.

**2.** (1) அவை நாய்கள் **அல்ல.**

(2) இவை பூனைகள் **அல்ல.**

(3) அவை மலைகள் **அல்ல.**

இங்கு அல்ல என்பது பலவின்பால் வினைமுற்று. நாய்கள், பூனைகள், மலைகள் என்பவை பலவின்பாற் பெயர்கள். எனவே, பலவின்பாற் பெயர்கள் பலவின்பால் வினைமுற்றை ஏற்று வருவதே முறை. இதற்கு மாறாக,

(1) அவை நாய்கள் **அன்று.**

(2) இவை பூனைகள் **அன்று.**

(3) அவை மலைகள் **அன்று.**

என்று எழுதுதல் தவறு.

**3.** (1) இதைச் செய்தவன் குப்பன் **அல்லன்.**

(2) தேர்வு எழுதியவன் முருகன் **அல்லன்.**

(3) வந்தவன் வரதன் **அல்லன்.**

இவற்றில் குப்பன், முருகன், வரதன் என்பன ஆண்பால் பெயர்கள். அல்லன் என்பது ஆண்பால் வினைமுற்று. இவ்வாறு ஆண்பால் பெயருக்கு ஆண்பால் வினைமுற்றே பொருத்தமானது. இங்ஙனம் எழுதாமல்,

(1) இதைச் செய்தவன் குப்பன் **அல்ல.**

(2) தேர்வு எழுதியவன் முருகன் **அல்ல.**

(3) வந்தவன் வரதன் **அல்ல.**

என்று எழுதுவது தவறு.



**4.** (1) கோலம் போட்டவள் கோமளம் **அல்லள்.**

(2) பாடினவள் பத்மினி **அல்லள்.**

(3) அவள் மாதவி **அல்லள்.**

இவ்வாறு பெண்பால் பெயருக்குப் பெண்பால் வினைமுற்று வருதலே பொருத்தமாகும்.

அவள் மாதவி **அல்ல**—என்று எழுதுவது தவறு.

**5.** (1) இங்கு வந்தவர் அரசர் **அல்லர்.**

(2) குழப்பம் செய்தவர்கள் அதிகாரிகள் **அல்லர்.**

(3) கூட்டத்தில் நசுக்குண்டவர் பெண்கள் **அல்லர்.**

இவ்வாறு பலர்பால் பெயர்களுக்குப் பலர்பால் வினைமுற்று வருதலே பொருத்தமாகும்.

கூட்டத்தில் நசுக்குண்டவர் பெண்கள் **அல்ல**—என்று எழுதுவது தவறு.

(1) அல்லன்—ஆண்பால் வினைமுற்று.

(2) அல்லள்—பெண்பால் வினைமுற்று.

(3) அல்லர்—பலர்பால் வினைமுற்று.

(4) அன்று—ஒன்றன்பால்—வினைமுற்று.

(5) அல்ல—பலவின்பால் வினைமுற்று.

### (5) வேண்டும் × வேண்டா

(1) எனக்குப் பழம் **வேண்டும்.**

(2) எனக்குக் காய் **வேண்டா.**

(3) எனக்குப் பழங்கள் **வேண்டும்.**

(4) எனக்குப் பழங்கள் **வேண்டா.**

இவற்றுள்,

**வேண்டும்**—உடன்பாட்டுவினை

**வேண்டா**—எதிர்மறைவினை

**வேண்டா** என்பதனை **வேண்டாம்** என்று சொல்லுவதோ, எழுதுவதோ தவறு. முதல் வகுப்புத் தமிழ்ப் பாட நூலில்,

" ஓதாமல் ஒருநாளும் இருக்க **வேண்டாம்** "

என்று வருதல் தவறாகும்; அஃது,

"ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டா"

என்று இருத்தலே முறையானது.

இருக்க வேண்டா, சொல்ல வேண்டா, இணங்க வேண்டா, போக வேண்டா—என வருதலே முறையாகும்.

### பயிற்சி

1. உங்கள் ஊரிலுள்ள கடைப் பெயர்ப் பலகைகளில் உள்ள பிழைகளைச் சுட்டிக் காட்டி, அவற்றிற்குரிய திருத்த மும் கூறுக.

2. அக்கிராசனுதிபதி, பிரசங்கியார், வெகுமானம், சபை, அங்கத்தினர், சபாநாயகர், பிரேரேபித்தார், ஆமோதித்தார்—இவற்றிற்கு நேரான தமிழ்ச் சொற்களைக் கூறுக.

3. ஒரு, ஓர்—இவற்றைத் தொடர்களில் அமைத்து எழுதுக.

4. அது, அஃது—இவற்றைத் தொடர்களில் அமைத்துக் காட்டுக.

5. பிழைகளைத் திருத்துக :—

அது ஒரு ஓலை, அது ஓர் வண்டு, அது என் வீடு, அஃது பெட்டி, அவர்தான் வந்தார், அவள்தாம் போனுள், நாய் தாம் ஓடினது, நாம்தான் வந்தோம், யார்தான் சொன்னுர்.

6. கீழ்வருவனவற்றுள் ஏற்ற சொற்களைக் கீழ்வரும் வாக்கியங்களில் அமைத்துக் காட்டுக :—

| | | |
|---|---|---|
| அல்லன் | அல்லள் | அல்லர் |
| அன்று | அல்ல | |

(1) புத்தகம் எடுத்தவள் கண்ணகி ——.

(2) பந்து அடித்தவன் பரந்தாமன் ——.

(3) கடித்தது பாம்பு ——.

(4) ஓடியவை நாய்கள் ——

(5) நடனம் ஆடியவர் பெண்கள் ——.



# VI. பொருள்

## 1. அகப்பொருள்

ஒருவனும் ஒருத்தியும் ஒருவரையொருவர் காதலித்து நடத்தும் வாழ்க்கை நிகழ்ச்சிகளைப் பலபடியாக விளக்கிக் கூறுவதே அகப்பொருள் என்பது. காதற் செய்திகள் புறத்தே கூறலாகா நிலையில் அகத்தே அடங்க வேண்டுவன ஆதலின், 'அகப்பொருள்' எனப் பெயர்பெற்றன. அகப்பொருள் பற்றிய இலக்கண நூல்கள் தமிழில் பல உண்டு.

பலர் அறியத் திருமணம் செய்துகொள்வதற்கு முன்பு தலைவன் தலைவியர் மேற்கொண்டு ஒழுகும் வாழ்க்கை களவு வாழ்க்கை என்றும், மணம் முடிந்தபின்பு வாழும் வாழ்க்கை கற்பு வாழ்க்கை என்றும் கூறப்படும். இவைபற்றிய விவரங் களைக் கூறும் இயல் (பகுதி) முறையே களவியல், கற்பியல் எனப் பெயர்பெறும். ஒவ்வொரு வாழ்க்கையிலும் பல நிகழ்ச்சி கள் உண்டு. அவ்வொவ்வொரு நிகழ்ச்சியும் ஒரு **துறை** எனப் பெயர் பெறும். இத்தகைய துறைகள் ஏறத்தாழ நானூறு வரை அகப்பொருள் நூலில் கூறப்பட்டுள்ளன. இவ்விவ ரங்களைத் தொல்காப்பியத்துக் களவியல், கற்பியல், பொருளி யல் என்னும் இயல்களிலும், இறையனர் களவியல் நூலிலும், நம்பி யகப்பொருள் இலக்கணத்திலும், கோவை நூல்களிலும், சங்க நூல்களாகிய அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு முதலிய இலக்கிய நூல்களிலும் விரிவாகக் காணலாம்.

அகப்பொருள் இலக்கணத்தில் ஏழு **திணைகள்** உண்டு. (திணை—ஒழுக்கம்). (1) கைக்கிளை, (2) பெருந்திணை, (3) ஐந்திணை (குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல்) என்பன.

1. **கைக்கிளை :** தலைவன் விரும்பாமல் தலைவிமட்டும் தலைவனை விரும்புதலும், தலைவி விரும்பாமல் தலைவன்மட்டும் தலைவியை விரும்புதலும் ஒருதலைக்காமம் எனப்படும். கைக் கிளை - ஒருதலைக்காமம்.

2. பெருந்திணை : இது பொருந்தாக் காமம் எனப் பொருள்படும். வயதினால் பொருத்தம் அற்றவர் கூடுதலும், வலிதிற் கூடலும், இவைபோன்ற பிறவும் பெருந்திணை எனப்படும்.

3. ஐந்திணை : ஒத்த வயதும் ஒத்த பண்பும் ஒத்த கல்வியும் உடைய தலைவனும் தலைவியும் தம்முள் எதிர்ப்பட்டுச் சேருதல் ஐந்திணை அல்லது ஒத்த காமம் எனப்படும். இவ் வொத்த காமத்திற்குக் குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய் தல் என்னும் ஐந்து ஒழுக்கங்கள் உண்டு. ஒவ்வோர் ஒழுக் கத்துக்கும் (1) முதற் பொருள், (2) கருப்பொருள், (3) உரிப் பொருள் என மூவகைப் பொருள்கள் உண்டு. அவைபற்றிய சில விவரங்களை இங்குக் காண்க :

### (1) முதற் பொருள்

நிலமும் பொழுதும் முதற் பொருளென்று சொல்லப்படும்.

1. நிலம்—குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என ஐவைகப்படும்.

(1) குறிஞ்சி—மலையும் மலைசார்ந்த இடமும்.

(2) முல்லை—காடும் காடு சார்ந்த இடமும்.

(3) பாலை—முல்லையும் குறிஞ்சியும் திரிந்த பொட்டல் வெளி.

(4) மருதம்—வயலும் வயல் சார்ந்த இடமும்.

(5) நெய்தல்—கடலும் கடல்சார்ந்த இடமும்.

2. பொழுது—(1) பெரும்பொழுது (2) சிறு பொழுது என இருவகைப்படும்.

(1) பெரும்பொழுது ஓராண்டிற்குரிய ஆறு பருவங்கள். அவை கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முது வேனில். ஒவ்வொரு பெரும்பொழுதும் இரண்டு மாத கால அளவையுடையது.

(2) சிறுபொழுது—(1) வைகறை (2) காலை (3) நண் பகல் (4) எற்பாடு (5) மாலை (6) யாமம் என ஆறுவகைப் படும்.



(1) வைகறை—விடியற்காலம் ; (2) நண்பகல்—உச்சிப் பொழுது ; (3) எற்பாடு—சூரியன் மறையும் பொழுது ; (4) மாலை—நிசியின் முன்னும் எற்பாட்டின் பின்னுமுண்டாகிய காலம் ; (5) யாமம்—இடையிரவு.

1. கூதிர், முன்பனி என்னும் பெரும்பொழுதுகளும், யாமம் என்னும் சிறுபொழுதும் குறிஞ்சித் திணைக்கு உரிய பொழுதுகள்.

2. வேனில், பின்பனி என்னும் பெரும்பொழுதுகளும், நண்பகல் என்னும் சிறுபொழுதும் பாலைத் திணைக்கு உரியவை.

3. கார் காலமும் மாலைக் காலமும் முல்லைத் திணைக்கு உரிய பொழுதுகள்.

4. ஆறு பெரும்பொழுதுகளும், விடியற்காலமும் மருதத் திற்கு உரிய பொழுதுகள்.

5. ஆறு பெரும்பொழுதுகளும் எற்பாடு என்னும் சிறு பொழுதும் நெய்தற்கு உரிய பொழுதுகள்.

இவ்வாறு விரித்துரைக்கப்பட்ட ஐவகை நிலங்களும், பெரும்பொழுதுகள் ஆறும், சிறு பொழுதுகள் ஆறும் அகப் பொருள் இலக்கணத்தில் முதற் பொருள் என்று கூறப்படும்.

### (2) கருப்பொருள்

ஒவ்வொரு நிலத்திலும் உள்ள (1) தெய்வம், (2) உயர்ந் தவர், (3) பொது மக்கள், (4) பறவை, (5) விலங்கு, (6) ஊர், (7) நீர், (8) பூ, (9) மரம், (10) உணவுப்பொருள்கள், (11) பறை, (12) யாழ், (13) பண், (14) தொழில் என்னும் 14 வகைகள் கருப்பொருள் எனப்படும்.

#### 1. குறிஞ்சிக் கருப்பொருள்

(1) தெய்வம்—முருகன்.

(2) உயர்ந்தோர்—பொருப்பன், சிலம்பன், வெற்பன், கொடிச்சி, குறத்தி.

(3) பொதுமக்கள்—குறவர், கானவர், குறத்தியர்.

(4) பறவை—கிளி, மயில்.

(5) விலங்கு—புலி, கரடி, யானை, சிங்கம்.

(6) ஊர்—சிறு குடி.

(7) நீர்—அருவி நீர், சுனை நீர்.

(8) பூ—வேங்கைப் பூ, குறிஞ்சிப் பூ, காந்தட் பூ.

(9) மரம்—சந்தனம், தேக்கு, அகில், அசோகு, நாகம், மூங்கில்.

(10) உணவு—மலை நெல், மூங்கில் அரிசி, தினை.

(11) பறை—தொண்டகப் பறை.

(12) யாழ்—குறிஞ்சி யாழ்.

(13) பண்—குறிஞ்சிப் பண்.

(14) தொழில்—வெறியாடல், மலைநெல் விதைத்தல், தினை காத்தல், தேன் எடுத்தல், கிழங்கு அகழ்தல், அருவி நீராடல், சுனை நீராடல் முதலியன.

### 2. பாலைக் கருப்பொருள்

(1) தெய்வம்—துர்க்கை.

(2) உயர்ந்தோர்—விடலை, காளை, மீளி, எயிற்றி.

(3) பொதுமக்கள்—எயினர், எறிற்றியர், மறவர், மறத்தியர்.

(4) புள்—புரு, பருந்து, எருவை, கழுகு.

(5) விலங்கு—செந்நாய்.

(6) ஊர்—குறும்பு.

(7) நீர்—நீரில்லாக் குழி, நீரில்லாக் கிணறு.

(8) பூ—குராஅப்பூ, மராஅப்பூ.

(9) மரம்—உழிஞை, பாலை, ஒமை, இருப்பை.

(10) உணவு—வழிப்பறி பொருள், பதியிற் கவர்ந்த பொருள்.

(11) பறை—துடி.

(12) யாழ்—பாலையாழ்.

(13) பண்—பஞ்சுரம்.

(14) தொழில்—போர் செய்தல், பகற்சூறையாடுதல் முதலியன.



### 3. முல்லைக் கருப்பொருள்

(1) தெய்வம்—திருமால்.

(2) உயர்ந்தோர்—குறும்பொறை நாடன், தோன்றல், மனைவி, கிழத்தி.

(3) பொது மக்கள்—இடையர், இடைச்சியர், ஆயர், ஆய்ச்சியர்.

(4) புள்—காட்டுக் கோழி.

(5) விலங்கு—மான், முயல்.

(6) ஊர்—பாடி.

(7) நீர்—குறுஞ்சுனை நீர், கான்யாற்று நீர்.

(8) பூ—குல்லைப் பூ, முல்லைப்பூ, தோன்றிப்பூ, பிடவம்பூ.

(9) மரம்—கொன்றை, காயா, குருந்தம்.

(10) உணவு—வரகு, சாமை, முதிரை.

(11) பறை—ஏறங்கோட் பறை.

(12) யாழ்—முல்லையாழ்.

(13) பண்—சாதாரி.

14) தொழில்—சாமை விதைத்தல், வரகு விதைத்தல், அவற்றின் களை கட்டல், அவற்றை அரிதல், கடா விடுதல், கொன்றைக் குழல் ஊதுதல், கால்நடைகளை மேய்த்தல், கொல்லேறு தழுவுதல், குரவைக்கூத்தாடல், கான்யாருடல் முதலியன.

### 4. மருதக் கருப்பொருள்

(1) தெய்வம்—இந்திரன்.

(2) உயர்ந்தோர்—ஊரன், மகிழ்நன், கிழத்தி, மனைவி.

(3) பொதுமக்கள்—உழவர், உழத்தியர், கடையர், கடைசியர்.

(4) புள்—வண்டானம், மகன்றில், நாரை, அன்னம், பெருநாரை, கம்புள், குருகு, தாரா.

(5) விலங்கு—எருமை, நீர் நாய்.

(6) ஊர்—பேரூர், மூதூர்.

(7) நீர்—யாற்று நீர், கிணற்று நீர், குளத்து நீர்.

(8) பூ—தாமரைப் பூ, கழுநீர்ப்பூ, குவளைப்பூ.

(9) மரம்—காஞ்சி, வஞ்சி, மருதம்.

(10) உணவு—செந்நெல்லரிசி, வெண்ணெல்லரிசி.

(11) பறை—நெல்லரிகிணை, மணமுழவு.

(12) யாழ்—மருத யாழ்.

(13) பண்—மருதப் பண்.

(14) தொழில்—விழாச் செய்தல், வயற் களை கட்டல், நெல்லரிதல், கடா விடுதல், குளங்குடைதல், புதுநீராடல் முதலியன.

### 5. நெய்தற் கருப்பொருள்

(1) தெய்வம்—வருணன்.

(2) உயர்ந்தோர்—சேர்ப்பன், புலம்பன், பரத்தி, நுளைச்சி.

(3) தாழ்ந்தோர்—நுளையர், நுளைச்சியர், பரதர், பரத்தியர், அளவர், அளத்தியர்.

(4) புள்—கடற்காகம்.

(5) விலங்கு—சுறுமீன்.

(6) ஊர்—பாக்கம், பட்டினம்.

(7) நீர்—உவர் நீர்க்கேணி, கவர் நீர்.

(8) பூ—நெய்தற்பூ, தாழம்பூ, முண்டகப்பூ, அடம்பம்பூ.

(9) மரம்—கண்டல், புன்னை, ஞாழல்.

(10) உணவு—மீன், மீனையும், உப்பையும் விற்றுப் பெற்ற பொருள்கள்.

(11) பறை—மீன் கோட்பறை, நாவாய்ப் பம்பை.

(12) யாழ்—விளரியாழ்.

(13) பண்—செவ்வழிப்பண்.

(14) தொழில்—மீன் பிடித்தல், உப்புண்டாக்கல், அவை விற்றல், மீன் உணக்கல், அவற்றை உண்ணவரும் பறவைகளை ஓட்டுதல், கடலாடல் முதலியன.



### (3) உரிப்பொருள்

மேற்சொல்லப்பட்ட ஒவ்வொரு நிலத்துக்கும் உயிர்நாடியாக உரிமை பூண்டு நிற்கும் பொருள் உரிப்பொருள் எனப்படும்.

| | நிலம் | உரிப்பொருள் |
|---|---|---|
| 1. | குறிஞ்சி | புணர்தலும் புணர்தல் நிமித்தமும் |
| 2. | பாலை | பிரிதலும் பிரிதல் நிமித்தமும் |
| 3. | முல்லை | இருத்தலும் இருத்தல் நிமித்தமும் |
| 4. | மருதம் | ஊடலும் ஊடல் நிமித்தமும் |
| 5. | நெய்தல் | புலம்பலும் புலம்பல் நிமித்தமும் |

## 2. புறப்பொருள்

மனிதன் பெறத்தக்க நான்கு பேறுகளில் 'இன்பம்' ஒழிந்த அறம், பொருள், வீடு என்னும் மூன்றும் அனைவரும் அறியத்தக்க நிலையில் இருப்பவை. இவை அகவொழுக்கத்தைச் சார்ந்தவை அல்ல; புற (வெளிப்படை) ஒழுக்கத்தைச் சேர்ந்தவை. ஆதலின் புறப்பொருள் எனப்பட்டன. அறம் பற்றிய விவரங்களும், பொருள் பற்றிய செய்திகளும், வீடுபற்றிய விவரங்களும் இப்பகுதியில் விரிவாகப் பேசப்படும்.

புறநானூறு, பதிற்றுப்பத்து, பத்துப்பாட்டில் பல பாடல்கள், நீதி நூல்கள், காவியங்கள் முதலியன புறப்பொருள் இலக்கிய நூல்களாம்.

புறப்பொருள் வெண்பாமாலை, தொல்காப்பியப்புறத்திணை இயல் முதலியன புறப்பொருள் இலக்கண நூல்களாம். புறப்பொருட் பகுதியில் அரசனுடைய போர்ச்செய்திகளை எட்டுத் திணைகளாக வகுத்து, ஒவ்வொரு திணைக்கும் பல துறைகளை அமைத்து, இலக்கண ஆசிரியர்கள் போர் விவரங்களை விரித்துக் கூறியுள்ளார்கள். அத்திணைகள் முறையே வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை, வாகை எனப் பெயர் பெறும். இவ்வெட்டுடன் பாடாண்திணை, பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை என்னும் நான்கும் சேரும். எனவே, புறப்பொருள் பன்னிரண்டு திணைகளை

உடையதாகும். இவை பற்றிய சில விவரங்களை இங்குக் காண்க.

1. **வெட்சித்திணை:** பகைவர் நாட்டின்மீது படையெடுக்க விரும்பும் வேற்றரசன் தன் வீரர்களை முதலில் ஏவி அந்நாட்டுக் கால்நடைகளைக் (படையெடுப்புப் போரில் அவை இறந்துபடாமல் இருக்கவேண்டும் என்னும் கருத்தால்) கைப்பற்றுவது வழக்கம். இது வெட்சித் திணை எனப்படும். இப்போருக்குரிய வீரர் வெட்சிப் பூவைச் சூடிக் கொள்ளுதல் மரபு. இத்திணையில் பல துறைகள் உண்டு.

2. **கரந்தைத் திணை:** கால் நடைகளைக் கைப்பற்ற வந்த வீரர்களை அந்நாட்டு வீரர்கள் எதிர்த்துப் போரிடலும், கால்நடைகளை மீட்டுக்கொண்டு வருதலும் கரந்தைத் திணை எனப்படும். இப்போருக்குரிய வீரர் கரந்தைப் பூவைச் சூடிக் கொள்ளுதல் மரபு. இத்திணையிலும் பல துறைகள் உண்டு.

3. **வஞ்சித் திணை:** ஓரரசன் தன் மாற்றான்மேல் படையெடுத்துப் போதல் வஞ்சித் திணை எனப்படும். அவனும் அவன் வீரரும் வஞ்சிப் பூவைச் சூடிக்கொள்ளுதல் மரபு. இதிலும் பல துறைகள் உண்டு.

4. **காஞ்சித் திணை:** படையெடுத்து வந்த அரசனைப் படையெடுக்கப்பட்ட அரசன் எதிர்த்தல் காஞ்சித் திணை எனப்படும். இப்போரில் ஈடுபட்டோர் காஞ்சிப் பூவைச் சூடுதல் மரபு. இத்திணையிலும் பல துறைகள் உண்டு.

5. **உழிஞைத் திணை:** அரசன் பகைவனது கோட்டை மதிலை வளைத்துப் போரிடலும், உள் நுழைய முயலுதலும், அம் முயற்சியில் போரிடலும் உழிஞைத் திணை எனப்படும். இம் முயற்சியில் ஈடுபட்டோர் உழிஞைப் பூவைச் சூடுதல் மரபு. இத்திணையிலும் பல துறைகள் உண்டு.

6. **நொச்சித் திணை:** முற்றுகையிடப்பட்ட அரசனும் வீரரும் கோட்டைக்குள்ளிருந்தே முற்றுகையிட்டோருடன் போர் புரிதல் நொச்சித் திணை எனப்படும். இப்போரில் ஈடுபட்ட வீரர் நொச்சிப் பூவைச் சூடுதல் மரபு. இத்திணையிலும் பல துறைகள் உண்டு.



7. **தும்பைத் திணை:** இரு திறத்துப்படைகளும் பொருதல் **தும்பைத் திணை** எனப்படும். இதில் ஈடுபட்டவர் தும்பைப் பூவைச் சூடுதல் மரபு. இத்திணையிலும் பல போர்த் துறைகள் உண்டு.

8. **வாகைத் திணை:** போரில் வெற்றிபெற்ற அரசனுடையதும் வீரரதுமாகிய வெற்றியைச் சிறப்பித்துப் பாராட்டுதல் **வாகைத் திணை** எனப்படும். வெற்றி கொண்டாடுவோர் வாகைப் பூவை அடையாளமாகச் சூடிக்கொள்ளுதல் மரபு. இத்திணையிலும் பல துறைகள் உண்டு.

9. **பாடாண் திணை:** ஒருவன் பெயர், புகழ், வலிமை, கொடை, தண்ணளி முதலியவற்றை ஆராய்ந்து சொல்லுதல். பாடாண் திணை என்பது பாடப்படும் ஆண் மகனுடைய ஒழுகலாறு என்னும் பொருளை உடையது. இது வாயில்நிலை முதலிய நாற்பத்தேழு துறைகளை உடையது.

10. **பொதுவியல்:** இது மேற்கூறப்பெற்ற புறத்திணைகட்கெல்லாம் பொதுவாய் உள்ளனவும், அவற்றில் கூருது ஒழிந்தனவும் ஆகிய இலக்கணங்களைக் கூறுவது. இது போந்தை முதலிய முப்பத்தேழு துறைகளையுடையது.

11. **கைக்கிளை:** இஃது ஒருதலைக்காமம் பற்றிய செய்திகளைக் கொண்டது. இஃது ஆண்பாற் கூற்று, பெண்பாற் கூற்று என்னும் இரண்டு பகுப்புக்களையுடையது; இது காட்சி முதலிய பத்தொன்பது துறைகளையுடையது.

12. **பெருந்திணை:** இது பொருந்தாக் காமம் பற்றிய செய்திகளைக் கூறுவது. இஃது ஆண்பாற் கூற்று, இருபாற் பெருந்திணை என்னும் இரண்டு பிரிவுகளையுடையது; இதில் செலவு அழுங்கல் முதலிய முப்பத்தாறு துறைகள் உண்டு.

## 3. திணை மயக்கம்

1. மாமல்லபுரம் (மஹாபலிபுரம்) கடற்கரை ஊர். ஆகவே இலக்கணப்படி அதனை நெய்தல் என்று கூறவேண்டும். ஆனால் அவ்வூரில் பாறைகளும் சிறுசிறு குன்றுகளும் இருக்கின்றன. பாறைகளும் சிறுசிறு குன்றுகளும் குறிஞ்சி நிலத்தைச் சார்ந்தவை. அவை இங்கு நெய்தல் நிலத்தில் இருக்

கின்றன. எனவே, நெய்தலும் குறிஞ்சியும் மாமல்லபுரத்தில் மயங்கி (சேர்ந்து) இருக்கின்றன. நெய்தல் திணையும் குறிஞ்சித் திணையும் மயங்கியுள்ளன என்று கூறலாம்.

மேலே கூறப்பட்ட மலைகளுக்கும் பாறைகளுக்கும் சிறிது தொலைவில் நெல் வயல்கள் இருக்கின்றன. எனவே, மருதத் திணையும் அங்கு மயங்கியுள்ளது என்று கூறலாம்.

2. அவ்வூர்ப் பகுதியில் பரதவர் தாம் பிடிக்கும் மீன்களை முல்லை நிலத்தார்க்குக் கொடுத்துப் பண்டமாற்று முறையால் அவர்களிடமிருந்து கவுதாரியையும் சேவலையும் பெறுகின்றனர்; நெய்தல் நிலச் சிறுமியர் முல்லை நில மகளிரிடம் வாங்கும் அவரைக்கும் தினைக்கும் ஈடாகப் பவளத்தையும் முத்துக்களையும் அளந்து கொடுக்கின்றனர். இச்செயல்களால் கடலைச் சார்ந்த நெய்தல் நிலமும் முல்லை நிலமும் தத்தம் கருப்பொருள்களால் கலந்துள்ளமையை அறியலாம்.

*“ கவரு மீன்குவை கழியவர் கானவர்க் களித்துச்
சிவலுஞ் சேவலும் மாறியுஞ், சிறுகழிச் சியர்கள்
அவரை யேனலுக் கெயிற்றியர் பவளமுத் தளந்தும்
உவரி நெய்தலுங் கானமுங் கலந்துள வொழுக்கம்.”

—பெரிய புராணம்

*இது திணை மயக்கம் எனப்படும்.

பயிற்சி

1. அகப்பொருள், புறப்பொருள்—இவற்றின் பொருளை விளக்குக.

2. களவு, கற்பு—பொருள் என்ன?

3. அகப்பொருள் திணைகள் ஏழு எவை?

4. புறப்பொருள் திணைகள் பன்னிரண்டு யாவை?

5. ஐந்திணை என்பதனை விளக்குக.

6. குறிஞ்சி முதலிய ஐந்து திணைகளுக்கும் உரிய பெரும் பொழுது சிறு பொழுதுகளைக் கூறுக.

7. ஒவ்வொரு திணைக்கும் உரிய கருப்பொருள்களைச் சுட்டுக.



8. ஐந்திணைகளுக்கும் உரிய உரிப் பொருள்களைக் கூறுக.

9. வெட்சி, கரந்தை—இத்திணைகளில் நடைபெறும் நிகழ்ச்சிகள் யாவை?

10. வஞ்சி, காஞ்சி—இத்திணைகளில் நடைபெறும் செயல்கள் யாவை?

11. நொச்சி, உழிஞை—இவற்றை விளக்கி வரைக.

12. வாகை, பாடாண்—இவை தெரிவிக்கும் செய்திகள் யாவை?

13. கைக்கிளை, பெருந்திணை—இவற்றை விளக்கி வரைக.

14. திணை மயக்கம் என்பதை ஏற்ற எடுத்துக்காட்டால் விளக்குக.

# VII. யாப்பு

யாப்பு—யாத்தல் (கட்டுதல்), தொழிற் பெயர். இங்கு, யாக்கப்படும் (கட்டப்படும்) செய்யுளுக்கு ஆகி வருதலால் தொழிலாகு பெயர்.

யாப்பு, செய்யுள், பாட்டு, பா, கவி—ஒரு பொருட் சொற்கள்.

எலும்பு, நரம்பு, இரத்தம், கொழுப்பு, தசை முதலியவற்றால் நமது உடம்பு கட்டப்பட்டிருத்தல் போல எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை முதலிய உறுப்புக்களால் கட்டப்பட்டதே செய்யுளாகும்.

## 1. எழுத்து, அசை முதலியன

### (1) எழுத்து

முன் சொல்லப்பெற்ற உயிரெழுத்துக்கள் பன்னிரண்டும், மெய் எழுத்துக்கள் பதினெட்டும், உயிர்மெய் எழுத்துக்கள் 216உம், ஆய்த எழுத்து ஒன்றும் செய்யுளுக்கு உரிய எழுத்துக்களாம்.

## (2) அசை

எழுத்துக்களால் ஆவது அசை.—அது (1) நேரசை, (2) நிரையசை என இருவகைப்படும்.

| | |
|---|---|
| 1. அ, அல் / ஆ, ஆல் | இவ்வாறு தனிக்குறில் அல்லது தனி நெடில் தனித்தோ, ஒற்றடுத்தோ வருவது நேரசை. |
| 2. பட, படல் / இரு, இருல் | இங்ஙனம் இருகுறில் இணைந்தோ அல்லது ஒற்றடுத்தோ வரினும், அல்லது ஒரு குறிலும் நெடிலும் சேர்ந்தோ அல்லது ஒற்றடுத்தோ வரினும் அவை நிரையசை. |

## (3) சீர்

எழுத்துக்களால் ஆவது அசை. அதுபோல அசைகளால் ஆவது சீர். அஃது (1) ஓரசைச் சீர், (2) ஈரசைச் சீர், (3) மூவசைச் சீர், (4) நாலசைச் சீர் என நான்கு வகைப்படும்.

1. (1) "பாலொடு............நீர்."—இக்குறளில் உள்ள கடைச் சீர் 'நீர்' என்பது. இஃது ஓரசைச் சீர். இது நேரசைச் சீர். இதனை 'நாள்' என்னும் வாய்பாட்டால் புலவர் வழங்குவர்.

(2) "நன்றறி............இலர்."—இக்குறளில் உள்ள கடைசிச் சீர் 'இலர்' என்பது. இதுவும் ஓரசைச் சீர். இது நிரையசைச் சீர். இதனை 'மலர்' என்னும் வாய்பாட்டால் புலவர் வழங்குவர்.

2. "குன்றக் குறவன் மடமகள் காண்மினே."—இவ் வடியில் நான்கு சீர்கள் இருக்கின்றன.

(1) குன் — றக் → நேர் நேர்
(2) குற — வன் → நிரை நேர்
(3) மட — மகள் → நிரை நிரை
(4) காண் — மினே → நேர் நிரை



இவற்றை இங்ஙனம் அசைகளாகப் பிரித்தால்,

(1) முதற் சீரில் நேரசையும் நேரசையும் (நேர் நேர்),

(2) இரண்டாம் சீரில் நிரையசையும் நேரசையும் (நிரை நேர்),

(3) மூன்றாம் சீரில் நிரையசையும் நிரையசையும் (நிரை நிரை),

(4) நான்காம் சீரில் நேரசையும் நிரையசையும் (நேர் நிரை) இருத்தலைக் காணலாம்.

இந்த நான்கில் ஒவ்வொன்றும் ஈரசைகளால் இயன்ற சீரேயாகும். இந்நான்கு சீர்களையும் எளிதில் கூறத்தக்க வாய்பாடுகள் இலக்கண ஆசிரியர்களால் உண்டாக்கப் பட்டுள்ளன. அவைகளைக் கீழே காண்க :—

(1) நேர் நேர் — தேமா
(2) நிரை நேர் — புளிமா

இவை இரண்டும் 'மா' என முடிவதால் **மாச்சீர்கள்** எனப்படும்.

(3) நிரை நிரை — கருவிளம்
நேர் நிரை — கூவிளம்

இவை இரண்டும் 'விளம்' என முடிவதால் **விளச்சீர்கள்** எனப்படும்.

இவை நான்கும் இயற்சீர் எனப் பெயர் பெறும். இவை பெரும்பாலும் ஆசிரியப்பாவில் மிகுதியாகப் பயின்று வருவதால், **ஆசிரிய வுரிச்சீர்** என்றும் கூறப்பெறும்.

3. (அ) "வானுறு பொறுத்தான்றன் இணைமலரைத் தேடினனே."—இவ்வடியில் நான்கு சீர்கள் இருக்கின் றன. இவற்றை அசைகளாகப் பிரிப்போம் :

(1) வா — னு — று → நேர் நேர் நேர்
(2) பொறுத் — தான் — றன் → நிரை நேர் நேர்

(3) இணை — மல — ரைத்  (4) தே — டின — னே
↓ ↓ ↓  ↓ ↓ ↓
நிரை நிரை நேர்  நேர் நிரை நேர்

இவையெல்லாம் மூவகைச் சீர்கள். இவற்றை எளிதிற் கூறத்தக்க வாய்பாடுகளைக் கீழே காண்க :

(1) நேர் நேர் நேர்—தேமாங்காய்
(2) நிரை நேர் நேர்—புளிமாங்காய்
(3) நிரை நிரை நேர்—கருவிளங்காய்
(4) நேர் நிரை நேர்—கூவிளங்காய்

இவை 'காய்' என முடிவதால், காய்ச்சீர்கள் எனப்படும்.

இவை நான்கும் வெண்பாவில் மிகுதியாகப் பயின்று வருவதால், வெண்சீர் என்றும், வெண்பாவுரிச்சீர் என்றும் பெயர் பெறும்.*

### சீர்பிரித்து வாய்பாடு கூறுதல்

4. (1) முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
முயற்—சி திரு—வினை யாக்—கும் முயற்—றின்—மை
நிரை நேர் நிரை நிரை நேர் நேர் நிரை நேர் நேர்
**புளி மா கரு விளம் தே மா புளி மாங்காய்**

| | | |
|---|---|---|
| (2) இன்மை | புகுத்தி | விடும் |
| இன்—மை | புகுத்—தி | விடும் |
| நேர் நேர் | நிரை நேர் | நிரை |
| **தே மா** | **புளி மா** | **மலர்** |

இவ்வாறு சீர்களை அசைகளாகப் பிரித்து, ஒவ்வொன்றுக்கும் வாய்பாடு கூற அறிதல் வேண்டும்.

### (4) தளை
### (இலக்கணமும் வகையும்)

| | |
|---|---|
| **இன் — மை** | **புகுத் — தி** |
| நேர் நேர் | நிரை நேர் |
| தே **மா** | |

* கனிச்சீர்கள் இங்குத் தேவையில்லை.



ஒரு சீரின் ஈற்றசையும் வருசீரின் முதலசையும் பொருந்தும் பொருத்தமே **தளை** என்பது.

| | |
|---|---|
| 1. கந் — தா | கா — வா |
| நேர் **நேர்** | **நேர்** நேர் |

இச்சீர்கள் இரண்டும் ஈரசைச்சீர்கள், **இயற்சீர்கள், ஆசிரிய வுரிச்சீர்கள்** எனப்படும். நின்றசீரின் ஈற்றசை **நேர்**; வருஞ்சீரின் முதலசையும் **நேர்**. இவ்வாறு ஆசிரிய வுரிச்சீர்களில் **'நேர்—நேர்'** ஆகப் பொருந்துவது **நேர் ஒன்றிய ஆசிரியத் தளை** எனப் பெயர் பெறும்.

| | |
|---|---|
| 2. இவ் — வணி | அவ — னது |
| நேர் நிரை | நிரை நிரை |

இந்த இரண்டும் ஆசிரிய வுரிச்சீர்களே. இங்கு நிரை நிரையாகப் பொருந்துகின்றன. இவ்வாறு 'நிரை—நிரை' யாகப் பொருந்துவது **நிரை ஒன்றிய ஆசிரியத் தளை** எனப்படும். இவை பெரும்பாலும் ஆசிரியப்பாவில் வரும்.

3. மேற்சொன்ன முறை மாறி, 'நிரை—நேர்', நேர்—நிரை' என இவ்வியற்சீர்கள் மாறிப் பொருந்துவதும் உண்டு.

(1) அவ் — வணி எங் — கே } 'விள' முன் 'நேர்'
நேர் நிரை **நேர்** நேர்
கூ **விளம்**

(2) கண் — ணே வரு — வாய் } 'மா' முன் 'நிரை'
நேர் நேர் **நிரை** நேர்
தே **மா**

இவை பெரும்பாலும் வெண்பாவில் வருபவை. ஆதலால் இவை **'இயற்சீர் வெண்தளை'** எனப்படும்.

எனவே, ஈரசைச் சீர்களால் (1) **நேர் ஒன்றிய ஆசிரியத் தளை**, (2) **நிரை ஒன்றிய ஆசிரியத்தளை**, (3) **இயற்சீர் வெண்தளை**, என்னும் **மூவகைத் தளைகள்** உண்டாதலை அறிக.

4. (1) மண்—ணத—னில் ஆ—குங்—கால் } **'காய்'** முன் **'நேர்'**
**நேர்** நிரை நேர் **நேர்** நேர் நேர்
**கூ** விளங் **காய்**

(2) மதிப்—பரி—தால் மன் — னனே } 'காய்' முன்
நிரை நிரை நேர் நேர் நிரை } 'நேர்'
கரு விளங் காய்

காய்ச்சீராகிய வெண்பாவுரிச்சீர் நேரசையோடு பொருந்துதல் ('காய்' முன் 'நேர்' வருதல்) வெண்சீர் வெண்டளை (வெண்பாவுக்கே பெரிதும் உரிய சீர்களால் அமைந்த—வெண்பாவுக்கே பெரிதும் உரிய தளை) எனப்படும்.

**வெண்தளையின் இலக்கணம்**

(1) இயற்சீர் வெண்தளை, (2) வெண்சீர் வெண்தளை என வெண்தளை இருவகைப்படும்.

(1) மாமுன் நிரை
விளமுன் நேர் } இயற்சீர் வெண்தளை

(2) காய் முன் நேர்—வெண்சீர் வெண்தளை.

இவை இரண்டும் வெண்பாவுக்கே உரிய தளைகள்.

## (5) அடி

செய்யுளில் வரும் வரிக்கு அடி என்பது பெயர். அந்த அடி குறைந்த அளவு இரண்டு சீர்களைக் கொண்டு வரும்.

(1) குறளடி—இரண்டு சீர்களைக் கொண்டது.
(2) சிந்தடி—மூன்று சீர்களைக் கொண்டது.
(3) நேரடி—நான்கு சீர்களைக் கொண்டது. இஃது அளவடி என்றும் கூறப்படும்.
(4) நெடிலடி—ஐந்து சீர்களைக் கொண்டது.
(5) கழி நெடிலடி—ஆறும் ஆறுக்கு மேற்பட்ட சீர்களையும் கொண்டது.

## 2. எதுகைத் தொடை முதலியன

**1. எதுகைத் தொடை**

" கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்."

முதலடியில் முதற்சீரின் இரண்டாம் எழுத்தும், இரண்டாம் அடியில் முதற்சீரின் இரண்டாம் எழுத்தும் ஒன்றிவரத் தொடுப்பது எதுகைத் தொடை எனப்படும்.



**2. மோனைத் தொடை**

" கடுங்கை வயலுழவர் காலைத் தடிய "

இவ்வாறு ஓரடியிலுள்ள சீர்களில் ஏதேனும் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட சீர்களின் முதல் எழுத்துக்கள் ஒன்றி வருதல் மோனைத் தொடை எனப்படும்.

**3. முரண் தொடை**

(1) " நன்மையும் தீமையும் நாடி வருமே "
நன்மை × தீமை

இவை ஒன்றுக்கொன்று முரண் (மாறுபட்டவை)

(2) " இருள்பரந் தன்ன மாநீர் மருங்கில்
நிலவுக்குவித் தன்ன வெண்மண லொருசிறை "

இருள் × நிலவு. இவை ஒன்றுக் கொன்று மாறுபட்டவை. இங்ஙனம் ஒரே அடியில் மாறுபட்டுவரினும், அடிதோறும் மாறுபட்டு வரினும், (அஃதாவது முரண்பட்ட சொற்கள் தொடுக்கப்பட்டு வருதல்) அது முரண் தொடை எனப்படும்.

## 3. வெண்பா

1. " எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு."

இது குறட்பா. இதில் முதல் அடியில் நான்கு சீர்களும் இரண்டாம் அடியில் மூன்று சீர்களும் இருக்கின்றன. இவ்வாறு வரும் பாடல் குறள் வெண்பா எனப்படும். குறள் - குட்டை ; வெண்பா - தூய்மையான (செய்யுளுக்குரிய சிறப்பு இலக்கணம் பொருந்தப்பெற்ற) செய்யுள். திருக்குறளில் உள்ள எல்லாப் பாக்களும் குறள் வெண்பாக்களே.

2. " நன்றி ஒருவருக்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் என வேண்டா—நின்று
தளரா வளர்தெங்குத் தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால் "

இச்செய்யுளில் நான்கு அடிகள் இருக்கின்றன. அவற்றுள் முதல் மூன்று அடிகள் தனித்தனியே நான்கு சீர்களைக்

கொண்டவை. கடைசி அடிமட்டும் மூன்று சீர்களைக் கொண்டது. இவ்வாறு வருவது நாலடி வெண்பா எனப்படும். மூதுரை, நீதி வெண்பா, நன்னெறி, நாலடியார், நளவெண்பா முதலிய நூல்கள் வெண்பாக்களால் இயன்றவை. வெண்பாவிற்குச் செப்பலோசை உரியது. வெண்பாவின் ஈற்றடி மூச்சீரடியாக வரும்; ஏனைய அடிகள் நாற்சீரடிகள்; இயற்சீரும் காய்ச்சீரும் வரும்; ஈற்றடியின் ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டுச் சீர்களில் ஒன்றைப் பெற்றுவரும்; இயற்சீர் வெண்தளை, வெண்சீர் வெண்தளைகளே வரும்; செப்பலோசை பொருந்தியிருக்கும்.

## 4. ஆசிரியப்பா

“ பூத்த வேங்கை வியன்சினை யேறி
மயிலின மகவு நாடன்
நன்னுதற் கொடிச்சி மனத்தகத் தோனே ”

இப்பாடலில் முதல் அடியிலும் கடைசி அடியிலும் நந் நான்கு சீர்கள் வந்திருக்கின்றன. ஈற்றடிக்கு முன்னடியில் மட்டும் மூன்று சீர்கள் இருக்கின்றன. பெரும்பாலும் ஈரசைச் சீர்களே இதில் மிகுதியாக வரும். அடிதோறும் நாற்சீர்களையுடையதாகி, ஈற்றடிக்கு முன்னடியில்மட்டும் முச்சீர்களை உடையதாகி வருவது நேரிசை **ஆசிரியப்பா**. ஆசிரியன் தன் மாணவனுக்கு உறுதிப் பொருளை உரைத்தல் போலக் கேட்பார்க்கு நன்மை பயக்கும் செய்திகளை நம் முன்னோர் இச் செய்யுளில்தான் பெரும்பாலும் கூறிவந்தனர். ஆதலின் இச் செய்யுள் **ஆசிரியப்பா** எனப்பட்டது. இச்செய்யுள் நூற்றுக் கணக்கான அடிகளைப் பெற்று வருதலும் உண்டு. சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களில் வரும் ஒவ்வொரு காதையும் ஓர் ஆசிரியப்பாவில் பாடப்பட்டதாகும். இப்பாவிற்கு உரியது **அகவலோசை**.

தமிழ்ப் பாக்கள் (1) **வெண்பா**, (2) **ஆசிரியப்பா**, (3) **கலிப்பா**, (4) **வஞ்சிப்பா** என நான்கு வகைப்படும். ஒவ்வொரு பாவுக்கும் (1) **தாழிசை**, (2) **துறை**, (3) **விருத்தம்** என்னும் மூவகைச் செய்யுளினங்கள் உண்டு. இங்குக் கூறப் பெறாத வஞ்சிப்பா, கலிப்பா என்னும் பாக்களின் இலக்கணத்



தையும், நான்கு பாக்களின் இனங்களைப்பற்றிய இலக்கணத்தையும் தேவைப்படும்பொழுது யாப்பிலக்கண நூலிலிருந்து அறிந்துகொள்க.

## 5. விருத்தம்

இது வடசொல். இது தமிழ்ச் செய்யுளில் புதியதாகப் புகுந்தது. இதனில் ஒவ்வொரு பாவிற்கும் உரிய இலக்கணம் ஓரளவு நெகிழ்ந்து வரும். அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என்னும் அடிகளைக் கொண்ட விருத்தங்களே பலவாகும். தாயுமானவர் பாடல்கள் பல சீர்களைக் கொண்ட அடிகளால் இயன்றவை. அவையெல்லாம் விருத்தப் பாக்களே. விருத்தப் பாக்களைப் பாடுவதில் கம்பர் தலை சிறந்தவர். சிந்தாமணி, பெரிய புராணம், கம்ப ராமாயணம், கந்த புராணம் முதலிய பெரு நூல்கள் யாவும் விருத்தப் பாக்களால் இயன்றவையே யாகும்.

1. உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

இது கலி விருத்தம் எனப்படும்.

2. “ஆவா வென்றே யஞ்சின ராழ்ந்தார்—ஒரு சாரார்
கூகூ வென்றே கூவிளி கொண்டார்—ஒரு சாரார்
மாமா வென்றே மாய்ந்தனர் நீந்தார்—ஒரு சாரார்
ஏகீர் நாய்கீ ரென்செய்து மென்றார்—ஒரு சாரார்.”

இது வெளி விருத்தம் எனப்படும்.

3. “ஆண்டவன் அருட்ப டைப்பில் அனைவரும்
ஒன்றே ஆனால்
காண்டகு பெண்பி றப்பும் கவினுறப் படித்தல் நன்று
மாண்புடை அறிஞன் ரஸ்கின் மலர்ந்தனன்
ஆத லாலே
ஆண்பிறப் புயர்ந்த தென்னும் அறிவில்வா சகம
றப்பாய்.”

இஃது அறுசீர் ஆசிரிய விருத்தம்.

பயிற்சி

1. செய்யுளைக் குறிக்கும் பல்வேறு தமிழ்ச் சொற்கள் யாவை ?

2. நேரசை, நிரையசை—உதாரணம் தந்து விளக்குக.

3. ஆசிரிய வுரிச்சீர், வெண்பா வுரிச்சீர் — பெயர்க் காரணத்தை விளக்குக.

4. மாச்சீர், விளச்சீர், காய்ச்சீர் — ஒவ்வொன்றையும் விளக்கி உதாரணம் தருக.

5. நாள், மலர் என்னும் வாய்பாடுகள் எவற்றுக்கு வரும் ?

6. ஈரசைச் சீருக்கு உரிய வாய்பாடுகள் யாவை ?

7. "ஆன முதலில் அதிகம் செலவானல்
மான மழிந்து மதிகெட்டுப்—போன திசை
எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு."

இச்செய்யுளில் வந்துள்ள சீர்களை அசைகளாகப் பிரித்து ஒவ்வொரு சீருக்கும் உரிய வாய்பாட்டைக் கூறுக.

8. வெண் தளையின் இலக்கணம் யாது? உதாரணம் தந்து விளக்குக.

9. வெண்பாவின் இலக்கணம் யாது ?

10. ஆசிரியப்பாவின் இலக்கணத்தைக் கூறுக.

11. "அரிய வரைகீண்டு காட்டுவார் யாரே
பெரிய வரைவயிரங் கொண்டு—தெரியிற்
கரிய வரைநிலையாற் காய்ந்தாலென் செய்வார்
பெரிய வரைவயிரங் கொண்டு."

(1) இப்பாவிலுள்ள சீர்களைப் பிரித்து வாய்பாடு கூறுக.

(2) இப்பாவிலுள்ள தளைகளைச் சுட்டுக.

(3) இப்பாடல் எவ்வகை வெண்பாவுக்கு மேற்கோள் ?

12. வெளி விருத்தம், ஆசிரிய விருத்தம் — இவற்றுக்கு உதாரணச் செய்யுள் (வகைக்கு ஒன்று) தருக.



# VIII. அணி

செய்யுளுக்கு அழகு செய்து நிற்பது அணி எனப்படும். அது தன்மை, உவமை, உருவகம், சிலேடை, மடக்கு, வேற்றுப் பொருள் வைப்பு எனப் பலவகைப்படும். அவற்றுள் சிலவற்றின் விவரங்களை இங்குக் காண்போம்.

## 1. தன்மை அணி

"வானத்தில் மிகத் தாழ்ந்து செல்லும் மேகம் இம்மலையுச்சியில் படிகிறது."—'இம்மலை மேக மண்டலத்தை முட்டுகிறது' என்று மிகைபடக் கூறாமல், உள்ளதை உள்ளவாறு கூறியதனால் இது தன்மை நவிற்சி அணி எனப்படும். இஃது இயல்பு நவிற்சி என்றும் கூறப்படும். இதற்கு மாறுபட்டது உயர்வு நவிற்சி யணி.

"உள்ளங் குளிர வுரோமஞ் சிலிர்த்துரையுந்
தள்ளவிழி நீரரும்பத் தன்மறந்தாள்—புள்ளலைக்குந்
தேந்தா மரைவயல்சூழ் தில்லைத் திருநடஞ்செய்
பூந்தா மரைதொழுத பொன்."

இச்செய்யுளில் தன்மையணி அமைந்துள்ளதைக் காண்க.

## 2. உவமையணி

மதிபோன்ற வட்டமுகம்—இதில், மதி—உவமை; முகம்—பொருள் (உவமேயம்); வட்டம்—பொதுத் தன்மை; போன்ற—உவம உருபு. இவ்வாறு உவமை, பொருள், பொதுத் தன்மை, உவம உருபு என்னும் நான்கும் அமையும்படி அல்லது மூன்று அமையும்படி, அல்லது உவமையும் பொருளும் அமையும்படி கூறுவது உவமை அணியாகும்.

"பால்போலும் இன்சொற் பவளம்போற் செந்துவர்வாய்
சேல்போல் பிறழுந் திருநெடுங்கண்—மேலாம்
புயல்போற் கொடைக்கைப் புனனாடன் கொல்லி
அயல்போலும் வாழ்வ தவர்."

இவ்வெண்பாவில் உவமையணி அமைந்திருத்தலைக் காண்க.

## 3. உருவக அணி

முகமதி—இது 'முகம் ஆகிய மதி' என விரியும். இவ்வாறு உவமேயம் முன்னும் உவமானம் பின்னும் வரும்படி அமைவது உருவக அணி எனப்படும்.

" இன்சொல் விளைநிலமா ஈதலே வித்தாக
வன்சொற் களைகட்டு வாய்மை எருவட்டி
அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈன்றதோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய்."

இப்பாடலுள்,

இன்சொல்—நிலமாகவும்
ஈதல்—விதையாகவும்
வன்சொல்—களையாகவும்
வாய்மை—எருவாகவும்
அன்பு—நீராகவும்
அறம்—கதிராகவும்

உருவகப்படுத்தப்பட்டுள்ளன.

## 4. பின்வரு நிலையணி

ஒரு செய்யுளில் முன்வந்த சொல்லும் பொருளும் தனித் தனியேனும் கூடியேனும் பல இடங்களில் பின்வருமாயின், அது பின்வரு நிலையணி எனப்படும்.

எனவே, சொற் பின்வரு நிலையணி, பொருட் பின்வரு நிலையணி, சொற்பொருட் பின்வரு நிலையணி என இவ்வணி மூவகைப்படும் என்பது தெரிகிறது.

" மால்கரி காத்தளித்த மாலுடைய மாலைசூழ்
மால்வரைத்தோ ளாதரித்த மாலையார்—மாலிருள்சூழ்
மாலையின் மால்கள மார்ப்ப மதன்றெடுக்கும்
மாலையின் வாளி மலர்."

இச்செய்யுளில் முன்னர் வந்த 'மால்' என்னும் சொல்லே பின்னும் பல இடங்களில் வந்துள்ளமை காண்க.



## 5. வேற்றுப்பொருள் வைப்பணி

" அநுமன் கடல் கடந்தான், பெரியோர்க்கு அரியது யாது ?"—இதில் பெரியோர்க்கு அரியது யாது என்பது உலகறிந்த பொதுப் பொருள்; அநுமன் கடல் கடந்தான் என்பது சிறப்புப் பொருள்.

இவ்வாறு ஒன்றைக் கூறத் தொடங்கிப் பின்னர் அது முடித்தற்கு உலகம் அறிந்த வலிமை உடைய வேறொரு பொருளை வைத்து மொழிவது வேற்றுப் பொருள் வைப்பணி எனப்படும்.

" புறந்தந் திருளிரியப் பொன்னேமி யுய்த்துச்
சிறந்த வொளிவளர்க்குந் தேரோன்—மறைந்தான் ;
புறவாழி சூழ்ந்த புவனத்தே தோன்றி
இறவாது வாழ்கின்றார் யார்."

இதன்கண் முன்னிரண்டு அடிகளில் சிறப்புப் பொருளும், பின்னிரண்டு அடிகளில் பொதுப் பொருளும் வந்தமை காண்க.

## 6. வேற்றுமையணி

" சென்று செவியளக்குஞ் செம்மையவாய்ச் சிந்தையுள்ளே
நின்றளவி லின்ப நிறைப்பவற்றுள்—ஒன்று
மலரிவருங் கூந்தலார் மாதர்நோக் கொன்று
மலரிவருங் கூத்தன்றன் வாக்கு."

இச்செய்யுளில் முன் இரண்டு அடிகளால் வெளிப்படையாக இரு பொருளுக்கு ஒப்புமை கூறி, பின்பு, ஒன்று 'மாதர் நோக்கு,' ஒன்று 'கூத்தன்றன் வாக்கு' என அவ்விரு பொருள்களுக்கும் வேறுபாடு கூறப்பட்டது. ஆதலால் இது வேற்றுமையணி எனப்படும்.

கூற்றினாலாவது, குறிப்பினாலாவது, ஒப்புடைய இரு பொருள்களை ஒரு பொருளாக வைத்து, அவற்றைத் தம்முள் வேற்றுமைப்படச் சொல்வது வேற்றுமையணி எனப்படும்.

## 7. பிறிது மொழிதலணி

"எலிப்பகை நாகம் உயிர்ப்பக் கெடும்."—நாகம் சிறிது விழித்தெழ எலிப்பகை அழிந்துவிடும் என்பது இதன் கருத்து. இதனை வீரனொருவன் கூறுகின்றான். இங்ஙனம் கூறுவதன் கருத்து யாது? தான் எழுந்த மாத்திரத்தில் வீரர் அல்லாதார் பலர் அழிவர் என்பதை மறைத்து, அதனை வெளிப்படுத்துவதற்குப் பொருத்தமான மேற்சொல்லப்பட்ட செய்தியைக் கூறுகிறான். இவ்வாறு ஒருவன் தான் கருதிய பொருளை மறைத்து, அதனை வெளிப்படுத்துவதற்கு ஏற்ற பிறிதொன்றைச் சொல்லுதல் பிறிது மொழிதல் அணி எனப்படும்.

"உண்ணிலவு நீர்மைத்தாய் ஓவாப் பயன்சுரந்து
தண்ணளி தாங்கு மலர்முகத்துக்—கண்ணெகிழ்ந்து
நீங்க அரிய நிழலுடைத்தாய் நின்றெமக்கே
ஓங்கியதோர் சோலை யுளது."

இச்செய்யுள் ஒரு வள்ளலுக்கும் ஒரு சோலைக்கும் பொருந்தும்படி அடையைப் பொதுவாக்கிப் பொருள் வேறுபட மொழியப்பட்டுள்ளது.

(1) மனத்தில் நல்ல குணமுடையதாய், பலர்க்கும் உதவி செய்து அருளுடையதாகி விரிந்த முகத்தையும் கண்ணோட்டத்தையும் உடையதாய்ப் பிரிதற்கரிய சாயலோடு கூடி நிற்பது என ஒரு வள்ளல்மீது ஏற்றிப் பொருள் உரைக்கலாம்.

(2) உள் பொருந்திய நீரையுடையதாய், மாறாது பல வளங்களைக் கொடுத்து, வண்டுகளைத் தாங்கிய குளிர்ந்த மலர்களை யுடையதாய், மதுச் சேர்ந்து நிழல் உடையதாய் ஓங்கி நிற்பது என ஒரு சோலைக்குப் பொருந்தவும் பொருள் கூறலாம்.

இதில் பிறிது மொழிதல் அணி அமைந்துள்ளமை காண்க. இஃது ஒட்டணி என்றும் பெயர் பெறும்.

## 8. தற்குறிப்பேற்ற அணி

"திரௌபதியை மணக்கச் சென்ற பாண்டவர் காட்டு வழியே போனபோது, 'திரௌபதியின் திருமணத்திற்கு அரசர் எல்லோரும் வந்துவிட்டனர். நீங்கள் விரைந்து வாருங்கள்,' என்று சொல்வன போலக் குயில்கள் கூவின."



காட்டில் குயில் கூவுதல் இயற்கை. அந்த இயற்கை நிகழ்ச்சியில், புலவன் தன் குறிப்பை ஏற்றிக் கூறியிருத்தல் காண்க. இங்ஙனம் கூறுதல் தற்குறிப்பேற்ற அணியாகும்.

"மண்படுதோட் கிள்ளி மதயானை மாற்றரசர்
வெண்குடையைத் தேய்த்த வெகுளியால்—விண்படர்ந்து
பாயுங்கொல் என்று பனிமதியம் போல்வதூஉந்
தேயுந் தெளிவிசும்பி னின்று."

சந்திரன் தேய்தல் அதன்கண் இயல்பாக நிகழும் தன்மையாகும். கவிஞன் இதனை ஒழித்து, சோழனது மதயானை பகையரசர் குடையைச் சிதைத்த சீற்றத்தினைக் கண்டு, தன்மீதும் பாயுமோ என்று அஞ்சித் தேயும் என்று கூறியது தற்குறிப்பேற்ற அணி.

## 9. சுவையணி

வீரம், அச்சம், இழிப்பு (இளிவரல்), வியப்பு, காமம், அவலம், உருத்திரம், நகை* என்று சுவை எட்டு வகைப்படும். இவற்றைத் தொல்காப்பியர் முறையே பெருமிதம், அச்சம், இளிவரல், மருட்கை, உவகை, அழுகை, வெகுளி, நகை என்பர்.

இவற்றுள் ஒவ்வொன்றும் அமைந்து வரும் செய்யுள் சுவையணி அமைந்த செய்யுள் என்று சொல்லப்படும்.

### (1) வீரச்சுவை

"சேர்ந்த புறவின் நிறைதன் திருமேனி
ஈர்ந்திட்(டு) உயர்துலைதான் ஏறினன்—நேர்ந்த
கொடைவீர மோமெய்ந் நிறைகுறையா வன்கட்
படைவீர மோசென்னி பண்பு."

இச்செய்யுளில் சிபி என்னும் சோழனது கொடை வீரம் பாராட்டப்பட்டமை காண்க. வீரம்—கல்வி, தறுகண், புகழ், கொடை என்னும் நான்கும்பற்றிப் பிறக்கும் என்று தொல்காப்பியர் கூறுவர்.

*இவை தண்டியலங்கார ஆசிரியர் தரும் பெயர்கள்.

## (2) அச்சச் சுவை

" கைநெரிந்து வெய்துயிர்ப்பக் கால்தளர்ந்து மெய்பனிப்ப
மையரிக்க ணீர்ததும்ப வாய்புலர்ந்தேன்—வெய்ய
சினவேல் விடலையால் கையிழந்த செங்கட்
புனவேழம் மேல்வந்த போது."

இங்கு யானையைக் கண்ட அச்சம் காரணமாகச் சுவை தோன்றியவாறு காண்க. இச்சுவை **அணங்கு, விலங்கு, கள்வர், இறை** என்னும் நான்கும் பற்றிப் பிறக்கும் என்று தொல்காப்பியர் கூறுவர்.

## (3) இழிப்புச் சுவை

இழிப்பு—அருவருப்பு. தொல்காப்பியர் இதனை **இளிவரல்** என்பர். **மூப்பு, பிணி, வருத்தம், மென்மை** என்னும் நான்கும் காரணமாக இச்சுவை பிறக்கும் என்பர்.

" உடைதலையும் மூளையும் ஊன்றடியும் என்புங்
குடருங் கொழுங்குருதி யீர்ப்ப—மிடைபேய்
பெருநடஞ்சேர் பெற்றித்தே கொற்றப்போர்க் கிள்ளி
கருநடரைச் சீறுங் களம்."

இச்செய்யுளில் உடைந்த 'தலை' 'மூளை' முதலியவைகளால் இழிப்புச் சுவை தோன்றுவதை அறிக.

## (4) வியப்புச் சுவை

இது **புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம்** என்னும் நான்கும் காரணமாகப் பிறக்கும் என்று தொல்காப்பியர் கூறுவர்.

" முத்தரும்பிச் செம்பொன் முறிததைந்து பைந்துகிரின்
தொத்தலர்ந்து பல்கலனுஞ் சூழ்ந்தொளிருங்—கொத்தினதாம்
பொன்னேர் மணிகொழிக்கும் பூங்கா விரிநாடன்
தன்னேர் பொழியுந் தரு."

இச்செய்யுளில் 'தருவின்கண் 'முத்தரும்புதல்' முதலியவற்றால் வியப்புச் சுவை தோன்றுதல் காண்க.



## (5) காமச் சுவை

தொல்காப்பியர் இதனை உவகைச்சுவை என்பர்; இது **செல்வம், அறிவு, புணர்ச்சி, விளையாட்டு** என்னும் நான்கும் காரணமாகத் தோன்றும் என்பர்.

" இகலிலர் எஃகுடையார் தம்முட் குழீஇ
நகலின் இனிதாயிற் காண்பாம்."—நாலடியார்

இங்கு அறிவு பொருளாக உவகை பிறந்தமை காண்க.

## (6) அவலச் சுவை

தனக்குப் பற்றுள்ள ஒன்றினைப் பிரிதலால் அல்லது பற்றில்லாத ஒன்றினை அடைதலால் தோன்றும் மனவருத்தம் **அவலம்** எனப்படும். தொல்காப்பியர் இதனை **அழுகை** என்பர்; **இளிவு, இழவு, அசைவு, வறுமை** என்னும் நான்கும்பற்றி இச்சுவை தோன்றும் என்பர்.

" கழல்சேர்ந்த தாள்விடலை காதலிமெய் தீண்டும்
அழல்சேர்ந்து தன்னெஞ் சயர்ந்தான்—குழல்சேர்ந்த
தாமந் தரியா தசையுந் தளிர்மேனி
ஈமந் தரிக்குமோ என்று."

இங்கு, மனைவியை இழந்த அவலத்தினால் சுவை தோன்றியவாறு காண்க.

## (7) உருத்திரச் சுவை

தனக்கு நன்மை தராத செயலினால் உண்டாகும் மனக்கொதிப்பு உருத்திரம் எனப்படும். இதனைத் தொல்காப்பியர் வெகுளி என்பர்; இஃது உறுப்பறை (உறுப்புச் சேதம்), **குடிகோள்**, அலை, கொலை என்னும் நான்கும்பற்றிப் பிறக்கும் என்பர்.

" கைபிசையா வாய்மடியாக் கண்சிவவா வெய்துயிரா
மெய்குலையா வேரா வெகுண்டெழுந்தான்—வெய்யபோர்த்
தார்வேய்ந்த தோளான் மகளைத் தருகென்று
போர்வேந்தன் தூதிசைத்த போது."

இங்கு, 'மகளைத் தருக' என்று கேட்டலாகிய செயலால் வெகுளிச்சுவை தோன்றியவாறு காண்க.

## (8) நகைச் சுவை

நகை—வேறுபாடான வடிவம், வேடம், சொல் முதலிய வைகளைக் காணும் பொழுதும் கேட்கும் பொழுதும் உண்டா கும் சிரிப்பு. இஃது எள்ளுதல், இளமை, பேதைமை, மடம் என்னும் நான்கும் பற்றித் தோன்றும் என்று தொல்காப்பியர் கூறுவர்.

" நகையா கின்றே தோழி
மம்மர் நெஞ்சினன் தொழுதுநின் றதுவே."

இதில் பிறன் பேதைமையால் நகைச்சுவை தோன்றுதலை அறிக.

## 10. சிலேடையணி

சிலேடை—தழுவுதல் உடையது; பல பொருள்கள் இணைந்து நிற்பது. உச்சரித்தற்கண் ஒரு வடிவாக நின்ற சொற்றொடர், பல பொருள் உடையதாக வருவது சிலேடை ஆகும். இது செம்மொழிச் சிலேடை, பிரிமொழிச் சிலேடை என இரு வகைப்படும்.

1. செம்மொழிச் சிலேடை: பிரிக்கப்படுதல் இல்லாதன வாய் நேரே நின்று பல பொருள் உணர்த்தும் சொற்களால் ஆய தொடர் செம்மொழிச் சிலேடை எனப்படும்.

" செங்கரங்க ளானிரவு நீக்குந் திறம்புரிந்து
பங்கய மாதர் நலம்பயிலப்—பொங்குதயத்
தோராழி வெய்யோன் உயர்ந்த நெறியொழுகும்
நீராழி நீணிலத்து மேல்."

இது சூரியனுக்கும் சோழனுக்கும் சிலேடை. இங்கே 'கரம்' 'இரவு' முதலிய சொற்கள் நேரே நின்று இரு பொருள் தந்தமை காண்க.

2. பிரிமொழிச் சிலேடை: பிரிக்கப்பட்டுப் பல பொருள் தரும் சொற்களாலாகிய தொடர் பிரிமொழிச் சிலேடை எனப் படும்.

" புண்ணியமெய்ப் பண்ணவரும் பொன்னனையார் பூங்குழலும்
கண்ணிவா சஞ்செய் கலைசையே—எண்ணியொரு



மன்னாக மத்தினான் வாரிகடைந் தோர்க்கிரங்கும்
மன்னாக மத்தினான் வாழ்வு."

இதில் வந்துள்ள சில தொடர்களைக் கீழ்வருமாறு பிரித் துப் பொருள் காணவேண்டும்:

(1) கண்ணி வாசம் = கண்ணி + வாசம்—மதித்து வாழ்தல்.
= கள் + நிவாசம்—தேன் பொருந்தி யிருத்தல்

(2) மன்னாக மத்தினான் = மன் + நாகம் + மத்தினான்—வலிய மந்தரமலை என்னும் மத்தினால்;
மன் + ஆகமத்தினான் — நிலைபெற்ற ஆகம நூல்களைத் தந்தருளிய சிவன்.

## 11. உள்ளுறை உவமை

உள்ளுறை—உட்கருத்து. உவமையோடு உவமிக்கப் படும் பொருள் வெளிப்படையாகக் கூறாது, கருத்தினால் இன்ன பொருளுக்கு இஃது உவமம் ஆயிற்று என்பதை நுட்பமாக உணர்த்துவது உள்ளுறை உவமம் எனப்படும். இஃது அகப்பொருட் செய்யுட்களில் மிகுதியாகப் பயின்று வரும்.

" கரும்புநடு பாத்திக் கலித்த தாமரை
சுரும்புபசி களையும் பெரும்புனல் ஊர!
புதல்வன் ஈன்றஎம் முயங்கல்
அதுவே தெய்யநின் மார்புசிதைப் பதுவே."

'தாமரையை விளைப்பதற்கு அன்றிக் கரும்பு நடுதற்குச் செய்த பாத்தியுள் தானே விளைந்த தாமரை வண்டின் பசி தீர்க்கும் ,ஊரனே' என்பது, முதல் இரண்டு அடிகளின் பொருள். இவ்வாறு தன் தலைவனை நோக்கிக் கூறிய தலைவி யின் கருத்து யாது? பாத்தி, கரும்பு நடுதற்கென்றே அமைக் கப்பட்டது. ஆயின், அதில் தாமரை தானாக விளையலாயிற்று. அது வண்டினை வயலுக்கு அழைத்து அதன் பசியைத் தீர்க் கின்றது. அதுபோலக் காதற் பரத்தையர்க்கும் இற்பரத்தை யர்க்கும் என்று அமைக்கப்பட்டுள்ள கோயிலுள் யாமும்

இருந்து இல்லறம் பூண்டு விருந்து ஓம்புகின்றேம் என்பது கருத்து.

இங்கு, ‘கரும்புநடு பாத்திக் கலித்த தாமரை, சுரும்பு பசிகளையும்’ என்னும் அடிகளில் உள்ளுறுத்த பொருளே, உவமையும் பொருளுமாக வைத்து வெளிப்படையாகக் கூருமல், குறிப்பாகப் புலப்படுத்தமை காண்க. இவ்வாறு கூறுவதே உள்ளுறை உவமம் என அறிக.

## 12. இறைச்சிப் பொருள்

இறைச்சிப் பொருள்—கருப்பொருளின் உள்ளே கொள்ளும் பொருள், *கூறவேண்டுவதோர் பொருளின் புறத்தே புலப்பட்டு, அதற்கு உபகாரப்படும் பொருள் தன்மையுடையது இறைச்சி என்று சொல்லப்படும்.

“ இலங்கும் அருவித்து இலங்கும் அருவித்து
வானின் இலங்கும் அருவித்தே தானுற்ற
சூள்பேணுன் பொய்த்தான் மலை.”

இங்குச் ‘சூள் பொய்த்தான்’ என்பதே கூறவேண்டும் பொருள். அதன் புறத்தே, இங்ஙனம் பொய்த்தான் மலையில் நீர் திகழ்கின்றது என இறைச்சிப் பொருள் தோன்றியவாறு காண்க.

### பயிற்சி

1. அணி என்பது யாது?
2. “ நீல மணிமிடற்றன் நீண்ட சடைமுடியன்
நூலணிந்த மார்பன் நுதல்விழியன்—தோலுடையன்
கைம்மான் மறியன் கனல்மழுவன் கச்சாலை
எம்மான் இமையோர்க் கிறை.”

இதில் தன்மையணி அமைந்துள்ளமையை விளக்குக.

* Suggestive meaning conveyed indirectly by reference to the distinctive features of the tract of land.



3. “ களிக்கும் கயல்போலும் நின்கணின் கண்போற்
களிக்கும் கயலும் கனிவாய்த்—தளிர்க்கொடியே
தாமரை போல்மலரும் நின்முகம் நின்முகம்போல்
தாமரையும் செவ்வி தரும்.”

இச்செய்யுளில் அமைந்துள்ள உவமையணியைச் சுட்டுக.

4. “ அங்கை மலரும் அடித்தளிரும் கண்வண்டும் ”

இதில் அமைந்துள்ள உருவகத்தை உணர்த்துக.

5. “ அவிழ்ந்தன தோன்றி அலர்ந்தன காயா
நெகிழ்ந்தன நேர்முகை முல்லை—மகிழ்ந்துடன்
விண்டன கொன்றை விரிந்த கருவிளை
கொண்டனசெங் காந்தட் குலை.”

இதன்கண் அமைந்துள்ள பொருட் பின்வரு நிலையணியை விளக்குக.

6. வேற்றுமையணி, வேற்றுப் பொருள் வைப்பணி—இவற்றை விளக்கி உதாரணம் தருக.

7. பிறிது மொழிதல் அணியைச் சான்று கொண்டு விளக்குக.

8. “ வேனில் வெயிற்குலர்ந்த மெய்வறுமை கண்டிரங்கி
வானின் வளஞ்சுரந்த வண்புயற்குத்—தானுடைய
தாதுமே தக்க மதுவுந் தடஞ்சினையாற்
போதுமீ தேந்தும் பொழில்.”

இதன்கண் தற்குறிப்பேற்றம் அமைந்துள்ளமையை விளக்குக.

9. எண்வகைச் சுவைகள் எவை? எவையேனும் ஒன்றை விளக்கி உதாரணம் தருக.

10. எண்வகைச் சுவைகளுக்கும் தொல்காப்பியர் தரும் பெயர்கள் யாவை?

11. தொல்காப்பியர் ஒவ்வொரு சுவையும் எவை காரணமாகப் பிறக்கும் என்பர்?

12. சிலேடை என்பதன் பொருள் யாது?

13. செம்மொழிச் சிலேடை, பிரிமொழிச் சிலேடை—இவற்றை விளக்குக.

14. "சேலார் செழுந்தடத்தில் செந்தா மரையினில்தேன்
காலாறு பாயும் கலைசையே—சூலேறு
பாணியார் வேணியார் பாகீ ரதியென்னும்
பாணியார் வேணியார் பற்று."

இவ்வெண்பாவில் எவ்வகைச் சிலேடை அமைந்துள்ளது? விளக்குக.

15. உள்ளுறை உவமம், இறைச்சிப் பொருள்—இவற்றை விளக்கி உதாரணம் தருக.

குறிப்பு :—உங்கள் செய்யுட் பாடப் பகுதியில் இவ்வணிகள் வந்துள்ளனவா என்பதைக் கண்டறிக.

---

# TAMIL GRAMMAR

[FOR THREE-YEAR DEGREE COURSE]

BY
Dr. M. RAJAMANIKKANAR

THE NATIONAL PUBLISHING CO.
6, Kondi Chetty Street, Madras-1

*Copyright*] 1967 [*Price Re.* 1·50